REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்



## போராளிகளுடன் பிரபாகரன்

## தளபதிகளுடன்....



**ஜே.வி.பி.யின் தடுமாற்றம்!**

**அரசுக் கட்சியின் வசதிக் கல்யாணம்**

**பரு'துறை கடல் தற்கொலையாளி இலக்கு எது?**

**இந்திய அரசின் இராணுவ உதவிக்கு கதவு திறந்தது!**

மிக விரைவில் சுடர் ஒளி நாளிதழ் வருகிறது

# பருத்தித்துறை கடலில் பலியான தற்கொலையாளியின் இலக்கு எது?

பருத்தித்துறைக் கடற்பகுதியில் கடந்த முதலாம் திகதி காலை கட்டுமரம் ஒன்றில் வந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர், குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்திருக்கிறார்.

தற்கொலைப் போராளியான இவர் கடலில் கடற்படையினரால் சுற்றிவளைக் கப்பட்ட நிலையில் படையினரின் பிடி யில் சிக்காமல் குண்டை வெடிக்க வைத் துத் தற்கொலை செய்துகொண்டார் என்று படைத்தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் கடற்படையின் நீரூந்து விசைப்படகு ஒன்றின் மீது ஊடுருவித் தாக்குதல் நடத்திய சம்பவத்திலேயே பிரஸ் தாப போராளி கடலில் களப்பலியானார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

மேஜர் குமாரவேல் அல்லது மதி (கிருஷ்ணபிள்ளை சிவகுமார்) என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த போராளியே களப்பலியானார் என்றும் அவர் நடத்திய தாக்குதலில் கடற்படைப் படகு சேதமடைந் ததுடன் கடற்படையினர் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மத்தியில் கட்டுமரத்துடன் காணப்பட்ட சந்தேகத் துக்கிடமான நபரை அந்த மீனவருடன் சேர்த்துக் கரைக்கு அழைத்துவந்த சமயம் — கரையை நெருங்கியவேளை — அவர் குண்டை வெடிக்கவைத்து உயிரிழந்தார் என படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து கரைக்கு அழைத்து வரப்பட்ட மீனவர்கள் அனை வரும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப் பட்ட பின் கட்டம் கட்டமாக விடுவிக்கப் பட்டனர். மேலும் ஐவர் தொடர்ந்து தடுத்துவைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பலாலியில் உள்ள யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் வடமராட்சி மீனவர்களுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில், தமது கட்டளையை மீறி கடலில் 14 கட்டுமரங்களில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களின் மத்தியிலேயே புலிகள் இயக்க உறுப்பினரும் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகள் மீனவர்கள் போன்று நடமாடி குடாநாட்டைக் கைப்பற்ற பாரிய தாக்குதல் நடத்த முயல்வதாகவும் புலிகளின் நடவடிக்கைகளுக்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்றும் மீனவர்களைப் படையினர் எச்சரித்திருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் விட குண்டை வெடிக்கவைத்துத் தற்கொலை புரிந்துகொண்ட போராளியின் இலக்கு எது என்பது படையினருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வடமராட்சிக் கடற்பகுதியில் மீனவர்களோடு மீனவர்களாக புலிகளும் ஊடுருவி நடமாடி வருகின்றனர் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத் ததை அடுத்து அண்மைக் காலங்களில் அங்கு தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.




முல்லைத்தீவில் உள்ள புலிகளின் கடற் தளங்களில் இருந்து மீனவர்கள் வேடத்தில் சாதாரண படகுகளிலும் கட்டுமரங்களிலும் வரும் புலிகள் வடக்கு கடற்பரப்பில் நடமாடி பெரியதொரு தாக்குதலுக்கு தயாராகி வருகின் றனர் என்று புலனாய்வுத்துறையினர் எச்சரித்ததை அடுத்து கடலில் கடற்படையினர் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற சம்ப வத்தில் பலியான புலி உறுப்பினர் செலுத்தி வந்த கட்டுமரத்தில் வெளி இணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகப் படை வட்டாரங்கள் கூறுகின்றன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் புலனாய்வுத் துறையினர் அந்தத் தற்கொலைப் போராளியின் தாக்குதல் இலக்கு கடற்படையினர் அல்ல என்று சந்தேகிக்கின்றனர்.

வடக்கே பலாலி தளத்துக்குச் செல்லும் விமானங்களை கடலில் இருந்து தாக்கும் நோக்கத்துடன் விமான எதிர்ப்பு ஏவுகணை களை கடலுக்குக் கொண்டுவரும் திட்டம் எதுவும் இருந்ததா என்றும் கடற்படை வட்டா ரங்கள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றன.

குண்டை எடுத்து வந்தவர் விமான எதிர்ப்பு ஏவுகணையுடன் கட்டுமரத்தில் தயாராக இருந்தாரா?

இந்தச் சந்தேகத்தை அடுத்து கடற்படைச் சுழியோடிகள் கடலில் குறிப்பிட்ட இடத்தில் தேடுதல் நடத்தி உள்ளனர்.

நீருக்கு அடியில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் அல்லது அந்தரங்க ஆயுதங்கள் ஏதாவது மூழ்கி இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய முயன்றனர்.

இதைவிட —

மீனவர்களோடு மீனவர்களாகக் கரைக்கு ஊடுருவி மனித குண்டாகச் செயற்பட்டு முக்கிய பிரமுகர்கள் எவரையாவது கொல்லும் நோக் குடன் அவர் வந்திருக்க லாம் என்பது புலனாய் வாளர்களுக்கு உள்ள சந்தேகம்.

குடாநாட்டில் படையினர் கடல் வழியாக எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது.

வடமராட்சிக் கடலில் தொழிலில் ஈடுபடும் கட்டுமரங்களுக்கு அவற்றை இலகுவில் அடையாளம் காணும் வகையில் இலக்கங்கள் பொறிக்கும் வேலை தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

பொலிகண்டி மேற்குத் தொடக்கம் தும்பளை கிழக்கு வரையான கடலில் தொழிலில் ஈடுபடும் கட்டுமரங்களில் அந்தந்தப் பிரதேச படை முகாம்களின் பெயரும் இலக்கங்களும் பெரிய எழுத்தில் பொறிக்கப்படவுள்ளன.

ஆனால் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதிக் கடலில் மீனவர்கள் தொழிலில் ஈடுபட இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

***

மொட்டைக் கடிதங்களை எழுதுதல் புலிகளுடன் தொடர்புபடுத்தி காட்டிக் கொடுத்தல் புலிகளின் பெயரில் மிரட்டல் என்று புதிய புதிய பாணியில் சமூக விரோதச் செயல்கள் பெருகி வருவது குறித்து இப்பத்தியில் முன்னரும் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த வகையில் மற்றொரு தகவல் இது.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் குடா நாட்டில் உள்ள தனது உறவினரான பெண் ஒருவர் பற்றி கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்குத் தவறான தகவல்களை வழங்கி இருப்பது தெரியவந்துள்ளது.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை வெளிநாட்டுக்கு அழைத்துத் திருமணம் செய்ய அவர் விரும்பியுள்ளார். இதற்காக தனது உறவு முறைப் பெண்ணான அந்த யுவதியை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வற்புறுத்தி வந்துள்ளார்.

ஆனால் அந்த யுவதி அதற்கு ஒரேயடியாக மறுப்புத் தெரிவிக்கவே ஆத்திரமுற்ற அந்த நபர் அந்த யுவதி விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர் என்று பயங்கர வாதத் தடுப்புப் பிரிவுக்குப் பொய்யான தகவலை வழங்கியிருக்கிறார். இதனையடுத்து பிரஸ்தாப யுவதி பருத்தித்துறையில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நான்கு நாள்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தகவல்.

தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தி வெளிநாட்டில் இருந்து பிரஸ்தாப நபர் அந்த யுவதிக்கு அனுப்பிய பல கடிதங்களில் காணப்பட்ட கையெழுத்தும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அவர் செய்த முறைப்பாட்டுப் பிரதியில் காணப்பட்ட கையெழுத்தும் ஒரே மாதரி இருப்பது நிரூபிக்கப்பட்டது.

இதனை அடுத்து அந்த யுவதி பற்றி அவர் வழங்கிய தகவல் முற்றிலும் பொய் யானது என்பது புலனாய்வாளர்களுக்குத் தெரியவந்ததாம்.

— வலிகாமத்தான்

# சட்ட நடவடிக்கைகளிலும் தமிழினத்துக்கு பாரபட்சம்

## புட்டுக்காட்டுகிறார் மனோகணேசன்

சட்ட நடவடிக்கைகளிலும் கூடத் தமிழினத்துக்குப் பார பட்சம் காட்டப்படுகிறது என்று புட்டுக் காட்டி அரசைச் சாடினார் மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன்.

சபையில் உறுப்பினர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கொண்டு வந்த ஒரு பிரேரணை மீதான விவாதத்தில் மனோ கணேசன் பேசினார்.

விசாரணையோ, குற்றச்சாட்டோ இன்றி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்னவின் பிரேரணை கோருகின்றது.

பிரேரணை மீதான விவாதம் சபைத் தலைவர் ஜகத் அங்கசுே தலைமையில் நடைபெற்றது. பிரேரணையை ஆதரித்து உறுப்பினர் மனோகணேசன் உரையாற்றினார்.

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு களுக்கு உட்பட்ட படை வீரர்கள் பிணையில் விடுதலை செய்யப்படும் போது குற்றப் பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படாமலேயே தமிழ் இளைஞர்கள் சிறைகளில் வாடுகிறார்கள் என அவர் கவலை தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:—

தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவு வழக்கில் அடையாளம் காணப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்ட படை வீரர்கள், நீதிமன்றங்களினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் பூரண ஒத்துழைப்பு வழங்கி யுள்ளது.

அதே வேளையில் நூற்றுக்கணக் கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் களுத்துறை, வெலிக்கடை, போகம்பறை, நீர்கொழும்பு சிறைகளிலும் பல முகாம் களிலும், பொலிஸ் நிலைய சிறைக் கூடங் களிலும் பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மாவனல்லையில் அப்பாவி முஸ்லிம் மக்களின் வீடுகளுக் கும், கடைகளுக்கும் தீயிட்டு கொள்ளையிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஆனால் இந்த வன்செயல்களுக்கு தமது சாத்வீக எதிர்ப்பை கொழும்பு மருதானை யில் எடுத்துக் காட்டிய முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவை இந்நாட்டிலே அமுலிலுள்ள சட்டரீதியான பாரபட்சங்களை எடுத்துக் காட்டுகின்றன.

அப்பாவித் தமிழ் இளைஞர்கள் இன்று சிறைக்கூடங்களில் வாடுகின்றார்கள். இவர்களது இன்றைய கோரிக்கை விடுதலை செய் என்பதைவிட விசாரணை செய் என்பதாகவே இருக்கின்றது. ஏனெனில் பல்லாண்டுகளாக சிறை வைக்கப்பட்டி ருக்கும் இந்த இளைஞர்களின் மீது இதுவரை முறையாக குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவில்லை. பல்வேறு நொண்டிச் சாட்டுகள் காரணமாக வழக்குகள் இழுத்தடிக் கப்படுகின்றன. சிறைக்கூடங்களினுள்ளே மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படு கின்றன. இந்த இரட்டை வேடத்தை அம்பலப் படுத்த நாம் இன்று முயன்று வருகின்றோம்.

சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் வைக்கப்பட்டிருப்பவர்கள் தமிழர்களாக இருந்தாலென்ன, முஸ்லிம்களாக இருந்தாலென்ன அல்லது விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிங்கள இராணுவ வீரர்களாக இருந்தா லென்ன அனைவர் மீதும் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

காணாமல் போன படை வீரர்களின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார எனது நண்பர். இவரது சங்கத்துடன் இணைந்து நாம் பல போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கொழும்பிலே நடத்தியுள்ளோம்.

இந்த படை வீரர்களின் பெற்றோர் சங்கத்திற்கு நமது கட்சி பல ஒத்தாசைகளை புரிந்துள்ளது. நாணயக்காரவின் முயற்சியினாலேயே விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்து முகமாக பல சிங்கள இராணுவ கைதிகளை சமீப காலமாக விடுதலை செய்து வருகின்றனர். ஆனால் தமிழ் இளைஞர்களின் நிலைமைகளில் மட்டும் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

தமிழ் இளைஞர்களின் இந்த பிரச்சினை பற்றிய பிரேரணையை இச்சபையில் கொண்டு வந்தமைக்காக நண்பர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்னவுக்கு தமிழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே வேளையிலே இன்று இந்த சபையிலே இந்தப் பிரேரணையை ஆமோதித்து பேசிய மக்கள் விடுதலை முன்னணியினரைப்பற்றி நான் சொல்லியேயாக வேண்டும்.

இந்த தமிழ் இளைஞர்களின் கைதுகள் பாதுகாப்புக் காரணம் காட்டியே நடைபெறுகின்றன. பாதுகாப்புப் பிரச்சினைக்கான அடிப்படை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாரிய யுத்தமாகும். யுத்தம் நடைபெறு வதற்குக் காரணம் நாம் அனைவரும் முகங்கொடுக்கும் தீர்க்கப்படாத இனப் பிரச்சினையாகும். இனப்பிரச்சினை ஒன்று தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது இந்நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் கொழும்பிலே குவித்து வைக்கப்பட்டிருப்பது தான். இதை நம்மில் பலரும், சர்வதேச சமூகமும் புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டுள்ளோம்.

ஆனால் இங்கே தமிழ் இளைஞர் களின் கைது பற்றிப் பேசும் மக்கள் விடு தலை முன் னணி என்ன சொல்கின்றது? இந்நாட்டின் அதிகாரங்கள் பிரிக்கப்படு வதை எதிர்த்து நிற்கும் ஒரு பிரதான கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும்.

எனவே அதிகாரங் களைப் பகிர்ந்து இனப்பிரச்சினையைத் தீர்த்து, தமிழ் இளைஞர்கள் அடாவடியாக கைது செய்யப்படுவதைத் தடுக்க முடியாத மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த யோசனையை ஆமோதித்து பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது என கேட்கின்றேன்.

இப்படி மனோ கணேசன் கூறினார்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தமது பிரேரணையை முன்மொழிந்து பேசுகையில் கூறியதாவது:—

வெலிக்கடை மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் மிகவும் மோசமான முறை யில் நடத்தப்படுகின்றனர். அவ்வப்போது சிறைக் காவலர்களாலும் பெரும்பான்மை இனக் கைதிகளாலும் அவர்கள் தாக்கப்படு கின்றனர். அவர்க ளுக்கு எதிராக ஒன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது காலம் கடத்தாமல் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். இதற்கு நாம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கலாநிதி விக்கிரமபாகு தனது உரையில் கூறினார்.

# புலிகளின் ஆயுதக் குவிப்பில் பொதுமக்கள் பேருதவி

## கிழக்கில் பலத்த ஆயத்தங்கள்; படையினரும் உஷார் நிலையில்

தெற்கில் தனது ஆட்சியைத் தக்க வைக்க சந்திரிகா அரசு மக்கள் விடுதலை முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி குறைந்த பட்சம் அடுத்த ஓராண்டு காலத்துக்கு பதவியில் இருக்கப் போவது இப்போதைக்கு உறுதியாகி விட்டது.

பத்து ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ள ஜே.வி.பி 109 ஆசனங்களைக் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்து அதனை சரிய விடாது தற்காலிகமாக முட்டுக் கொடுத்துள்ளது.

ஜே.வி.பியின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்று புலிகளுடன் அடுத்த ஒரு வருடத்துக்கு சமாதானம் பேசக் கூடாது என்பதே. அத்துடன் நோர்வேயை மட்டுமல்ல எந்தவொரு மூன்றாம் சக்தியையும் அனுசரணை செய்ய அனுமதிக்கப் போவதில்லை எனவும் ஜே.வி.பி கூறுரைத்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி அரசு தொலைக் காட்சி சேவைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் சமாதானம் பேசுவதை எந்த வகையிலும் பாதிக்காது என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அத்துடன் அரசு — ஜே.வி.பி ஒப்பந்தத்தில் இது சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் கருத்து வெளியாகி 48 மணித்தியாலங்களில் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச அதனை மறுத்து உரைத்திருக்கிறார்.

பொரளையில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் ஜனாதிபதியும், அமைச்சர்களும் கூறுவதற்கெல்லாம் தமது கட்சி பொறுப்பல்ல என்று தெரிவித்துள்ளார். புலிகளுடன் சமாதானம் பேச அடுத்த ஓராண்டு காலத்துக்கு ஜே.வி.பி அனுமதிக்காது என்றும் ஆணித்தரமாக அவர் கூறியிருக்கிறார்.




இதைவிட கடந்த மாத இறுதியில் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறிய கருத்துக்களுக்கு காட்ட சாட்டமாக பதிலளித்திருந்தார் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

நாடாளுமன்றில் பெரும்பான்மையை இழந்து ஸ்திரமற்ற நிலையிலுள்ள சிறுபான்மை அரசுடன் சமாதானம் பேச புலிகள் இப்போதைக்குத் தயாராக இல்லை என்று அன்ரன் பாலசிங்கம் இடித்துரைத்திருக்கிறார்.

இவையெல்லாம் எதனை உணர்த்துகின்றன? குறைந்த பட்சம் அடுத்து வரும் மாதங்களுக்கு சமாதானப் பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதையே காட்டுகின்றன. அப்படியாயின் அடுத்த கட்டம் என்ன? போர் தானே?

புலிகளைப் பொறுத்தவரை கடந்த கள நிலைவரத்தில் கூறியது போல கிழக்கில் கடுமையான ஆள்திரட்டல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில் நடத்தப்பட்ட பெரும் தாக்குதல் புலிகளின் ஆள்திரட்டல் நடவடிக்கைக்கு பெரும் சாதகமாக அமைந்துவிட்டது.

கடந்த மாதம் கிழக்கு மாகாணத்தில் புலிகள் இடைவிடாது பல தாக்குதல்களை படையினருக்கு எதிராக சற்று முடக்கி விட்டிருந்தனர்.

இவற்றில் அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதல், நிலாவெளியில் கடற்படையினரின் வாகனத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் மற்றும் கொக்குத்தொடுவாய், ஜானகபுர இராணுவ நிலைகள் மீதான சமநேரத் தாக்குதல்கள் போன்றவற்றை முக்கியமானவையாகக் கொள்ளலாம்.

அன்று மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் ஒரு ''அழித்தொழிப்பு தாக்குதல்'' என்று இராணுவம் கருதியிருந்தது.

ஆனால் இன்று பிரத்தியேகமாகக் கிடைக்கும் புலனாய்வு அறிக்கைகளின்படி இத்தாக்குதல் ஒரு ''திசை திருப்பும் தாக்குதல்'' என்று கருதப்படுகிறது.

அதாவது மத்திய முகாம் மீதான தாக்குதல் நடந்த மறுநாள் புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் இருந்து சுமார் 250 — 300 வரையான பொதுமக்களை தம்முடன் கூட்டிச் சென்று சுமார் ஒரு வாரத்தின் பின்னர் பாதுகாப்பாக திருப்பி அனுப்பினர்.

பழுகாமம், போரைதீவு, அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை போன்ற பிரதேசங்களில் இருந்தே பெரும்பாலானோர் கூட்டிச் செல்லப்பட்டனர். கடந்த 3ஆம் திகதி இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

புலிகளுடன் இருந்த ஒன்பது நாட்களும் இவர்கள் புலிகளால் ஆயுதங்களை இறக்குவதற்காக பயன்படுத்தப்பட்டனர் என்று இப்போது தெரியவருகிறது.

வாகரை, கதிரவெளி ஆகிய இடங்களில் இரு பாரிய கடற்புலித் தளங்கள் காணப்படுகின்றன.

அங்கு படகுகள் மூலம் பெரும் எண்ணிக்கையான பிளாஸ்டிக் மற்றும் மரப் பெட்டிகளில் பெருமளவான ஆயுதங்களை புலிகள் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள் என்று இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் உறுதி செய்திருக்கிறார்கள்.


கருணா அம்மான்

அங்கு படகுகளில் இருந்து இறக்கப்பட்ட இப் பெட்டிகள் பொதுமக்களின் உதவியுடன் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் ஏ5 கொழும்பு — மட்டுநகர் பிரதான பாதைக்கு இப்புறமாக இரவோடிரவாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. கொழும்பு — மட்டுநகர் ஏ5 பிரதான வழங்கல் பாதை படையினரின் வசம் உள்ள போதும் புலிகள் மிகுந்த துணிச்சலுடன் இதனை இப்புறம் எடுத்து வந்திருக்கிறார்கள்.

சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பொதுமக்கள் வழங்கிய தகவல்களின்படி சுமார் மூன்று தடவைக்கு மேலாக இவர்கள் இப் பிரதான பாதையை கடந்து இப்பெட்டிகளை கால்நடையாக கொண்டு வந்து இப்புறத்தில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரங்களில் ஏற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இவர்கள் பிரதான பாதையை அடையும்போது வீதியின் இருமருங்கிலும் பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் பாரிய ஆயுதங்கள் சகிதம் கடும் காவல் புரிந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் துண்டுப் பிரசுரங்களும் ஒட்டப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் மட்டக்களப்பு மண்ணை மீட்க உதவியளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

புலிகளால் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட பொதுமக்கள் வழங்கிய தகவல்கள் ஊடாக நடந்ததை ஊகித்துக் கொண்ட படைத்தரப்பு இந்த ஆயுதங்கள் புலிகளின் மூத்த தளபதி கருணா அம்மான் தங்கியிருந்து செயற்படும் ''பெய்ரூட்'' தளத்திற்கே எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று தற்பொழுது கருதுகின்றது.

இதனால்தான் என்னவோ, விமானப் படைகளின் குண்டு வீச்சு விமானங்கள் கடந்த வாரம் தொடர்ச்சியாக கிழக்கில் புலிகளின் நிலைகள் என சந்தேகிக்கப்பட்ட நிலைகள் மீது தாக்குதல் நடத்தின.

கருணா அம்மான் கடந்த சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக மட்டக்களப்பு படுவான்கரை மற்றும் கொக்கட்டிச்சோலைப் பகுதிகளில் தங்கியிருந்து நேரடியாகத் தாக்குதல் அணிகளைத் தயார்ப்படுத்தி வருகிறார். அதன் ஒரு பகுதியாகத்தான் புலிகள் தமது ஆயுதங்களையும் பாதுகாப்பாக நகர்த்தியிருக்கிறார்கள்.

கருணா அம்மானுடன் புலிகளின் போர் அனுபவம் மிக்க இரண்டாம் தர தளபதிகளான ரமேஸ், ஜீவன், நாகேஸ், சிவம், ரமணன் (முன்னர் இவர் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளராக இருந்து தற்போது இராணுவ நடவடிக்கைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளார்.) போன்றோரும் கரிகாலன், ஜிம்ஜெலி தாத்தா போன்றோரும் தீவிர தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் புலிகளது தயார்படுத்தல்கள் இராணுவ நிலைமைகளை சற்று சிந்திக்க வைத்துள்ளது. சந்தர்ப்பத்துக்கு இடமளிக்காத வகையில் இராணுவமும் தன்னை பலப்படுத்துவதாக அறியப்படுகிறது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மல்லவராய்ச்சி புதிய யுத்திகளைக் கையாண்டு புலிகளின் முயற்சிகளை முறியடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

* கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான பாதுகாப்புக்கு பொறுப்பாக இருக்கும் விசேட அதிரடிப் படையினர் மேலதிகமாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

புலிகளின் தயார்படுத்தல்களை சீர்குலைக்க இவர்கள் சிறிய மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களில் ஈடுபட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆனாலும் இவற்றையெல்லாம் நன்கேயறிந்த புலிகள் சாகும்வரை நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்து அஹிம்சா வழிநின்று உயிர்நீத்த தியாகி திலீபனின் 12ஆவது ஆண்டு சிரார்த்த தினத்தையொட்டி கிழக்கில் பாரிய தாக்குதல்களில் ஈடுபடக் கூடும் என்றும் ஐயம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தின் புல்மோட்டையில் இருந்து வாகரைக்கு இடைப்பட்ட கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ நிலைக்ள் மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்றும் கூறப்படுகிறது.

கரையோரமாக உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை அகற்றுவதன் மூலம் வன்னிக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையில் தமது வழங்கல்களை தரைப் பாதைகளினூடாகவே மேற்கொள்ள முடியும் என புலிகள் கருதலாம். கடந்த 24ஆம் திகதி புலிகள் கொக்குத்தொடுவாயில் மேற்கொண்ட தாக்குதல் இதன் ஒரு பகுதியாகக் கூட இருக்கலாம்.

எது எப்படியிருப்பினும் புலிகளின் தற்போதைய தயார்படுத்தல்களும் அரசின் மீது ஜே.வி.பி பிரயோகித்திருக்கும் நிர்ப்பந்தமும் அடுத்த சில மாதங்களுக்கு சமாதானக் கதவுகள் ''உத்தியோகப்பற்றற்ற'' முறையில் பூட்டப்படப் போவதையே கட்டியம் கூறுகின்றன.


மட்டக்களப்பில் அலுவலக இடம் தேவை

நகர எல்லைக்குள், வீடு அல்லது அறை தேவை. முற்பணம், வாடகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

LANDMARK ENTERPRISES
36/2, Fredrica Road, Colombo - 06.
Tel.:501409 / 599834

என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

முகாமையாளர் தேவை

எமது மட்டக்களப்பு அலுவலகப் பொறுப்பாளராக பணியாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- மும்மொழிகளிலும் பரிச்சயமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- மட்டக்களப்புப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்

LANDMARK ENTERPRISES
36/2, Fredrica Road, Colombo - 06.
Tel.:501409 / 599834

அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

16 செப்டெம்பர், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## இந்தியாவிலிருந்து இராணுவ உதவி

இலங்கை அரசு கேட்டால் இந்திய அரசு இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கலாம்.

இப்படி ஒரு தீர்மானம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற முக்கியமானதொரு மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து இம்மாநாட்டுக்குச் சென்ற தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் பங்குகொண்டிருக்கிறார்கள். அதுதான் பலருக்கும் ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான இலங்கை இந்திய உறவுகள் என்பதுதான் மாநாட்டின் கருப் பொருள்.

இந்திய சர்வதேச நிலையத்துடன் இணைந்து "சப்தா" என்ற அமைப்பு கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் மாநாட்டை நடத்தியது.

இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்கும்போது இந்த மாநாட்டு முடிவையும் கருத்தில் கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாநாடு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தால் இலங்கை விவகாரங்களில் நல்ல பரிச்சயமும் நேரடி அனுபவங்களுமுடைய இராஜதந்திரிகளும் படை அதிகாரிகளும் இந்தியத் தரப்பில் மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

மாநாட்டின் அமைப்பாளரே இந்திய அமைதி காக்கும் படையின் கிழக்கு மாகாணத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா ஆவர்.

இலங்கையில் இருந்து மாநாட்டுக்குச் சென்றவர்களில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களோடு முன்னாள் படைத்தளபதிகளும் அடங்குகிறார்கள்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் இன்றைய கொள்கை யுத்தத்தால் அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது என்பதாகும்.

அதனால் தான் முன்னர் ஆனையிறவைப் புலிகள் கைப்பற்றிய கையோடு யாழ்ப்பாணத்தையும் முற்றுகையிட்ட போது அரச படையினர் பல்லாயிரக்கணக்கானோர் ஆபத்தான நிலையை எதிர்நோக்கவே இலங்கை அரசு இந்தியா விடம் இராணுவ உதவிகோரியும் அதைக் கொடுக்க இந்தியா மறுத்து விட்டது. மனிதா பிமான உதவியை மட்டும் செய்யவே இந்தியா முன் வந்தது.

பின்னர் ஒரு கட்டத்தில் இலங்கைக்கு இந்தியா கடல் ரோந்து நடவடிக்கைகளுக்குக் கப்பல் ஒன்றை விற்றது. அந்தக் கப்பல் இயங்க மறுத்து இடக்குப் பண்ணியது. அப்படிப்பட்ட கப்பலைத் தான் இந்தியா கொடுத்தது. அது வேறுகதை.

இலங்கையிலிருந்து சென்று மாநாட்டில் கலந்து கொண்ட படைத்தரப்பினர் யுத்தம் தொடர வேண்டும்; புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

ஆயினும் இந்தியத் தரப்பில் கலந்து கொண்டவர்களும் இலங்கைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

குறிப்பாக இலங்கைத் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள், இலங்கையின் இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இந் தியா ஏனோ தானோ என்று இருக்காமல் அர்ப் பணிப்புச் சிந்தையுடன் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

அதே வேளை இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி வழங்க வேண்டும் என்ற மாநாட்டின் நடவடிக்கைக் குழுத் தீர்மானத் துக்கும் ஒப்புதல் கொடுத்து விட்டனர்.

எதிர் காலத்தில் மாறுபட்ட சூழ்நிலையில் இந்திய அரசிடம் இலங்கை அரசு இராணுவ உதவி கேட்டால், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்திலான தீர்வுத் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னரே இந்திய அரசு இராணுவ உதவியை வழங்கவேண்டும் என்பது தான் தீர்மானத்தின் சாரம்.

நல்ல தீர்வுத் திட்டம் கிடைத்து அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால் பின்னர் போருக்கு இடமேது? இந்திய இராணுவ உதவி எதற்கு?

தீர்வுத் திட்டத்தை நல்லது என்று மக்கள் ஏற்றாலும் புலிகள் தாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் தொடர்ந்து போராடு வார்கள்; அப் போது இந்திய இராணுவ உதவி தேவைப்படலாம் என்று வாதாடுபவர்கள் விஷயம் அறியாதவர்கள்.

தமிழ் மக்களுக்காகவே தாம் போராடுவதாகக் கூறும் புலிகள் இந்த விஷயத்தில் பிழை விட்டால் தமிழ் மக்களே அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள். இந்திய இராணுவ உதவி என்ன, வேறு எந்த நாட்டு இராணுவ உதவியும் தேவைப்படாது. இதைத் தமிழ்த்தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லையே! புரிந்து கொண்டிருந்தால் புது டில்லித் தீர்மானத்துக்குத் தமது எதிர்ப்பைப் பதிவு செய்திருப்பார்கள் அல்லவா?

### மக்கள் விடுதலை முன்னணி தடுமாற்றம்

# கூட்டு ஒரு 'வசதிக் கல்யாணம்'! நாட்டுக்கு அதனால் கேடு!

## காண்டீபம்

பெரும்பான்மைப் பலத்தை இழந்து கவிழும் நிலையில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி பிழைத்து விட்டது.

மக்கள் விடுதலை முன்னணி தனது பத்து எம்.பிக்கள் பலத்தால் முண்டு கொடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைத் தூக்கி நிறுத்தி வைத்திருக்கிறது.

ஒரு வருட காலத்துக்குத்தான் இந்த ஏற்பாடு என்றாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி, தான் விரும்பியதை அடைந்து விட்டது.

அதாவது எப்படியாவது தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி விரும்பியது. அது நிறைவேறிவிட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கமும் நிறைவேறி விட்டது.

ஒன்றுக்கு இரண்டு முறை அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தி எத்தனையோ அப்பாவி உயிர்களைப் பலி எடுத்து கொலைகாரக் கட்சி என்று லேபல் குத்தப்பட்ட கட்சிதான் மக்கள் விடுதலை முன்னணி.

அந்தக் கட்சி ஜனநாயக அரசியலில் பிரவேசித்து தனது நடை முறைகளை மாற்றி ஓரளவுக்கு மக்களின் ஆதரவைப் பெற்று 10 எம்.பிக்களுடன் மூன்றாவது சக்தியாக நாடாளுமன்றத்தினுள் நுழைந்தது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் மேலும் பல ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்க வேண்டும் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் ஆசை மட்டுமல்ல இலக்கும் கூட.

அந்த இலக்கை அடைவதற்காக அக்கட்சியினர் சில ''ஸ்டன்டு'களை மேற்கொண்டு பொதுமக்களுக்குப் பம்மாத்துக் காட்ட வேண்டியது அவசியமாகிறது.

தமக்குப் பட்டம் பதவிகளில் ஆசை இல்லை. நாட்டின் நலனும் நாட்டு மக்களின் நல்வாழ்வுமே தமக்கு முக்கியம். தாங்கள் அப்பழுக்கற்ற அரசியல் வாதிகள். அரசியலில் சூதுவாதுகள் சதிகளுக்கு இடமளிக்க மாட்டார்கள் என்று தமக்கு ஒரு ''இமேஜை'' ஏற்படுத்த வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருக்கிறது.

அதனால் அவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தத்தளித்துக் கொண்டிருந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்குக் கைகொடுத்து அதைக் காப்பாற்றினார்கள். பலகாலம் வெட்டுப் பகையாக இருந்த விரோதிகள் திடுதிப்பென்று ஒட்டோ ஒட்டு என்று ஒட்டி உயிர்த் தோழர்கள் ஆனார்கள்.

ஆட்சியில் அவர்கள் பங்கு கேட்கவில்லை. பதவிகளையும் அவர்கள் கோரவில்லை. மக்கள் சார்பில் சில நிபந்தனைகளை மட்டும் விதித்தார்கள். அவற்றிற்கு அமைவாக ஒருவருட காலத்துக்குத் தொடர்ந்து ஆட்சி நடத்த அரசுக்கு ஆதரவு வழங்கினார்கள்.

இதைப் பார்த்தவர்கள் பலரும் வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள். இதுவல்லவோ அரசியல் கலாசாரம் என்று பாராட்டைச் சொரிந்தார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருப்பம் ஈடேறியது போல் மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கமும் நிறைவேறிவிட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே ஏற்பட்டுள்ள கூட்டு, கொள்கை அடிப்படையிலானது அல்ல. இரு கட்சிகளும் தத்தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கென்றே ஏற்படுத்திக் கொண்ட இணைப்பு இது. ''வசதிக் கல்யாணம்'' என்று பலரும் இதை வர்ணிக்கிறார்கள்.

இப்படியான கல்யாணம் நிலையானது அல்ல. எந்த நேரத்திலும் முறிந்து போகலாம்.

மக்கள் ஆணைப்படி பதவி ஏற்ற அரசை மக்கள்தான் பதவி இறக்க வேண்டும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து ஒரு வருடத்திற்குள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி அதைப் பதவி கவிழ்க்கச் சதி நடந்தது. அதை முறியடிக்கவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு அளித்து அதை மேலும் ஒருவருடம் நீடித்திருக்க வைத்திருக்கிறோம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் கூறி இருக்கிறார்கள்.

மக்கள் பொதுத் தேர்தலில் தமது வாக்குகளை அளித்து ஆறு ஆண்டுகள் ஆட்சி நடத்துவதற்கு ஒரு கட்சியைத் தெரிவு செய்கிறார்கள். அந்தக் கட்சி பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே கொடுங்கோலாட்சி நடத்தத் தொடங்கினால் மக்களால் என்ன செய்யமுடியும்? உடனே அந்த ஆட்சியை பதவி நீக்கம் செய்ய முடியுமா? அடுத்த பொதுத் தேர்தல் வரும்வரை மக்கள் காத்திருக்க வேண்டும்.

அதனால்தான் எதிர்க்கட்சிகளில் இருப்பவர்கள் அரசாங்கம் நல்லாட்சி செய்யத் தவறும் போது பொதுமக்கள் சார்பில் குறுக்கிட்டு அந்த அரசைப் பதவியிறக்கச் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இதைச் சதி என்று எப்படிச் சொல்ல முடியும்?

மக்கள் விடுதலை முன்னணி இப்போது மக்கள் சார்பில் பல நிபந்தனைகளை விதித்து அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி குறிப்பிட்ட சில கால எல்லைகளுக்குள் அரசாங்கம் சில காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும். தவறினால் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற நேரும்.

வாபஸ் பெற்றால் என்ன நடக்கும்? பெரும்பான்மைப் பலம் இல்லாமல் அரசாங்கம் கவிழ்ந்துவிடும். இதையும் சதி என்பதா?



பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜயரத்னவும் (அமைச்சர்) மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வாவும் புரிந்துணர்வு உடன்படிக்கையை பரிமாறிக்கொள்கிறார்கள். நடுவில் பொது நிர்வாக அமைச்சர் ரிச்சட் பத்திரணவும் , இடது பக்கத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்சவும் காணப்படுகின்றனர்.

அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டுவரும் மக்கள்தான் அதைப் பதவி இறக்க வேண்டும் என்றால் மக்கள் விடுதலை முன்னணி தனது ஆதரவை வாபஸ் பெறுவதால் அரசாங்கம் கவிழ்வதற்கு என்ன செய்ய முடியும்? அதற்கு என்ன விளக்கம் கொடுப்பது? ஆக, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு அளிப்பதற்குக் கூறும் காரணம் அந்தக் கட்சியின் தடுமாற்றத்தைக் காட்டுகிறது. ''வசதிக் கல்யாணத்தை'' நியாயப் படுத்தவும் உதவுகிறது. அவ்வளவு தான்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் மக்கள் விடுதலை முன்னணி முன் வைத்துள்ள கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே மற்ற அரசியல் கட்சிகளாலும், தொழிற்சங்கங்களாலும், பொதுநல அமைப்புகளாலும் விடுக்கப்பட்டவை ஆகும்.

அது மட்டுமல்ல; அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பொதுஜன ஐக்கிய முன்னணி 1994 ஆம் ஆண்டிலும் 2000ஆம் ஆண்டிலும் தனது தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கியவை ஆகும்.

ஏழு வருடங்களாகியும் அந்த வாக்குறுதிகளை அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை.

அப்படியிருக்க சில கோரிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி கோரியபடி மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மாதங்களில் அரசு நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்க்க முடியுமா?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு அடுத்த தேர்தல் வரையில் மக்கள் ஆதரவை விட மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுதான் முக்கியமாகத் தேவை.

தேவை இருந்தாலும் காரியம் ஆவதற்குக் கால அவகாசம் போதாது. அதைத் தெரிந்தும் இரு சாராரும் நாடகமாடுகிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள பல கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமானால் மக்களின் சில கஷ்டங்கள் நீங்கும் என்பது உண்மை.

ஆனால் சில கோரிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்டுவிடும்.

வெளிநாட்டு மூலதனங்கள் இலங்கைக்கு வரும் வாய்ப்புக் குறைந்து விடும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற கடன் வழங்கும் அமைப்புகளிலிருந்து பணம் பெறுவது சிரமமாகிவிடும்.

அதனால் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் பொதுஜன சேவைகளைத் தொடர்ந்து செய்வதற்கும் கூடப் பணத் தட்டுப்பாடு ஏற்படும்.

இவை எல்லாவற்றையும் விட இன்னொரு முக்கிய ஆபத்து இருக்கிறது.

இன்று நாட்டில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு எல்லாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மூல காரணமாக இருப்பது இனப்பிரச்சினையும் அதை ஒட்டி நடைபெறும் வடக்கு கிழக்கு யுத்தமும் தான்.

யுத்தத்துக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகுவதால் வேறு அத்தியாவசிய தேவைகளுக்குப் பணம் போதாமல் இருக்கிறது.

யுத்தத்தை நிறுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி ஒரு வருடத்துக்கு நாடாளுமன்றத்தில் மூச்சுக் காட்டக் கூடாது என்று இரண்டு கட்சிகளுக்குமிடையில் செய்யப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதை வைத்துக் கொண்டு நோர்வேயின் சமாதான முயற்சி நிறுத்தப்படவில்லை. பேச்சுவார்த்தை நடத்தலாம். அதற்குத் தடையில்லை. புலிகள் தான் வருகிறார்கள் இல்லை என்று அரச தரப்பில் இப்போது பலமாகக் கூறப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கலுக்குச் சட்டம் கொண்டுவர முடியாது என்றால் பேச்சுவார்த்தை நடத்தி என்ன பயன்?

தவிரவும் இப்போது மக்கள் விடுதலை முன்னணி இட்ட ஆதரவுப் பிச்சையில் அந்தக் கட்சியின் கண்காணிப்பில் தகுதிகாண் அரசாங்கம் தான் நடக்கிறது.

இந்த அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணியால் நிர்ணயிக்கப்பட்ட ஒருவருட காலத்துக்கு நின்று பிடிக்கும் என்பது கூடச் சந்தேகம். இந்த நிலையில் இந்த அரசாங்கத்தோடு காத்திரமான பேச்சுவார்த்தை எதனையும் நடத்த முடியுமா? நடத்துவதில் பயன் உண்டா என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

மொத்தத்தில் யுத்தத்தை நிறுத்துவதையோ, பேச்சுவார்த்தை நடத்துவதையோ, புலிகள் இயக்கம் பலமாக இருக்கும் வரையில் அதிகாரத்தைப் பரவலாக்குவதையோ அரசாங்கம் விரும்பவில்லை.

அரசாங்கம் இதுவரை நடந்துவரும் விதம் இதை உறுதிப்படுத்துகிறது.

அரசாங்கம் உண்மையில் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, அதிகாரப் பரவலாக்கல் ஆகியவற்றை விரும்பினால் அவற்றைப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சேர்க்க முயற்சி செய்திருக்க வேண்டாமா?

மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் அந்தக் கட்சி இனப்பிரச்சினையே இல்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறது. புலிகளோடு பேசுவதையும் அந்தக் கட்சி அடியோடு விரும்பவில்லை.

இந்த நிலையில் யுத்தம் தொடரவே செய்யும். வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் அவலத்தையே ஏற்படுத்தும். புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள எத்தனை மக்கள் நல நிபந்தனைகளை நிறைவேற்றி என்ன பயன்? யுத்த அவலம் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக மூழ்கடித்து விடும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு திண்டாடுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி தடுமாறுகிறது.

அந்தோ! நாட்டு மக்கள் அனைவரையும் பேராபத்து எதிர்நோக்குகிறது!

## தாக்குதல் நடவடிக்கையில் பிரபாகரனின் பங்கு

தியாகச் சுடர் திலீபன் நினைவாகப் புலிகள் இம்முறை யாழ் குடா நாட்டைக் கைப்பற்றத் தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராகி வருகிறார்கள் என்ற செய்தி பலமாக அடிபடுகிறது.

பெரிய தாக்குதல்களுக்கெல்லாம் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே திட்டமிடுகிறார். வியூகம் அமைக்கிறார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆனையிறவு தாக்குதல்கள் புலிகளுக்குப் பெருவெற்றியாக அமைந்ததன் இரகசியம் அதுதான் என்று சொல்லப்படுகிறது.

பெரிய தாக்குதலுக்கு முன்னர் பிரபாகரன் தனது தளபதிகளுடன் கலந்தாலோசனை நடத்துகிறார். அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும் வழங்குகிறார்.

அப்படியே போராளிகளையும் பிரபாகரன் சந்தித்து அவர்களுக்கும் சில விளக்கங்களை அளிக்கிறார்.

தலைவர் நேரில் வந்து தம்மைச் சந்தித்தார் என்ற மகிழ்ச்சி மேலோங்கப் போராளிகள் மிகுந்த உற்சாகத்துடன் களம் புகுந்து விளையாடுகிறார்கள். வெற்றியைக் குவிக்கிறார்கள்.

## இலங்கை அரசாங்கத்தின் ஸ்டைல்

# யுத்தத்தில் தோல்விக்கு வெகுமதி தூதுவர் பதவி!


ஜானக பெரேரா

அரசுக்குப் பெரும் இராணுவத் தோல்விகளைப் பெற்றுக் கொடுத்த இராணுவ உயரதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் இலங்கைத் தூதுவர் பதவி!

இது அரசின் அண்மைக்கால 'ஸ்டைல்' ஆக மாறி வருகிறது.

இலங்கை இராணுவம் தனது பொன் விழாவைக் கொண்டாடும் போது புலிகள் ஆனையிறவுப் பெருந்தளத்தை தம் வசம் வீழ்த்தினர்.

உடனே அப்போதைய இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த ஸ்ரீலால் வீரசூரியவுக்கு பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் நியமனம் வழங்கப்பட்டது.

செம்மணிப் புதைகுழி விவகாரத்துக்கு முழுப்பொறுப்பாளி என்று கூறப்பட்டவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

இவரது தலைமையின் கீழ் இடம்பெற்றதாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான மனிதக் கொலைகள், சித்திர வதைகள் ஆகியவற்றுக்கு கண்டனக் குரல்கள் எழுந்தன. மனித உரிமைகள் அமைப்புகள் பலத்த ஆட்சேபம் தெரிவித்தன. ஆனால் அவர் (ஜானக பெரேரா) ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத்தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனத்துக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். ஆனால் பலன் எதுவும் இல்லை. ஜானகபெரேரா இன்றும் ஆஸ்திரேலியாவில் தூதுவராகவே இருக்கிறார்.

தற்பொழுது மற்றொரு பெரும் இராணுவப் புள்ளிக்குத் தூதுவர் பதவி கிடைக்கவிருப்பதாக அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்தான் ஜெனரல் றொஹான் தளுவத்த. கூட்டு நடவடிக்கைகள் தலைமையகத்தின் தலைவராகத் தற்பொழுது செயற்பட்டு வருகிறார்.

தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் இலங்கைத் தூதரகம் ஒன்று விரைவில் திறக்கப்பட இருக்கிறது. இதற்கான அங்கீகாரம் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

பிரேஸிலில் இலங்கைத் தூதுவராகவே றொஹான் தளுவத்த நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் எல்லாம் தோல்விகளுக்குப் பொறுப்பானவர்கள் தாமாகவே பதவி விலகி விடுகிறார்கள். அவர்களாகப் பதவி விலகாவிட்டால் அவர்களின் பதவி பறிக்கப்பட்டு அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள் அல்லது வேறு விதத்தில் தண்டிக்கப்படுகிறார்கள்.

இந்த நாட்டில்தான் நடைமுறை வேறு.

கட்டுநாயக்க விமானத் தள மற்றும் சர்வதேச விமான நிலையத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சம்பவத்துக்கு யார் பொறுப்பு, அது தொடர்பான விசாரணைகள் ஏன் புறக்கணிப்பு என்றுஅமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், ''விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு சம்பவம் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலர் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

''கட்டுநாயக்க சம்பவம் போன்ற அனர்த்தம் வேறு ஏதாவது நாட்டில் நடந்திருந்தால் அந்த நாட்டின் விமானப் படைத்தளபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் பதவி விலகியிருப்பார்கள்.

''இந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் நான் பதவி விலகத் தயார். ஏனையோர் பதவி விலக ரெடியா?'' என்று கேட்டார். அப்படிக் கேட்டதோடு சரி. பதவி விலகல் எதுவும் நடக்கவில்லை.

1992 ஆம் ஆண்டு வெற்றிலைக் கேணி இராணுவமுகாம் தாக்கி அழிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ். கோட்டை புலிகள் வசம் வீழ்ந்தது. அப்போது அந்த இராணுவ வீழ்ச்சிக்குப் பொறுப்பானவர் பதவி விலக வேண்டும் என்று பாதுகாப்பு செயலர் ஹமில்ட்டன் வணசிங்க ஊடாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. ஆனால் அது நடக்கவில்லை.


தளுவத்த

1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் திகதி மணலாறு, ஜனகபுர முகாம்கள் மீது புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தினர். 'இதயபூமி' என்ற பெயரில் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஜெயம் தலைமையில் இந்த இராணுவ முகாம்களின் மீது புலிகளின் அணிகள் சீறிப்பாய்ந்தன.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டியே புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று அரசு தரப்பு அப்போது கூறியிருந்தது.

இந்தத் தாக்குதலின் போது இராணுவத் தரப்பு தனது பலத்தில் கணிசமான அளவை இழந்தது. முகாமிலிருந்து சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளவாடங்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. மேலும் பல ஆயுதங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

அப்போது கூட்டு நடவடிக்கைகளுக்கான படைத் தளபதியாக ஹமில்ட்டன் வணசிங்கவும், இராணுவத் தளபதியாக சிசில் வைத்தியரட்ணவும், பாதுகாப்பு செயலராக வோல்ட்டர் பெர்னாண்டோவும் பதவி வகித்தனர்.

தாக்குதலால் தடாலடி வாங்கிய இராணுவத்துக்கு அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க ஆலோசனை கூறுகையில், ''படையினரே! பகலிலே தூங்குங்கள்; இரவிலே விழித்திருங்கள்'' என்றார்.

இந்த பேரிழப்புக்குப் பொறுப்பானவர்கள் யார் என்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் பல்வேறு தரப்புக்களில் இருந்தும் குரல்கள் கிளம்பின. ஆனாலும் எதுவுமே இடம் பெறவில்லை.

அப்போது அந்த இராணுவமுகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஜானக பெரேரா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

— ஆதித்தியன்

# பொ.ஐ.மு—ஜே.வி.பி ஒப்பந்தம் வரலாற்று நிகழ்வா, தவறா?

இரண்டு மாதங்களாக முடங்கிப் போயிருந்த பொ.ஐ.மு அரசு மீண்டும் வழமை போல கருமமாற்றத் தொடங்கியுள்ளது. ஒக்டோபருக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த சர்வஜன வாக்கெடுப்பை அரசு முதலில் ரத்துச் செய்தது. செப்டம்பர் 7 ஆம் திகதி கூடவிருந்த நாடாளுமன்றத்தை ஒருநாள் முன்னதாகக் கூட்டியது. வரட்சியால் துவழும் தென்னிலங்கை விவசாயிகளின் கடன்களை அவசரமாக ரத்துச் செய்தது.

அரசுக்கு ஜே.வி.பி வழங்கியுள்ள ஓராண்டு ஆயுள் நீடிப்பினாலேயே இவை எல்லாம் சாத்தியமாகி உள்ளன. ஆயுள் நீடிப்புக்கு பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பியும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

இலங்கை அரசியலில் புதியதொரு வரலாறை பொ.ஐ.மு— ஜே.வி.பி ஒப்பந்தம் படைத்துள்ளது என வருணிக்கப்படுகிறது. ஆட்சியில் உள்ள ஓர் அரசு எதிர்த்தரப்பில் உள்ள ஒரு கட்சியின் தாளத்துக்கு ஆட்டம் போடும் நிலையையே இந்த வரலாறு ஏற்படுத்தியுள்ளது.

அரசை ஜே.வி.பி தனது பணயக் கைதியாக, சிறைக் கைதியாக மாற்றியுள்ளது என்று ஐ.தே.க தலைவர் வருணித்துள்ளார். ஏனைய சில கட்சிகளும் இந்த இணைக்கம் ஆபத்தான ஒரு நடவடிக்கை என்று கூறியுள்ளன.

கடந்த 5 ஆம் திகதி சுபவேளையான பிற்பகல் 2.16 மணிக்கு அலரி மாளிகையில் இருதரப்பினரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பின்னர் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிற்பகல் 3.46 மணிக்கு ஒப்பந்தப் பிரதிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அரசு என்னென்ன காரியங்களை ஓராண்டுக்குள் செய்ய வேண்டும் என்பதை ஒப்பந்தம் வரையறை செய்துள்ளது. அமைச்சர்கள் எண்ணிக்கையை 44 இல் இருந்து 20 ஆக குறைக்க வேண்டும் அது இப்பொழுது நடந்திருக்கலாம்.


டில்வின்

ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், சுயாதீன காபந்து அரசின் கீழ் தேர்தல்களை நடத்துதல், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை ஓராண்டுக்கு அதிகரிக்காதிருத்தல் ஆகியவை அரசு செய்ய வேண்டிய சில முக்கிய காரியங்களாகும்.

அரசுடன் ஜே.வி.பி ஒப்பந்தம் செய்து கொண்டாலும் எதிரணியில் ஒரு கட்சியாகவே இருந்து வரும் என்று அதன் பொதுச்செயலாளர் டில்வின் தெரிவித்துள்ளார். ஆனால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் துணிந்து நிற்போம் என்ற உறுதி மொழியையும் அவர் வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தில் ஒரு பங்காளியாக ஜே.வி.பி செயற்படாது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் மட்டுமே பங்காளியாக இருந்துவரும் என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதே வேளை ஓர் எச்சரிக்கையையும் ஜே.வி.பி விடுக்கத் தவறவில்லை. ஒப்பந்தத்தை அரசு இடைநடுவில் சீர்குலைக்குமேயானால் அது தொடர்பாகத் தீர்ப்பு வழங்குவதை மக்களிடம் விட்டுவிடுவோம் என்கிறது அக்கட்சி. அரசு கவிழ்க்கப்படும் என்பதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

அரசும் இந்த ஆபத்தை எதிர்பார்க்காமல் இல்லை. ''ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களை நூற்றுக்கு நூறு வீதம் நிறைவேற்றுவோம்'' என்று அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன ஒப்பந்த வைபவத்திலேயே கூறியுள்ளார்.

இருந்தாலும் ஜே.வி.பி அரசுக்கு வழங்கும் இந்த ஒத்துழைப்பு அரசுத் தரப்பில் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. என்பது வெளிப்படை. இந்த ஒத்துழைப்புக் குறித்து சில அமைச்சர்கள் ஏற்கனவே சந்தேகக்கண் கொண்டே நோக்குகிறார்கள்.

இவர்களில் அமைச்சர் மஹிந்த விஜேசேக்கர முதன்மையானவர். ''எனது பழைய நண்பர்கள் (இவர் முன்னர் ஜே.வி.பி யில் இருந்தவர்) அரசுடன் சேர்ந்திருப்பது மகிழ்ச்சியானது. ஆனால் அது மூன்றாவது கிளர்ச்சியின் ஆரம்பமோ தெரியாது'' என்று அவர் கூறியுள்ளார். மற்றொரு ஆயுதப் போராட்டத்தில் ஜே.வி.பி இறங்காது என்பதைக் கூறுவதற்கில்லை என்பது அவரது கணிப்பு.

சிறிது காலத்துக்கு முன்னர் வரை 'கொலைகாரர்கள்' என்று அரசினால் காரசாரமாகக் கண்டிக்கப்பட்டவர்கள் ஜே.வி.பியினர். ஜே.வி.பியினால் கொல்லப்பட்டவர்களின் புகைப்படக் கண்காட்சிகள் கூட நாட்டின் பல பகுதிகளில் நடத்தப்பட்டன. சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளரான எஸ்.பி. திசாநாயக்காவே இதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

ஜே.வி.பி யுடனான அரசின் உறவை எதிர்க்கும் அணியில் உள்ள மற்றொரு அமைச்சர் ஜெயராஜ், ஜே.வி.பியின் நிபந்தனையுடனான அமைச்சரவையில் பதவி வகிக்கத் தான் விரும்பவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் ஜீ.எல். பீரிஸூம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கருத்து முரண்பாடு கொண்டுள்ளார். ஆனால் இந்த அமைச்சர்கள் பதவிகளைத் துறந்தாலும் அல்லது விட்டுக் கொடுத்தாலும் கட்சியை விட்டு வெளியேறுவார்கள் என்பதைக் கூறுவதற்கில்லை.

கட்சியின் நலனைப் பெரிதாகக் கருதுபவர்கள் அவர்கள். உடனடியாக இல்லாவிடினும் ஒரு வருடத்திலாவது நடைபெறப் போகும் தேர்தலைச் சந்திக்க அவர்கள் கட்சியிலேயே தொடர்ந்து இருப்பார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

பொ.ஐ.மு — ஜே.வி.பி இணக்கத்தால் அரசியல் இலாபம் பெறப்போவது யார்? அதிகாரம் தனது கையில் இருப்பதால் இலாபம் தேடிக் கொள்ள அரசு நிச்சயமாக முயலும். ஜே.வி.பி இலாபம் தேட முற்படுவதைத் தடுக்கவும் அது முயலலாம்.


அவ்வாறே ஜே.வி.பியும் இலாபம் தேட முயலலாம். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். ஜே.வி.பியும் அரசியல் நன்மை இல்லாமல் அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருக்குமா?


நாட்டுக்கு நன்மை கிடைத்தால் அது தன்னால் கிடைத்தது என்று ஜே.வி.பி பெருமை பாராட்டலாம். நன்மை கிடைக்காவிட்டால் அது அரசின் தவறு என்று பழியை அரசின் மீது சுமத்தி விடலாம்.

ஆனால் நன்மை கிடைத்தாலோ அது தன்னால் மட்டுமே கிடைத்தது என்று அரசு உரிமை பாராட்ட முடியாது. தீமை ஏற்பட்டால் அதற்கான முழுப் பழியையும் சுமந்தே ஆக வேண்டும்.

பொ.ஐ.மு — ஜே.வி.பி இணக்கம் வரலாறு படைக்கப் போகிறதோ இல்லையோ, வரலாற்றுத் தவறை அரசு செய்து விட்டதை எடுத்துக் காட்டாமல் இருந்தால் சரி!

—அவதானி







# அரங்குக்கு வந்தது தொடர் விளையாட்டு

ஒலிம்பிக் போட்டியில் ஏதோ ஒரு விளையாட்டில் பதக்கம் பெற்றாலே உலகப் புகழ் கிடைத்து விடும். ஆனால் தற்போது தொடர் விளையாட்டுகளும் ஒலிம்பிக்கில் அரங்கேறத் தொடங்கிவிட்டன.

ஆங்கிலத்தில் ''ட்றைத்லன்'' எனப்படும் மும்முனைப் போட்டி தற்போது விளையாட்டு ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறது. தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் பங்கு பற்றி இந்த ஆட்டத்தில் வெற்றியைத் தேடிக் கொள்ள வேண்டும். இந்த ஆட்டம் நடைபெறும் விதத்தை இங்குள்ள மூன்று படங்களும் விளக்குகின்றன.

நீச்சல் போட்டி, சைக்கிள் சவாரி, மருதன் ஓட்டம் என்று மூச்சு விடாமல் மூன்று போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். போட்டி ஆரம்பமானதும் வீரர்கள் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் நீந்துவார்கள். பின்னர் 40 கிலோமீற்றர் தூரத்துக்கு சைக்கிள் சவாரி நடக்கும். அதனைத் தொடர்ந்து 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு மருதன் ஓட்டம் நடக்கும். பிரிட்டிஷ் வீரர் சிமோன் லெஸ்ஸிங் இந்தப் போட்டியை 110 நிமிடங்களில் முடித்து விடும் திறமையைக் கொண்டிருக்கிறார்.



# அறிமுகமாகும் அரிய பறவை இனங்கள்

பறவை இனங்கள் சுதந்திரமாகப் பறந்து திரிவதையே விரும்புகின்றன. எத்தனையோ பறவை இனங்கள் மனிதனின் சமூக வட்டத்திற்குள் பிரவேசிக்காமல் தனியாகவே வாழ்வினை நடத்துகின்றன. இருப்பினும் தவிர்க்க முடியாத வேளைகளில் சில பறவை இனங்கள் மனிதனின் பிடிக்குள் வந்து விடுகின்றன. அவ்விதம் அம்பலத்துக்கு வரும் பறவைகளை வியப்புடன் நோக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது.

அம்பலத்துக்கு வந்த இரண்டு அரிய பறவை இனங்களை இங்கு காணலாம்.

சென்னை மடிப்பாக்கத்தில் அண்மையில் ஒரு ராட்சத ஆந்தை அகப்பட்டது. ஆந்தை தனித்துப் போய் விட்டதால் காகங்கள் கூடி நின்று ஆந்தையை விரட்டின. ஆந்தையை மீட்ட சிலர் கிண்டி சிறுவர் பூங்காவில் அதனை ஒப்படைத்தனர். அடர்ந்த வனப்பகுதியில் வாழும் இந்த ஆபூர்வ இன ஆந்தை சென்னை நகருக்கு ஏன் வந்ததோ தெரியவில்லை.




இதே வேளையில் வட இந்தியாவில் தெற்கு மும்பை நகரிலுள்ள ஜெ.ஜெ.கலைக் கல்லூரியில் ஒரு காகம் பிடிபட்டிருக்கிறது. அது ஒரு வெள்ளைக் காகம். எனவே அதுவும் ஒரு அரிய பறவை என்று கருதப்படுகிறது.

# அம்மாவின் பக்கபலம் இருந்தால் இல்லை பயம்

காண்டாமிருகம் மிகவும் பயங்கரமானது என்று கருதப்படுகிறது. ஆயினும் உலகில் அருகிவரும் மிருக இனமாக காண்டாமிருகம் கணிக்கப்பட்டிருக்கிறது. ஆண் காண்டா மிருகத்தின் மூக்கின் மீது வளர்ந்திருக்கும் கொம்புக்காகவே அவை கொல்லப்படுகின்றன. அந்தக் கொம்பைப் பொடி செய்து அருந்தினால் மனிதனுக்கு அளவுக்கு மிஞ்சிய காமஉணர்ச்சி ஏற்படுகிறதாம். பலம் பொருந்திய காண்டா மிருகங்களுக்கு அவற்றின் கொம்புகளே ஆபத்தைத் தேடித் தருகின்றன. ஆனால் சிங்கப்பூர் மிருகக்காட்சிச் சாலையில் வளரும் இந்தக் குட்டிக் காண்டா மிருகம் எவ்வித பயமும் இன்றிப் பவனிவருகிறது. காரணம் அதற்குத் தான் அம்மாவின் பக்க பலம் இருக்கிறதே.



# ஒளிந்திருக்கும் முகம் எது?



செப்டெம்பர் 2, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் பிரகாஷ்ராஜுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. எம்.வை.ரிஸ்மி ரிஸ்னா.
2. எஸ்.ரீ.அருணோதயன்.
3. எம்.இராமானுஜயம் மஞ்சு.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (09.09.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? வில்லனின் மகனான போதிலும் உலக அழகியைக் கதாநாயகியாகக் கொண்டவர். சொக்லெட் தயாரிப்பில் இன்று இவர் ஒரே பிஸி.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



# இரு தரப்பினரும் 'ரெடி' ஆரம்பமாவதே பாக்கி!

## குடாநாட்டைத் தாக்குவதும் காங்கேசன் துறைமுகத்தைப் பிடிப்பதும் ஒன்றே

**யா**ழ். குடாநாட்டின் மீது புலிகள் மேற்கொள்ளவுள்ள படை நடவடிக்கையின் முதலாவது தாக்குதல் காங்கேசன் துறைமுகத்தை இலக்குவைத்துத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இப்படி இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் மேலிடத்தை எச்சரித்திருக்கின்றன.

குடாநாட்டின் மீது தரை வழிப் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வெற்றி அடைவதும்—

காங்கேசன் துறைமுகத்தை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும்— புலிகளைப் பொறுத்தவரை ஒரே பலனையே அளிக்கும்.

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள நாற்பதினாயிரம் படையினர் மற்றும் பொலிஸாருக்கான விநியோகங்களில் 95 சதவீதமானவை காங்கேசன் துறைமுகத்தின் ஊடாகவே நடைபெறுகின்றன. அந்த வகையில் தமது தரப்பில் இழப்புக்களைக் கூடிய அளவுக்குத் தவிர்க்கும் பொருட்டு கடல் வழியாக ஊடுருவும் கரும்புலி அணிகள் காங்கேசன் துறைமுகத்தைத் தாக்கி அதைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரவும் முயற்சிக்கலாம்.

ஆனையிறவுப் பெரும்படைத்தள வீழ்ச்சியுடன் தரை வழி விநியோகத்தைப் படைத்தரப்புக் கோட்டைவிட்டது.

காங்கேசன் துறைமுகம் தற்பொழுது படையினரின் ஒரே ஒரு விநியோக வழி. அதனை இழந்தால் குடாநாட்டில் அரச படையினரின் கதி அதோகதிதான்.

இந்த விடயம் ஜனாதிபதி வரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி இரவு தேசிய பாதுகாப்பு சபை அமர்வு இடம் பெற்றது.

பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் கூட்டு நடவடிக்கைகள் தலைமையகத்தின் பிரதான தளபதி ஜெனரல் ரொஹான் தளுவத்த, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலர் கே. பாலபட்டபெண்டி பாதுகாப்புத்துறைச் செயலர் சந்திரானந்த டி சில்வா, பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மற்றும் மூன்று சேவைத் தர அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இராணுவ மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று அங்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக நேரில் சென்று அறிந்த விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதிக்காகச் சென்றிருந்த நடவடிக்கை களுக்கான தளபதி பிரிகேடியர் நிமால் ஜயசூரியா ஆகியோரின் கருத்துக்களின் பிரகாரம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.



துறைமுகத் தாக்குதலைத் தடுப்பதற்குத் தயார் நிலையில் 'டோறாக்கள்'

''புலிகள் இயக்கத்தில் சுமார் 2 ஆயிரம் முதல் நான்காயிரம் வரையிலான உறுப்பினர்களே உள்ளனர். இவர்களில் கடல் புலிகள் சுமார் 800 முதல் ஆயிரம் பேர்.

''இந்தளவு ஆளணியுடன் குடாநாட்டின் மீதான படைநடவடிக்கை என்பது புலிகளுக்கு சாத்திய மற்றது.

''தற்போதுள்ள ஆளணியுடன் குடாநாட்டின் மீதான ஒரு படை நடவடிக்கைக்கு புலிகள் முயற்சித்தாலும் அவர்களை இலகுவாகப் பின்தள்ளி விடக்கூடிய திறனில் படையினர் உள்ளனர்''.

இப்படி ரொஹான் தளுவத்த அங்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன் புலிகளின் தற்போதைய இலக்குகள் தென்பகுதியிலேயே திட்டமிடப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் பொருளாதார இலக்குகள் தான் தற்போது அவர்களால் குறிவைக்கப்பட்டி ருக்கின்றன என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

ரொஹான் தளுவத்தவின் இந்த அறிக்கையானது படையினரின் மனோபலத்தை வலுப்படுத்தும் ஒரு முயற்சி மட்டுமே என்று புலப்பட்டிருக்கிறது.

ஏனெனில் உள்ளகப் புலனாய்வுப் பணியகம் அண்மையில் தனது விசேட நடுவகத்துக்கு அனுப்பியுள்ள அறிக்கை படைத் தலைமை முதல் அனைத்துத் தரப்பினருக்கும் அடிவயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

''விடுதலைப் புலிகள் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளனர். தியாகி திலீபனின் நினைவு நாளை ஞாபக மூட்டும் வகையில் இந்தப் படை நடவடிக்கை அமையப் போகின்றது.

''இந்த நடவடிக்கைக்காக குடாநாட்டைச் சூழ புலிகள் பாரிய ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர். லெப். கேணல் தீபன் தலைமையில் சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவும், வீரமணி தலைமையில் 350 விசேட பயிற்சி பெற்ற அணியும் தயார் நிலையில் உள்ளன. இவற்றை விட கடாபி தலைமையிலான அணிகள் நாகர் கோயில், சுண்டிக்குளம், பரப்பாவடி ஆகிய பகுதி முன்னரங்குகளில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

''மதுஷா தலைமையில் பாரிய மகளிர் படை அணி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக் கட்டடத்தில் நிலைகொண்டுள்ளது.

''ஆனையிறவை அண்டியுள்ள புதுக்காடு, இயக்கச்சி மற்றும் குமரபுரம், பரந்தன் ஆகிய இடங்களிலுள்ள வயல்களில் தினமும் காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கடும் யுத்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

''வல்லிபுரம், அக்கராயன், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் புலிகளின் சிறிய அணிகள் நிலை கொண்டுள்ளன.

''சகல அணிகளையும் பூநகரியிலுள்ள கௌதாரி முனை நடுவகம் நெறிப்படுத்துகிறது. இவர்களிடம் இரண்டு மல்டி பரல் ரொக்கட் லோஞ்சர்களும் உள்ளன. படை நடவடிக்கைக்கான புலிகளின் புலனாய்வு மையம் நஞ்சூட்டிக் குளத்தில் செயற்படுகிறது.

இவ்வாறு புலனாய்வுப் பிரிவு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறது.

படைத் தலைமைகளின் ஆலோசனைகளும், புலனாய்வு அறிக்கைகளும் முரண்பட்டிருப்பது கள முனையில் உள்ள படையினருக்குச் சிம்ம சொப்பனமாகவே தெரிகிறது.

இதேவேளை —

விடுதலைப் புலிகள் கடற்படையின் ரோந்துப் பணிகளையெல்லாம் ஊடறுத்துக் கப்பல்களில் ஆயுதங்களைத் தொடர்ந்து கொண்டு வருகின்றனர்.

அண்மையில் வெளிநாட்டுப் புலனாய்வுப் பணியகம் கடற்படையினருக்கு விடுத்த எச்சரிக்கையில் கம்போடியாவிலிருந்து புலிகளுக்கான ஒரு தொகுதி ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று இலங்கை நோக்கி வருவதாகத் தெரிவித்தது.

இந்தக்கப்பலில் புதிய மல்டி பரல் ரொக்கட் லோஞ்சர்கள் கொண்டுவரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் இத்தகைய தொடர்ச்சியான நடவடிக்கைகள் படைத்தரப்பை மீளமுடியாத நெருக்கடி நிலையில் சிக்க வைத்திருக்கிறது.

மேலும் பல தொகுதி படையினரை தெற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வடக்குக்கு நகர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான முதல் நடவடிக்கையாகவே சிற்றி ஓவ் றிங்கோ பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படவுள்ளது. 'லங்கா முதித்த' மற்றும் சரக்குக் கப்பல்கள் மூலம் வடக்குக்குப் படையினர் அனுப் பப்பட உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலதிக படையினரில் பெரும்பாலானோர் காங்கேசன்துறைமுகப் பாதுகாப்புக்கே அமர்த்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கில் காங்கேசன் துறைமுகம், கிழக்கில் திருகோணமலை துறைமுகம் தெற்கில் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடங்கள் என அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென ஆயிரக்கணக்கான படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரு தரப்பும் ''ரெடி'' இனி மோதல் ஆரம்பமாக வேண்டியதுதான் பாக்கி!

— எறியன்

இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவின் சேவைக்காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஜூன் 14ஆம் திகதி ஒரு வருட சேவைக் கால நீடிப்பு அவருக்கு வழங்கப் பட்டது. தற்போது இன்னுமொரு வருட சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

லயனல் பலகல்ல 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை இராணுவத் தளபதியாக தொடர்ந்து பதவி வகிப்பார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதேவேளை — யாழ்ப்பாணத்துக்கான அனைத்து நடவடிக்கைகளுக்குமான தளபதி மேஜர் ஜெனரல் நீல் டயஸ் சிரேஷ்ட அதிகாரிகளுக்கான பாதுகாப்பு முகாமைத்துவக் கற்கைநெறிக்காக அமெரிக்கா செல்லவுள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய யாழ்ப்பாணத்துக்கான அனைத்து நடவடிக்கைகளுக்குமான தளபதியின் பொறுப்பையும் இனி வகிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீல் டயஸ் இராணுவ அதிகாரிகள் வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி இவர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி இவரது சேவைக் காலத்தையும் நீடித்திருந்தார். மூன்று மாதகால கற்கை நெறியை முடித்துக் கொண்டு டிசெம்பர் முதல் வாரமளவில் நீல் டயஸ் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை டிசெம்பர் மாதம் மேஜர் ஜெனரல் பொன்சேகாவும் தனது இராணுவ கற்கை நெறியை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்ப உள்ளார். அனுபவ முதிர்ச்சியின் அடிப்படையில் அடுத்த இராணுவ தளபதியாக பொன்சேகா வரக்கூடிய சாத்தியங்கள் உண்டு. ஆயினும் நீல் டயஸ் இராணுவ தளபதியாக வரக்கூடிய சாத்தியக் கூறுகளே அதிகம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.






மாத்தளை, வாரியப்பொல, கொம்பிலிவெல
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில்
வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் 07.09.2001
தேர்த்திருவிழா 16-09-2001 மு.ப. 10.30 மணி
பூங்காவனம் 18.09.2001

இங்ஙனம்: அடியார்கள் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்.

பாலியல் பலவீனத்திற்கு
ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லாத வைகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும் உடல் சக்கி... விரிய விருத்திக்கும் ரிஷி அ... லேகியம்
ரூ. 195 =, 380
தங்கபஸ்பம் கலந்தது 1500

மூல வியாதியா
ரிஷி லேகியம் பாவியுங்கள்
உள்மூலம், வெளிமூலம் இவற்றைச் சுகப்படுத்தும் ரூ. 195/=

ஞானசுந்தரம் வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 421398

சுடர் ஒளி
விற்பனை முகவர்கள் தேவை
சுடர் ஒளி நாளிதழை விற்பனை செய்வதற்கு நாட்டின் சகல பாகங்களிலும் விற்பனை முகவர்கள் தேவை.

* முற்பணம் செலுத்தக் கூடியவர்களும் நிரந்த இடவசதி உடையவர்களும் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
* தற்போது சுடர் ஒளி வார இதழின் முகவர்களாக இருப்பவர்களும் புதிய நடைமுறையின் கீழ் மீள் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

விநியோகப் பகுதி,
36/2, Fredrica Road,
Colombo - 06.

# ஜே.வி.பியுடன் அரசு கூட்டு நாட்டுக்கு வைத்த வேட்டு!

சந்திரிகா அரசாங்கம் ஜே.வி.பியினருடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ், முஸ்லிம் தலைவர்களில் பலர் கண்டித்துள்ளனர். இந்த ஒப்பந்தம் நாட்டுக்கு வைத்த வேட்டு என்றவாறாகக் கருத்து தெரிவித்துள்ளனர்.


செல்லச்சாமி

தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். செல்லச்சாமி:—

சந்திரிகா அரசு – ஜே.வி.பி கூட்டு நாட்டில் மேலும் ஸ்திரமற்ற நிலையையே ஏற்படுத்தும். எதிரும் புதிருமான இவர்களின் இணைப்பு அரசியலில் மேலும் சிக்கல்களை கொண்டுவரப் போகின்றது. கொள்கை அளவிலான கூட்டாக இதனைக் கருத முடியாது. அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வீழ்ச்சியை சரிக்கட்டுவதற்காக செய்து கொள்ளப்பட்ட கூட்டு என்பதே சரி. இந்த சந்தர்ப்பவாதக் கூட்டு ஓர் அரசியல் சதுரங்க விளையாட்டு.

நாடாளுமன்றத்தைக் கூட்டுவது மூலமும் சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்வது மூலமும் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது மூலமும் ஆட்சியை ஒரு வருடத்துக்கு நீடிப்பது மூலமும் நாடு எதிர் நோக்கியுள்ள நெருக்கடிக்குத் தீர்வு கண்டு விட முடியாது. புரையோடிப் போயுள்ள புண்ணை அறுவைச் சிகிச்சை செய்து குணப்படுத்தாமல் பிளாஸ்டர் போட்டு ஒட்டுவதற்கு இது சமன் ஆகும்.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான மனோ கணேசன்:—

சிறுபான்மை கட்சிகளால் அரசாங்கத்தை அமைக்க முடியாவிட்டாலும் ஆட்சிக்கு வரும் அரசுகளுடன் பேரம் பேசவும் அவற்றை வழிநடத்தவும் கூடிய சக்தியை அவை பெற்றிருந்தன.

இந்த அற்ப சலுகைகள் கூட அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்ற கொள்கையைக் கொண்ட தீவிர இனவாதப் போக்கைக் கொண்ட ஜே.வி.பி. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.


மனோ கணேசன்

இப்படியான சூழ்நிலையில் புலிகளுடன் சமாதானப் பேச்சு என்பது இன்று சாத்தியமற்று விட்டது. இரு இனவாதக் கட்சிகளின் சேர்க்கையால் சிறுபான்மை இனங்களுக்கு மீட்சியே கிடையாது. எனவே சிறுபான்மை இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்திலாவது யதார்த்த நிலையை உணர்ந்து ஐக்கியப்பட வேண்டும். இல்லையேல் விமோசனமே இல்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிரேஷ்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஸ்வி சின்னலெவ்வை:—

பிசாசுகளுடனும் கூட்டுச் சேர்வேன் என்று கூறிய ஜனாதிபதி அதனைச் செயலில் காட்டி விட்டார். இப்பொழுது ஜே.வி.பி சாத்தான்கள் ஓதும் மந்திரத்துக்கு தாளம் போடும் நிலைமை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இது எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரிய சாபக்கேடு. இவர்களுடைய கூட்டு பெரும் அழிவை ஏற்படுத்து மேயன்றி அபிவிருத்தியை ஏற்படுத்தாது.

எண்ணெயும் தண்ணீரும் ஒருபோதும் சேர்ந்துவிடா. அப்படியே இவர்களுடைய கூட்டும் வெகு விரைவில் முறிந்துவிடும்.

தமிழ் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி:—

அரசு – ஜே.வி.பி புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது உண்மையில் ஒரு கூட்டரசே.

ஜே.வி.பியினரின் கூட்டால் இலங்கை அரசுக்கு ஐரோப்பிய சமூகமும், உலக வங்கியும் தொடர்ந்து உதவிகளை வழங்குமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.


விநாயகமூர்த்தி

நாட்டில் மின்சாரம் இல்லை. இன்னும் சில வாரங்களில் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்படும். பல லட்சம் இளைஞர், யுவதிகள் தொழில் இழக்க நேரிடும். இதனால் நாட்டில் மேலும் ஒரு கொந்தளிப்பு ஏற்படும்.


அடைக்கலநாதன்

சமாதானம் தேவை இல்லை என்கிறது ஜே.வி.பி. இத்தகைய நிலையில் அரசு – ஜே.வி.பி கூட்டு நாட்டில் மேலும் அமைதியற்ற நிலைமையையே ஏற்படுத்தும்.

டெலோ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன்:—

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படுமா என்பதில் அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட இரு தரப்பினருக்குமே நம்பிக்கை இல்லை. இதனால் தான் உடன்பாடுகள் மீறப்படும் போது ஒப்பந்தம் முறிந்து போகும் என்பதை ஒப்பந்தத்தில் சேர்த்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கூற முடியாது. இது ஒரு போலியான ஒப்பந்தம். இதனால் எந்தவிதமான நன்மையும் இல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன்:—


சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை மேலும் ஒரு வருட காலத்துக்கு தீவிரப் படுத்துவதற்கு அரசு – ஜே.வி.பி ஒப்பந்தம் உத்தரவாதம் அளித்துள்ளது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜே.வி.பி இடமளிக்காது.

இது நாட்டைக் காக்கும் ஒப்பந்தம் அல்ல. ஜனாதிபதி தன்னையும் தனது பதவியையும் காப்பாற்றிக் கொள்ள செய்து கொண்ட ஒப்பந்தம்.

ஜே.வி.பியினரின் மாறான பொருளாதாரக் கொள்கையினால் இலங்கை அரசுக்கு கிடைத்து வந்த வெளிநாட்டு உதவிகள் தடைப்படப் போகின்றன. நாட்டில் வங்குரோத்து நிலை ஏற்படுவது நிச்சயம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்:—

இரண்டு துருவங்களாக இருந்து வந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்திருப்பது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.


ஜோசப் பரராஜசிங்கம்

1994ஆம் ஆண்டு தேர்தலின்போது யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று கூறி தமிழர்களின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவிக்கு வந்தார். ஆனால் அரசியல் தீர்வு – சமாதானப் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டே யுத்தம் மூலம் தீர்வுகாண முற்பட்டார்.

இன்று புலிகளோடு பேசக்கூடாது. அதிகாரப் பரவலாக்கல் அவசியம் இல்லை. யுத்தம் ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் எனக் கூறும் ஜே.வி.பியுடன் கைகோத்துக் கொண்டார். இது ஜனாதிபதியின் உண் மையான விஸ்வரூபத்தை வெளிப்படுத்தி விட்டது.

தேசிய ஐக்கிய முன்னணி தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப்


பேரியல் அஷ்ரப்

நாட்டினதும் நாட்டு மக்களினதும் நன்மைக்காக அரசு ஜே.வி.பியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வரவேற்கத்தக்கது. சில சுயநலவாத அரசியல் கட்சிகள் ஜனநாயகத்துக்கு முரணான வழியில் ஆட்சியைப் பிடிப்பதில் நாட்டம் கொண்டிருந்தன.

ஆனால் ஜே.வி.பியினர் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி நாட்டின் நலனில் மட்டுமே அக்கறையுடன் செயல் பட்டு பொ.ஐ.முயுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளனர். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் என்ற வகையில் இக் கூட்டு முயற்சியை வரவேற்கின்றேன்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன்:—


பெ.சந்திரசேகரன்

சிறிய கட்சிகள் தயவில் அரசாங்கம் தங்கியிருக்கக் கூடாது என்று கூறும் ஜனாதிபதியும் புலிகளோடு பேச்சுவார்த் தையே கூடாது என்று இனப்பிரச்சினையையே கேவலப்படுத்தும் ஜே.வி.பியும் இணைந்து அரசாங்கம் அமைத்தால் அது முழுக்க முழுக்க ஓர் இனவாத அரசாங்கமாகவே இருக்கும்.

ஜனாதிபதி சரி, ஜே.வி.பி சரி பேச்சுவார்த்தையின் போது, யுத்த நிறுத்தம் பற்றியோ அல்லது சமாதானம் பற்றியோ அல்லது அழிந்துகொண்டிருக்கும் பொருளாதாரம் பற்றியோ உபயோகமான எந்தத் திட்டத்தையுமே முன்வைக்கவில்லை.

இந்த இனவாதக் கூட்டினால் யுத்தமும் நிற்கப் போவதில்லை. சமாதானமும் ஏற்படப் போவதில்லை. அரசுக்குப் புத்துயிர் கொடுப்பதற்காக ஜே.வி.பி எடுத்துள்ள இந்த முடிவினால் நாடு முன்பிருந்ததை விட பேராபத்தைச் சந்திக்கலாம். இந்த ஒப்பந்தம் மூலம் ஜே.வி.பிக்கு இருந்ததாகக் கூறப் படும் மக்கள் தோற்றம் சிதைந்து விட்டது. ஜே.வி.பியை மக்கள் நிராகரிக்கின்ற அத்தியாயம் ஆரம்பிக்கப் போகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.யோகராஜன்:—


யோகராஜன்

அரசு ஜே.வி.பி கூட்டு சிறுபான்மை இன மக்களுக்கு ஏதும் பெரிய நன்மைகளை ஏற்படுத்தும் என்று நம்பமுடியாது. இக்கட்டான நிலையை சமாளிப்பதற்கு வேறு வழி இல்லை என்பதாலேயே அரசாங்கம் ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.

இவர்களின் கூட்டினால் சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக் கூடாது என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தி உள்ளோம். நிலைமை மோசமடைந்து எமது சமூகத்துக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் மௌனமாக இருக்க மாட்டோம். எமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய நேரிடும்.

முஸ்லிம் ஐக்கிய முன்னணித் தலைவர் முஜிபூர் ரஹுமான்

ஆணைக் குழுக்களை நியமிப்பதால் மட்டும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. ஜே.வி.பியுடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தம் வடக்கு–கிழக்கு மாகாணத்துக்கு வெளியே இருப்பவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ளது. இன்று அதி முக்கிய பிரச்சினையாக இருப் பது இனப் பிரச்சினையும் யுத்தமும்தான். கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் ஜே.வி.பி இவை இரண்டையும் முற்றாக ஒதுக்கி வைத்துவிட்டது. இது தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமாகும்.

புதிய இடதுசாரி முன்னணி தேசிய அமைப்பாளர் இ.தம்பையா:—

இனப்பிரச்சினையை ஓரம் கட்டி விட்டு நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கப்போகிறோம் என்பது வெறும் பம்மாத்து. புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையிலேயே யுத்தம் நடைபெறுகிறது. இதனால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பிரதமரும், ஜே.வி.பி தலைவர்களும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நேர் விரோதிகள். இவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கூட்டு யுத்தத்தை தீவிரப்படுத்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தொகுப்பு: புத்திரசிகாமணி

## நடைமுறைக்கு வந்த புரிந்துணர்வு ஒப்பந்தம்

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 28 அம்சங்களைக் கொண்டுள் ளது. ஒப்பந்தம் செப்டெம்பர் 5 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒப்பந்தத்தின் முக்கிய சாராம்சங்கள் வருமாறு:—

* ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்தில் பொ.ஐ.மு அரசை நடாளுமன்றத்தில் உறுதியற்றதாக்க அல்லது அதிகாரத்திலிருந்து அகற்ற ஜே.வி.பி செயற்படாதிருத்தல்.
* செப்டெம்பர் 24ஆம் திகதிக்கு முன் அரசமைப்புச் சபை, சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைப்பதை இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் 17 ஆவது அரசியல் சட்டத் திருத்தமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றல்.
* அரசமைப்புச் சபையை 2001 அக்டோபர் 5 ஆம் திகதிக்கு முன் நிறுவுதல்
* ஆறு மாதங்களுக்குள் சுயாதீன ஊடக ஆணைக்குழுவை அமைத்தல்.
* நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், தேர்தல் முறையை மாற்றியமைத்தல், காபந்து அரசாங்கத்தின் கீழ் தேர்தல்களை நடத்துதல் ஆகியவற்றுக்கான சட்டத் திருத்தங்களை ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
* ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலத்தில் நீர் வளங்கள், வங்கிகள், காப்புறுதி போன்ற அரச உடைமைகளை தனியார் மயப்படுத்துவதை தவிர்த்தல்.
* எரிபொருள், பால் மா, சீனி, கோதுமைமா, அரிசி, மருந்து வகைகள், மின்சாரம், எரிவாயு ஆகியவற்றின் விலைகளும் தண்ணீர், பஸ்–ரயில் கட்டணங்களும் அதிகரிக்கா திருப்பதை பார்த்துக் கொள்ளல்.
* ஜனாதிபதி, அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஒப்பந்தம் நடைமுறையாகும் மாதம் தொடக்கம் தமது சம்பளத்தில் அரைப் பங்கை கூட்டு நிதிக்கு சுயமாக வழங்குதல்.
* தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக சகல தரப்பினரும் பங்குபற்றும் பரந்த கலந்துரையாடலில் இணக்கம் காணப்படும் வரை அதிகாரப் பரவலாக்கல் போன்ற யோசனையையோ அல்லது விவாதத்துக்கு வழிவகுக்கும் வேறு யோசனையையோ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காதிருத்தல்.
* இன, மத, ஆண்– பெண் வேறுபாடு, அரசியல் பாகுபாடு இன்றி வெளிப் படையான கொள்கையின் கீழ் அரச நியமனங்கள், பதவி உயர்வு, இடமாற்றம் வழங்கல்.
* அமைச்சர்கள் – எம்.பிக்கள் அரசாங்க அதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப் படும் எரிபொருள் அலவன்ஸை கட்டுப்படுத்துதல்.

# போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகிவருகிறது

## பெற்றோரே பிள்ளைகளைத் தருகிறார்கள் என்கிறார் கரிகாலன்

வடக்கு கிழக்கில் இன்று மரபுவழிச்சமர், கரந்தடிச்சமர்களை மட்டுமல்ல உளவியல் போரையும் விடுதலைப்புலிகள் நடத்தி வருகிறார்கள். தமது பலத்தை எதிரிக்குத் தெரியப்படுத்தி உளவியல் ரீதியில் அவர்களைப் பலவீனப்படுத்தி படையிலிருந்து விலகி ஓட வைப்பதன் மூலம் உளவியல் போரில் விடுதலைப்புலிகள் வெற்றிபெற்று வருகிறார்கள்.

அண்மையில் கூட விடுதலைப்புலிகள் பெருமளவு ஆயுதங்களை மட்டக்களப்புக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆட்லறிகள் தொடக்கம் நவீனரக ஆயுதங்களை அவர்கள் கிழக்கிற்கு நகர்த்தியிருக்கிறார்கள் என்ற செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டது.

வழமையாகவே ஆயுத தளபாடங்களை மிக இரகசியமாகவே நகர்த்தி வரும் விடுதலைப் புலிகள் இம்முறை வெளிப்படையாகவே பொதுமக்களை அழைத்துச்சென்று வாகரைப் பகுதியிலிருந்து படுவான் கரைப்பகுதிக்கு ஆயுத தளபாடங்களை எடுத்து வந்திருக்கிறார்கள். இது ஒருவகை உளவியல் போர் என்றே சொல்ல வேண்டும். இது படையினர் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துவதற்கே என்பதை விடுதலைப் புலிகள் வெளிப்படையாக கூறாவிட்டாலும் அதுதான் உண்மை.

''ஆயுத பலத்திலும், அதைப் பிரயோகிக்கும் தொழில் நுட்பத்திலும் எமது இயக்கம் பெரும் வளர்ச்சி கண்டிருக்கிறது. கிழக்கில் அண்மைக்காலத்தில் பலபோராளிகள் இயக்கத்தில் இணைந்து வருகிறார்கள்.

விரைவில் யாழ் குடாநாட்டையும், மட்டக்களப்பின் எழுவான்கரையையும் (நகர் உட்படகரையோர பிரதேசங்கள்) கைப்பற்றுவோம்'' — இப்படி மட்டக்களப்பு படுவான்கரையில் உள்ள அரசடித்தீவு அரசியல் பிரிவு அலுவலகத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித் திருக்கிறார்.

மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பலாத்காரமாக இளைஞர், யுவதிகளை இயக்கத்தில் சேர்த்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி கரிகாலனிடம் கேட்ட போது, ''இதில் எந்தவித உண்மையும் இல்லை. இது படையினரும், சில அரசசார்பு ஊடகங்களும் செய்யும் விஷமத்தனமான பிரசாரம்'' எனப் பதில் அளித்தார்.

''எமது இயக்கத்தில் பெருந் தொகையான இளைஞர்களும், இளம் பெண்களும் இணைந்து வருகிறார்கள். இதனால் படையினர் கலக்கம் அடைந்திருக்கிறார்கள். நாம் பலாத்காரமாக இளைஞர்களைப் பிடித்து பயிற்சி வழங்குவதாக வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள்'' என்றும் அவர் சொன்னார்.

''பலாத்காரமாக இளைஞர்களைப் பிடிப்பதாக இருந்தால் ஒரேநாளில் ஆயிரக்கணக்கானவர்களைப் பிடிக்கலாம். அது போராட்டத்துக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. பலாத்காரமாகப் பிடித்துப் பயிற்சி கொடுத்து சிறைக்கூடத்தில் அடைத்து வைத்தவர்களைக்கொண்டு போராட்டத்தை நடத்த முடியாது. அவ்வாறு பிடித்து பெரும் செலவில் பயிற்சிகளை வழங்குவது முட்டாள்தனம் ஆகும். எமது போராளிகள் சுதந்திரமாக இருப்பவர்கள். விடுமுறை யில் தமது வீடுகளுக்குச் சென்று வருகிறார்கள்.



கரிகாலன்

''இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த போது வரதராஜப் பெருமாளின் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் பலாத்காரமாக இளைஞர் களைப் பிடித்து இராணுவப் பிரிவு ஒன்றை ஏற்படுத் தினார்கள். பலாத் காரமாகப் பயிற்சி வழங்கப்பட்டவர்கள் பின்னர் துப்பாக்கிகளைத் தூக்கி எறிந்துவிட்டு ஓடினார்கள்.

''பலாத்காரமாக பிடித்து பயிற்சி வழங்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. போராட்டத்தின் மூலமே எமது இழந்த பிரதேசங்களை மீட்கமுடியும். மீட்ட பிரதேசங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தி வருகிறோம். வீட்டுக்கு ஒரு போராளியை அனுப்பினால்தான் எமது பிரதேசங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

''ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்களும் தமது கிராமங்களிலிருந்து அதிக போராளிகளை இயக்கத்திற்கு தர வேண்டும் என போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகிறார்கள். பல பெற்றோர் தமது பிள்ளைகளை அழைத்து வந்து இயக்கத்தில் இணைத்து வைத்தார்கள்.

''கடந்த காலங்களில் விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த மக்களையும் தமிழர்கள் என்ற காரணத்தினால் படையினர் விட்டுவைக்கவில்லை. ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப் பட்டார்கள். இவ்வாறு வீணாக உயிரிழப்பதை விட போராடி மடிவது மேலானதாகும்'' இப்படி மேலும் கரிகாலன் சொன்னார்.

அண்மைக்காலத்தில் 11 தமிழ்க் கட்சிகள் இணைந்து சாத்வீக போராட்டங்களை நடத்தி வருகின்றன. போர் நிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் எனக் கோரிவருகின்றன.

விடுதலைப் புலிகளுடன் பகைமை கொண்டிருந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணியினர்) போன்ற கட்சிகளின் மனமாற்றம் பற்றிக் கேட்டபோது—

''இந்த ஒற்றுமை மகிழ்ச்சி தருகிறது'' என்று கரிகாலன் பதில் அளித்தார்.

''இந்த ஒற்றுமை உணர்வும் அவர்கள் அண்மைக்காலத்தில் விடுதலைப் போராட்டம் தொடர்பாக எடுத்திருக்கும் நிலைப்பாடும் வரவேற்கத்தக்கவை. ஒற்றுமை உணர்வு மேலும் வளரவேண்டும். அவர்கள் கடந்த காலங்களை மறந்து புதிய நிலைப்பாட்டை எடுத்திருப்பதை நாம் வரவேற்கிறோம். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு விடுதலைப் போராட்டத்துக்குப் பக்கபலமாகச் செயற்பட வேண்டும் என்பதே எமது தலைவரின் விருப்பமாகும்'' எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் கணிசமான அளவு முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். முஸ்லிம்கள் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன எனக் கேட்ட போது,

''முஸ்லிம்கள் தமிழ் ஈழத்தில் வாழும் தனி இனக்குழு, அவர்கள் தனியான கலாசாரத்தைக் கொண்டவர்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அவர்கள் தனித்துவமாக வாழ்வதற்கான சகல உரிமைகளும் இருக்கின்றன. பேசுகின்ற மொழியால் ஒன்று பட்டிருக்கிறோம். இது ஒரு பலமான இணைப்பு. முஸ்லிம்களும் சிங்கள பேரினவாதத்தால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் விடுதலை கிடைக்க வேண்டும். சிங்கள பேரினவாத அடக்கு முறைகளிலிருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக, தனித்துவமாக தமிழ் ஈழத்தில் வாழும் நிலையை ஏற்படுத்துவோம். முஸ்லிம்களும் எமது போராட்டத்திற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்யாவிட்டாலும் பக்கபலமாக இருந்திருக்கிறார்கள்'' எனவும் அவர் கூறினார்.

மீண்டும் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டா எனக் கேட்ட போது, ''இப்போதைக்கு சமாதானப் பேச்சு வார்த்தைக்கான சூழல் இல்லை'' என அவர் சொன்னார்.

''தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசில் முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டார்கள். தமிழ் மக்கள் போராடித்தான் உரிமைகளை மீட்டெடுக்க முடியும். தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வை முன்வைக்கக்கூடிய அரசியல் பலம் கொண்ட சிங்களத் தலைமை ஸ்ரீலங்காவில் இல்லை. சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை அங்கீகரிக்க முன்வந்ததில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என நம்பமுடியாது'' என்றும் கரிகாலன் தெரிவித்தார்.

—துவாரகன்

## வரலாறு படைத்த புறநானூற்று தாய்மார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு ஆகிய இரண்டு கிராமங்களிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சமீபத்தில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தனர்.

தமது பிள்ளைகளைப் புலிகள் இயக்கத்திடம் ஒப்படைத்த பெற்றோரைப் பாராட்டி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

''வீட்டுக்கொரு வீரனை விடுதலைக்குத் தந்து புறநானூற்றைப் புதுப்பித்த பெற்றோர்கள்'' என்ற தலைப்பில் புலிகள் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தென் தமிழீழ மண்ணில் வீட்டுக்கொரு வீரனை நாட்டுக்காகப் பெற்றோர் விரும்பி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்''.

''தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே அரசடித் தீவு, கொக்கட்டிச் சோலைக் கிராமங்களில் புறநானூற்றுத் தாய்மார்கள் புதிய சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் ''

''ஆலய முன்றலில் தங்கள் பிள்ளைகளுக்கு வீரத் திலகமிட்டு முத்தமழை பொழிந்து 'போய்வாருங்கள் மக்களே! போர்க்களம் சென்று வாருங்கள் மக்களே!' சிங்களப் படையை வென்று வாருங்கள், பிரபாகரன் காலத்தில் விடுதலை பெறுவோம். என விழி நீர் துடைத்து வழியனுப்பி வைத்தார்கள்''.

''வீர விளை நிலத்தில் முளை கொண்ட எம் இளைஞர், யுவதிகள் உலகே வியந்து நிற்கும் விடுதலைப் போரில் விரும்பி அணி திரள்கின்றார்கள்''

இளைஞர்களே ! யுவதிகளே !!

''துடிப்புக் கொண்டெழுந்து சிங்களப் படை சீரழிக்கும் காலத்தில் இன்னமும் துவண்டு குனிந்து கிடப்பதேன்?''

''எதிரியிடம் அஞ்சி அஞ்சி அடையாள அட்டை காட்டிக் கூனிக் குறுகித் தொழுது கிடப்பதேன் ?''

''சிங்களச் சிப்பாய்களை நம்புவதா? அவர்களுக்கு அஞ்சுவதா? தினமும் கெஞ்சுவதா? விட்டெறி உன் அச்சத்தை தொட்டெடு நெஞ்சினில் வீரத்தை. ஏந்திடு கையினில் ஆயுதத்தை பார்போற்ற, ஊர் போற்ற சேர்ந்திடு தலைவன் அணியில்''.

''இருண்ட தமிழன் அழுது தொழுது வாழ்ந்த வாழ்வின் அத்தியாயத்தை முடித்துவைப்போம்''.

''தமிழ் அன்னை விலங்கை உடைத்துத் தமிழீழ நாட்டை மீட்டிட போர்ப்பறைகள் எங்கும் ஒலித்திடப் புறப்படுவோம்''.

''இன்று புலிகள் அமைத்துள்ள புதிய களத்தில் இணைந்து எமது வீரமண்ணில் விடுதலையை வென்றெடுப்போம்.

''அஞ்சி, நடுங்கி, ஓடி, ஒழிந்து, அழிந்து போவதைத் தடுக்க அலை அலையாய் அணி திரளுமாறு அறை கூவல் விடுக்கின்றோம்.''

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— நேரன்

## அஷ்ரப் ஞாபகார்த்ததினம் அனுஷ்டிப்பு

முன்னாள் அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான மர்ஹூம் எம்.எச். எம் .அஷ்ரப்பின் முதலாவது ஞாபகார்த்ததினம் இம்மாதம் 16ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

அதனையொட்டி கிழக்கு மாகாணத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

காத்தான்குடி, காங்கேயனோடை, பாலமுனை, ஏறாவூர் பிரதேசங்களில் தேசிய ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கள் பல்வேறு நிகழ்ச்சிகளையும், பிரார்த்தனை வைபவங்களையும் ஒழுங்கு செய்துள்ளன.

விசேஷ கத்முல்குர் ஆன், பயான் உட்பட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக நுஆ பிரமுகர்கள் தெரிவித்தனர்.

அமைச்சரும் நுஆ தலைவியுமான திருமதி பேரியல் அஷ்ரப் முன்னாள் பிரதிய மைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உட்படப் பலர் அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.




## மீனவர்களுக்கு முதலுதவிப் பெட்டி

கடற்றொழில், நீரியல் வளத் துறை அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இயந்திரப்படகு மீன்பிடியாளர்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதி யான முதலுதவிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் இயங்கி வரும் 115 பதிவு செய்யப்பட்ட ஆழ், கடல், வாவி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இம் முதலுதவிப் பெட்டிகளைப் பெற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. செல்வராஜா தலைமையில் இடம் பெற்ற இந்த வைபவத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எஸ். நவநீதன், மண்முனை வடக்கு பிரதேச செயலர் கே. கதிர்காமநாதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.



## சுடர் ஒளி தொடர் கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

மு.சிவநேசன்

இதழ் — 17

இதுவரை.....

அனற்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்கிறான் றொபேட். விமானப் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதுபோல் அனற்றிடம் பேச்சுக்கொடுக்கிறான். அவனது வலையில் விழுகிறாள் அனற். மைக்கேலைக் குற்றவாளியாகக் காண்பிப்பதற்கான ஆதாரங்கள் ஆய்வுகூடத்திலிருந்து திடீரென்று காணாமல்போய்விடுகின்றன. மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த மேசியின் சடலமும் தோண்டி எடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

இனி.....

மைக்கேல்தான் மேசியின் சடலத்தைக் கடத்தியிருக்க வேண்டும் என்பது டானியலின் முறைப்பாடு. ஆனால் அப்பொழுது மைக்கேல் சிறையில் இருந்தான். அதனால் டானியலின் வாதம் அடிபட்டுப்போயிற்று.

அடுத்த தவணைக்காக கோர்ட் கூடியபோது சுமரா வைத்தியசாலையில்தான் இருந்தாள். அவள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மைக்கேலுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட வேண்டும் என்று நினைத்தான் றோமன். ஆனால் கேஸை நன்றாக இறுக்கிவிட்டுத்தான் சுமரா விலகி இருந்தாள்.

மைக்கேலுக்காக ஆஜராகும் சட்டத்தரணி மேவின், சுமராவை வைத்தியசாலையில் வந்து சந்தித்து இருந்தான். ஆனால் அவனால் அவளிடம் கேஸ் பற்றி விவரமாக எதையும் பேச இயலவில்லை. அவள் எதையும் கிரகிக்கத்தக்க நிலைமையில் இருக்கவில்லை.

பெரும்பாலும் பார்வையாளர்கள் கண்ணாடிக் கதவுக்கு வெளியே நின்றுதான் அவளைப் பார்த்துவிட்டுத் திரும்பினர். அந்த நிலைமையில் மேவின் உள்ளே போய் அவளைக் கண்டிருந்தாலும் எதையும் கலந்து ஆலோசிக்க இயலவில்லை. அவள் கை அசைத்து தனது வாழ்த்துக்களை மட்டும் தெரிவித்தாள்.

மேவின் வழக்குவிசாரணை ஆரம்பிக்க முன்னர் கோர்ட்டில் வைத்து மைக்கேலிடம் பேசிக்கொண்டிருந்தான். அவனது பேச்சும் போக்கும் நம்பிக்கையைத் தரவில்லை. சுமராவின் சுகம் பற்றி மைக்கேல் கேட்டான். ''அவளது பிரச்சினைகள் தீர்க்க இயலாதவை!'' என்று மேவின் சொன்னபோது விவரங்களை மைக்கேல் அனுதாபத்துடன் கேட்டான்.

இன்று எப்படியும் தீர்ப்பு வழங்கப்படும். அது எப்படி அமையும் என்கின்ற டென்ஷன் கோர்ட் சூழலில் எல்லோரிடமும் இருந்தது. ஆனால் மேவினை நம்பியிருக்க வேண்டிய நிலைமையிலும் மைக்கேல் மட்டும் அமைதியாகவும் நிதானமாகவும் காணப்பட்டான். அவனைப் பார்த்தால் கொலையாளி என்று சொல்லக் கூசும்.

மைக்கேல் அன்று சுமராவை நம்பிய நிலையிலும் கோர்ட்டில் இவ்வளவு கம்பீரமாகத் தெரியவில்லை. இன்று அவனது தோற்றம் வானுயர இருந்தது போலொரு பிரமை தெரிந்தது. அவனைப் பார்க்கப் பார்க்க றோமனுக்கு எரிச்சலாக இருந்தது. விட்டால் பச்சையாக அவனைப் பிய்த்துத் தின்ன றோமன் தயார்.

விசாரணைகள் ஆரம்பமாகின. றோமன் ஒருதலைப்பட்சமாக நிறையவே விளாசித் தள்ளினான். தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பிபாடு கொண்டாட்டம்தானே! ஆனால் அவனது வாதத்தை எவரும் ரசித்ததாகத் தெரியவில்லை.

அடுத்து மேவின் தன் பங்குக்கு ஏதோ முணுமுணுத்தான். சுமரா இல்லாத கோர்ட் விசாரணை 'சப்'பென்றுதான் இருந்தது.

நீதிபதியின் முகத்தையே பலரும் பார்த்துக்கொண்டனர். அவரது வாயிலிருந்து உதிரும் தீர்ப்பு ஒன்றுதான் அங்கே அன்று பரபரப்பான விடயம் ஆகிறது. அவரின் பொறுமை எல்லோரையும் சோதித்துக் கொண்டிருந்தது.

'ஜூரர்களின் முகத்தில் தென்பட்ட பிரகாசம் சொல்லும் சேதி என்ன?' என்பது பலரதும் ஏக்கமான எதிர்பார்ப்பு. அவர்கள் மைக்கேலின் விடுதலையில் அக்கறையாக இருக்கிறார்களா? அல்லது பெரிய கிரிமினல் என்கின்ற வகையில் அவனைப் பழிவாங்கிவிட்ட தெம்பில் இருக்கிறார்களா? என்பது தெரியவில்லை.

ஒருவாறு தீர்ப்புச் சொல்ல நீதிபதி தயாராகி விட்டார். எங்கும் நிசப்தம். அவரது உதடுகளை ஆயிரம் கண்கள் உற்றுநோக்கின. செய்தியாளர்கள் சிலரும் அங்கே வந்திருந்தனர்.

''மைக்கேல் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் அற்றவை. அவற்றை மீண்டும் எவராவது உறுதிப்படுத்தும்வரை அவர் நிரபராதிதான். அவர் விடுதலை செய்யப்படுகிறார்.''

''டுமீல்!''

நீதிபதி தீர்ப்புக் கூறி முடிவதற்குள் அங்கே கேட்ட வேட்டொலி காதைப் பிளக்கிறது. மைக்கேல் மயங்கிச் சாய்கிறான். அவனது நெற்றியில் இரத்தப் பொட்டு மின்னிப் பின் வழிகிறது. பொலிஸார் சுற்றி மொய்க்கின்றனர்.

***

கோர்ட்டில் பார்வையாளர்கள் வரிசையில் இருந்த ஜெபன் ஒற்றைக் கையால் டானியலை எட்டிப் பிடித்திருந்தான். அவனது வேகமோ அதே விமானப்படை அதிகாரியின் வேகம்தான். எட்டிப் பிடித்தபோது டானியலின் கையிலிருந்த பிஸ்டல் ஜெபனை முகத்துக்கு நேரே குறிவைத்திருந்தது. அதுவும் மிக அண்மையாக. வெடித்தால் முகம் சிதறிவிடும் என நினைத்தான் ஜெபன்.

''கையை விடாவிட்டால் சுட்டுப் பொசுக்கி விடுவேன். பஸ்ஸில் தப்பியதுபோல இங்கு நீ தப்ப முடியாது'' என்றான் டானியல்.

மற்றக் கை இருந்திருந்தால் இவ்வளவிற்குத் துப்பாக்கியைப் பறித்திருப்பான் ஜெபன். பாவம் என்ன செய்வான்? தனது ஒற்றைக் கரத்தால் டானியலின் துப்பாக்கிக் கையைத் திருகினான். வலி தாங்காமல் தவித்த டானியல் மீண்டும் துப்பாக்கி விசையை அழுத்தினான்.

மீண்டும் கோர்ட் அதிர்ந்து ஓய்ந்தது.


மைக்கேல் விடுதலையானால் இனி அவனைப் பிடிக்க இயலாது. அவனைப் பொது இடங்களில் கண்டுபிடிப்பதும் கடினம். எனவேதான் இங்கேயே பழிவாங்கத் தயாராக வந்திருந்தான் டானியல்.

''ஆயுட் சிறையில் மைக்கேல் வாடவேண்டும் இன்றேல் அவன் வெளியே உயிருடன் போகக் கூடாது. கோர்ட் தண்டனை வழங்கத் தவறினால் நான் தண்டனை வழங்கிவிடல் வேண்டும்'' என்றெல்லாம் முடிவெடுத்து வந்திருந்தான் அவன்.

''மேசியைக் கொன்றாலும் கொன்றான், எனது காரில் கொண்டுவந்து உடலைப் போட்டானே பாவி. இப்போது புதைத்த உடலையும் கடத்தி விட்டானே! இவனைச் சும்மா விடலாமா? போனால் போகிறது. மேசி போனபின் இனி எனக்கு ஒன்றும் வாழ்க்கையில் இதமாக இல்லை. இவனைச் சுட்டுவிட்டு ஆயுள் முழுவதும் மறியலில் சந்தோஷமாக வாழலாம்'' என்று தீவிர முடிவை எடுத்திருந்தான் டானியல்.

டானியலின் காதல் அவனை இவ்வளவு தூரம் இட்டு வந்தது. கோர்ட் சரியான தீர்ப்பு வழங்காதபோது, தான் தீர்ப்பு வழங்கத் துணிந்துவிட்டது அவனது காதல். அவன் உடனடியாகக் கைது செய்யப்பட்டான். அவனது கையை ஜெபன் முறித்து எடுத்திருந்தான் போலும். வலி தாங்காமல் தவித்தான் டானியல்.

கைது செய்யப்பட்டுக் கடந்து செல்லும்போது மைக்கேலின் மீது காறித் துப்பினான் டானியல். விழிகள் சொருகிய நிலையில் விழுந்து கிடந்த மைக்கேலைத் தூக்கி அவசர முதலுதவிச் சிகிச்சைக்காக மேசை மீது கிடத்தினார்கள்.



அக்கணமே அம்புலன்ஸ் ஓசை வெளியில் கேட்டது. சிறைக்காவலர்கள் புடைசூழ அவன் அதில் ஏற்றி அனுப்பப்பட்டான்.

ஜெபனுக்கும் டானியலுக்குமான இழுபறியில் துப்பாக்கி வெடித்தபோது அது ஜெபனின் மார்பில் சன்னத்தைச் சீறிவிட்டது. அவன் துடித்து மடிந்தான். இரத்தம் குமுறிப் பாய்ந்தது. நீதிமன்றத்திலேயே இரத்தக் களரி என்றால் நிலைமையைச் சொல்லவா வேண்டும்? பதற்றம் பலமணி நேரம் பிடித்தது.

''இன்று கோர்ட்டுக்குச் சுமரா வந்திருந்தால் அவளுக்கும் டானியல் நிச்சயம் குறி வைத்திருப்பான்'' என நினைத்தான் வில்லியம். றொபேட்டும் வில்லியமும் ஒன்றாகப் புறப்பட்டார்கள். இருவரும் றொபேட் ஏஜென்சிக்கு வந்து சேர்ந்தபொழுது நேரம் மதியத்தைக் கடந்துவிட்டது. பசி இருவரையும் பிடுங்கித்தின்றது.

''இன்றைக்கு ஏதாவது உருப்படியாகச் சாப்பிட்டாக வேண்டும்'' என நினைத்த இருவரும் ஒரு பிரபலமான ஹோட்டலுக்குப் புறப்பட்டார்கள். அங்கு நுழைந்ததும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு விட்டு வெளியேறிக் கொண்டிருந்த பல பிரபல பத்திரிகையாளர்கள் இவர்களை மொய்த்துவிட்டனர்.

கோர்ட்டில் நடந்தது பற்றிய அவர்களது கேள்விகளுக்கு கண்கண்ட சாட்சிகளான இவர்களால் பதில் சொல்லாமல் தப்பிக்க இயலவில்லை. சுமராவின் உடல் நிலை, ருஷனின் நிலைவரம்; என்றெல்லாம் கேள்விகள் வளர்ந்தன.

'விடுப்புப் பிடுங்குவதில் பத்திரிகைக்காரர்களைக் கேட்டுத்தான் பொலிஸ்காரர்கள் படிக்கவேண்டும்!' என நினைத்துக் கொண்டான் வில்லியம்.

(தொடரும்)

## வாசகர் இதயம் பேசுகிறது



பக்கத்துக்குப் பக்கம் பரபரப்பான செய்திகளையும், பல்சுவை ஆக்கங்களையும் தரும் ''சுடர் ஒளியே''!

26—08—2001இல் வெளியான இதழில் ஆளும் கட்சி அம்மையாரும், எதிர்க்கட்சித் தலைவரும் முஷ்டிக்கு முஷ்டி மோதுவது போல் தந்த கேலிச் சித்திரம் (கார்ட்டூன்) அரசியல் அரங்கில் நிலவும் பனிப்போர் நிலைமையை அழகாக உணர்த்தியது. தலவாக்கலை மாணவனின் கொலைக்குக் காரணமானவர்களுக்கு இடமாற்றம் கொடுத்தது ஓரளவு திருப்தியைத் தந்தாலும் நிறைவான திருப்தியைத் தரவில்லை.

எஸ்.டிலுக்ஷன், வவுனியா.

சுவையான தகவல்களைத் தரும் சுடர் ஒளிக்கு முதலில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பித்தன் பதில்கள், விளையாட்டுத் தகவல்கள், அரசியல் அம்பலம், சிறுவர் கதைகள் எனப் பல இனிமையான அம்சங்களை வாராவாரம் தந்து சுடர் பரப்புகிறாய். உனக்கு எனது நன்றிகள்.

எம்.எஸ்.பாஸீதா, முள்ளிப்பொத்தானை.

பத்திரிகை வரலாற்றில் தனக்கென்று ஒரு தனிப் பாணியுடன் உண்மைச் செய்திகளைத் துணிவுடன் தந்து அசத்துகிறது 'சுடர் ஒளி'. அரசியல் அம்பலம் சபாஷ் போடவைக்கிறது. மற்றும் ரமணன் கள நிலைமைகளை ஆராயும் விதம் மிகச் சிறப்பானது. பாராட்டுக்கள் அனைத்தும் 'சுடர் ஒளி'க்கே!

பி.பிறேம், வவுனியா.

பொழிந்து கொண்டிருக்கும் அடை மழையில் என் மீது விழுந்த ஒரு சிறு மழைத்துளியாக இருக்கும் சுடர் ஒளியே வளமான ஆக்கங்களைத் தாராளமாகத் தரும் உன் திறமை கண்டு தலை வணங்குகிறேன்.

சிபி, மீசாலை.

வாசகர்களின் நெஞ்சங்களில் பெரியதோர் இடத்தைப் பிடித்திருக்கும் ''சுடர் ஒளி'' பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துக்கள்.

கு.கோபிலன், யாழ்ப்பாணம்.

தரமான ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து வரும் ஒளிச் சுடராய் விளங்கும் சுடர் ஒளியே குறுகிய காலத்தில் நீ அபார வளர்ச்சி அடைந்து விட்டாய்!

நிலைக்கட்டும் உன் சிறப்பு!

வளரட்டும் உன் பணி!!

விவேகானந்தன், டிக்கோயா.

சுடர் ஒளி பத்திரிகை வாசிப்பதில் மிகுந்த ஆர்வமுள்ளவன் நான். அந்தவகையில் சுடர் ஒளியின் அனைத்து ஆக்கங்களுமே சிறப்பானவை. கவி மழையில் எம்மை நனைய வைக்கும் உன் திறன் கண்டு மெச்சுகிறேன்.

எஸ்.சுரேஷ், அக்கராயன்குளம்.

நான் சுடர் ஒளி வார வெளியீடு படித்து வருகிறேன். மிகவும் தரம் வாய்ந்த இதழாக சுடர் ஒளி விளங்குகின்றது. இதில் வெளிவரும் அம்சங்கள் அனைத்துமே அருமையிலும் அருமை. அதிலும் 19—08—2001 அன்று வெளியான இளஞ் சுடர், பித்தன் பதில்கள், கவிதைப் புனல், தேரடி அரட்டை, இலங்கையில் போர் நிலைவரங்கள் ஆகியவை அசத்தலாக இருந்தன. பொய் நிலைகளை அகற்றி உண்மை நிலைகளை வெளியிடும் சுடர் ஒளி மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

இ.கெங்கா, கிளிநொச்சி.

இரத்த சமுத்திரமே திரண்டு வந்தாலும் சத்தியத்தை மூழ்கடிக்க முடியாது என்கின்ற சத்திய வசனம் இன்றும் சாகாவரம் பெற்றுச் சத்துப் பெற்றுள்ளது என்றால் அதற்குக் காரணம் சுடர் ஒளியே. சுடர் ஒளியின் சுயகௌரவம் எக்கால கட்டத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் சார்பில் உரிமை நிறைந்த வேண்டுகோளாய் முன்வைக்கிறேன்.

ப.பிறேமானந்தன், கல்முனை — 01.

''சுடர் ஒளி'' வாரமலரின் தீவிர அபிமானி நான். இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்க பல தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எழுத்து விபசாரம் செய்கின்றன. என்றாலும் ''சுடர் ஒளி'' போன்ற பத்திரிகைகள் வெளிவரும் போது, தீயவர்களின் பருப்பு வேகப்போவதில்லை. தமிழ்த் தேசம் விடிவு பெறும்போது வெற்றி வரலாற்றுப் பாதையின் படிக்கற்களாக ''சுடர் ஒளி''யின் சேவை திகழும் என்பது மட்டும் உண்மை.

ஆ.நித்திலவர்ணன், யாழ்ப்பாணம்.

விளையாட்டுச் செய்திக்கு ஒரு முழுப் பக்கம் ஒதுக்கி எம் போன்ற வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் சுடர் ஒளியே உன் சேவைக்கு என் வாழ்த்துக்கள்.

அ.மோசஸ், மருதனார்மடம்.

பித்தன் பதில்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன. பூடகமான வகையில் பதில்களைத் தந்து சுவாரஸ்யத்தை அதிகரிக்கச் செய்கிறாய்! உன் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

சி.தெய்வேந்திரன், அல்வாய்.


ஹிட்டான பழைய, புதிய பாடல்களையும் திரை நட்சத்திரங்களினது முகவரிகளையும் பிரசுரிக்கமாட்டீர்களா? ஆவலுடன் காத்திருக்கிறோம்.

'சுடர் ஒளி' வாசகர் வட்டம், கொட்டாஞ்சேனை.

# சுடர் ஒளி சிறுகதை

# பொற்கால்

சென்னை மாநகரம் பகலை வழியனுப்பி இரவை வரவேற்கத் தயாராகிக் கொண்டிருந்தது. அண்ணா சாலை அன்றாட அலுவல்களை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் மக்களைத் திணித்த வாறு சிரமப்பட்டு நகரும் பலதரப்பட்ட வாகனங்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. இந்தத் தள்ளாத வயதிலும் பல்வேறுபட்ட வியாதிகளையும் சகித்துக்கொண்டு இன்றும் அண்ணாசாலையில் இருக்கும் எனது அலுவலகப் பணிகளை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு வீடு




திரும்பத் தயாராகினேன்.

என்னைப்பற்றிச் சொல்வதென்றால், இலங்கையில் இருந்து அகதியாக்கப்பட்டுச் சிங்காரச் சென்னையில் சிக்கனமாகச் சீவியம் நடத்தும் தங்கத் தமிழன். யாழ்ப்பாணத்திலே ''வெக்டர் வெங்கடேசன்'' என்றால் தெரியாதவர் கிடையாது. பிரபலமான கணித ஆசிரியர். உயர்தர மாணவர்களுக்கு ''வெக்டர்'' என்ற முறையில் கணிதவிளக்கம் கொடுப்பதில் வல்லவன் என்பதால் வெக்டர் என்ற பட்டப்பெயர் தானாகத் தொற்றிக் கொண்டது.

அறுபது வயதை அண்மித்திருந்தாலும் பி.எஸ்.சி பட்டம் பெற்றிருந்ததால் புலம்பெயர்ந்து வாழும் இந்தச் சென்னையிலும் சுலபமாக ஒரு கட்டட ஒப்பந்தக்காரர் கம்பனியில் வேலை தேடிப்பெற முடிந்தது. ஈழத்தில் எனது வளர்ப்பில் உருவான பொறியியல் விற்பன்னர்கள் ஏராளம். அதனால் எங்கு சென்றாலும் எனக்குச் செல்வாக்கிற்குக் குறைவில்லை.

இருபத்தொன்பது வருட ஆசிரியப் பணியில் நான் சந்தித்த மாணவர்களின் சிறப்பைச் சொல்வது கடினம். இலங்கையின் சிரசெனத் திகழ்வதால் நான் யாழ் மண்ணில் இத்தனை திறமைசாலிகளோ எனப் பலமுறை நான் வியந்ததுண்டு. யாழ்ப்பாணத்தவர்கள் திறமைசாலிகள் மட்டுமல்ல வந்தாரை வாழவைக்கும் சிறந்த குணம் படைத்தவர்கள். விருந்தோம்பலில் விவசாயம் செய்பவர்கள். அதனால் தானோ என்னவோ இன்று அகதிகளாக்கப்பட்ட போதும் அரவணைக்கவென அண்டை நாடுகள் அன்புக் கரம் நீட்டி வரவேற்கின்றன.

இந்த வகையிலே தமிழ்நாட்டுச் சகோதரர் ஒருவரின் பெருந்தன்மையிலே தான் நான் தற்பொழுது பணிபுரிகின்ற அலுவலகத்தில் இந்த வேலை கிடைத்தது.

கைக்கடிகாரத்தைத் திருப்பியபோது மணி 5.45 என்றது. நான் மந்தைவெளிக்குப் போய்ச்சேர இன்னும் அரைமணி நேரம் பிடிக்கும். பஸ்ஸில் நெரிசல். வௌவால் போன்று தொங்கிக்கொண்டு செல்வது என்வயதுக்கு ஒத்துவராது ரிக்ஷாவண்டியில் செல்வதுதான் எனக்கு உகந்தது. வழமைபோல் இன்றும் கண்ணில்பட்ட சைக்கிள் ரிக்ஷாவை கைதட்டிக் கூப்பிட்டேன். ஓட்டிச்சென்றவன் ஓரமாக நிறுத்தியவுடன் ஏறி உட்கார்ந்தேன். வண்டியில் எதையோ குடைந்து கொண்டிருந்த வண்டிக்காரன் திரும்பி, ''எங்க போக வேணுமையா?''. என்று தூய இலங்கைத் தமிழில் கேட்டான். இலங்கைத்தமிழைக் கேட்டபோதே என்னுள் இனம்புரியாத பூரிப்பு. இந்தப் பூரிப்பு நீண்டநேரம் நிலைக்கவில்லை. என் முகத்தைச் சற்று நேரம் உற்றுநோக்கிய ரிக்ஷாக்காரன்,

''சேர் .... நீங்கள் வெக்டர் வெங்கடேசன் தானே'' என்றான். ''ஓமோம்..'' என்று கூறிக்கொண்டு எனது மூக்குக் கண்ணாடியைச் சீர்செய்தபடி அவனைப் பார்த்தபோது நான் அதிர்ந்து போனேன்.

என்னிடம் மூன்று வருடங்களுக்கு முன்பு கல்விகற்று நான்கு அதிவிஷேச சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் 2ஆம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 5ஆம் இடத்தையும் பெற்று எனக்குப் புகழ்சேர்த்த ''சுதர்சன்''. அவன்தான் சந்தேகமே இல்லை.

எப்பொழுதும் ஷேவ் செய்து பளபளத்த முகத்துடன் ஆடம்பரமில்லாமல் அதேவேளை நேர்த்தியுடன் ஆடை அணிந்துவரும் சுதர்சனை இன்று தாடியும், மீசையும் தூசிபடிந்த பழைய சாரமும் சேட்டுமாகக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்து போனதில் ஆச்சரியமேதும் இல்லை.

விரைவில் சுதாகரித்துக் கொண்ட சுதர்சன் என்னைச் சமாதானப்படுத்தினான். ''சேர், நடந்த சண்டையில என்ர அம்மாவையும், அப்பாவையும் பறிகொடுத்திட்டன்.... (அவன் கண்கள் சிவந்தன. ஒளியிழந்த அவனது முகத்தை நோக்க முடியவில்லை) ''என்ர மூண்டு தங்கச்சிமாரையும் கூட்டிக்கொண்டு இஞ்ச வந்திட்டன் என்றான். இங்கு பொருளாதார நெருக்கடியால் இந்த தொழிலில் ஈடுபட நேர்ந்ததையும் என்னைத் தன் வண்டியில் ஏற்றி மிதித்தவாறே கூறிக்கொண்டு வந்தான்.

பொறியியல் வல்லுநராகப் பல்கலைக் கழகம் சென்று ஆய்வுகளை நடத்த வேண்டியவன் இன்று பரதேசியாக ரிக்ஷா ஓட்டுகிறான். என்னால் அதை ஜீரணிப்பதே கடினமாக இருந்தது. தனது சோகவரலாற்றைக் கூறியபடியே வந்ததாலும் அவன் கூறிய விடயத்தில் நான் என்னையே மறந்திருந்ததாலும் எனக்கு மந்தைவெளியை அடைந்துவிட்டது புரியாமல் போனது.

வண்டியை ஓரமாக நிறுத்திய சுதர்சன் நான் இறங்குவதற்கு வசதியாகக் கையைக் கொடுத்து உதவினான். வண்டியை விட்டு இறங்கும்போதுதான் தெருவிளக்கில் அவனது வலதுகால் பளபளப்பதைக் கண்டேன். மரக்கட்டை போல.... ஆம் மரக்கட்டையே தான். அவன் பொருத்தியிருந்தது பொய்க்கால். நான் ஆச்சரியத்துடன் அவனது கால்களையே நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்ட சுதர்சன்

''என்ன சேர் அப்பிடிப் பாக்கிறியள். அம்மா, அப்பாவைப் பறிகொடுத்த அதே குண்டுவீச்சில் என்ர வலது காலும் போட்டுது. இது பொய்க்கால்தான் சேர்'' என்றான்.

எனக்கு நெஞ்சு வலித்தது. மரக்கால் பூட்டிய என் மாணவன் மிதித்து இயக்கிய ரிக்ஷா வண்டியில் நான் சுகமாக உட்கார்ந்து வந்ததை நினைக்க உடம்பே சிலிர்த்தது.

ஏதோ ஞானிபோல பல அர்த்தங்களுடன் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு நான் அவனுக்குக் கொடுத்த விசிற்றிங் காட்டை பத்திரப்படுத்திக் கொண்டு பின்னர் என்னைத் தொடர்புகொள்வதாகச் சொல்லி விரைந்தான் சுதர்சன். இது பொய்க்கால் அல்ல சுதர்சன், உன் சகோதரிகளைக் கேட்டால் அவர்கள் அடித்துக் கூறுவார்கள் இது ''பொற்கால்'' என்று. எனது நா என்னையறியாமல் பேசியது. என் கால்கள் எனது வீட்டை நோக்கி நகர்ந்தன.

(யாவும் கற்பனை)

## ஒழுக்கு வீடு

வானம் அழும் போதெல்லாம்
எனது குடிசையும் சேர்ந்தழுகின்றது
சோகம்தாங்காது.

கூரையின் கண்களிலிருந்து
கொட்டுகின்ற நீரைத்தாங்கும்
மண்குடங்களும்
அலுமினியச் சட்டிகளும் கூட
குடிசையின் சோகத்தைப் பார்த்து
தமக்குள் தேக்கிவைத்த நீரையும்
கொட்டியழுகின்றன
வெளியே
சொட்டுச் சொட்டாக.

ஏழ்மை எனக்கு மட்டுமா?
இல்லை!
எனது குடிசைக்கும்தான்.

அதுக்கு நான்
முதன் முதலாகவாங்கி அணிவித்து
அழகுபார்த்த கூரை(ர)றப் புடைவை
இன்று
கந்தலாய்க் கசங்கிப்போன நிலையில்
கண்ணீர் நிறைந்த வாழ்க்கையாய்
வாழ்கிறது
என்னைப்போல.

என்ன செய்வது....?
பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்
என்பதுபோல்
என்னோடு சேர்ந்த குடிசையிலும்...
குடிசையோடு சேர்ந்த என்னிலும்....
மணம் வீசுகிறது
என்றுமே மறக்க முடியாத ஏழ்மை.

— அலெக்ஸ்பரந்தாமன்

## என் காது பிறந்ததடி!

கந்தனது தம்பியின் வாய்
கண்டபடி கதைக்கும் — அதை
கந்தலின்றிக் கேட்பவர்கள்
காது ரொம்பப் புளிக்கும்!

முந்திவரு கோபம் வர
மூள் வதொரு சண்டை — என்
முந்தலிலே தொடங்குவதா — ஓம்
மூண்டதுவே சண்டை!

வந்தவர்கள் போனவர்கள்
வந்துநின்று பார்த்தார்
வாய்மொழியின் வேகத்திலே
வார்த்தைகளும் சேர்த்தார்

தீர்ப்பதற்கு நான் புகுந்து
தீர்வெடுக்கப் பார்த்தேன்
தீயவர்கள் தீர்ப்பு என்று
தின்றனர் என் ''காது''

சண்டை ஒன்று கண்டால் — நீவிர்
தப்பும்வழி கண்டு — அதைத்
தள்ளிநின்று பார்ப்பதுதான்
நிரம்ப நிரம்ப நன்று!

— கி. குருபரன்

## குண்டு மழை

வானிலை அறிவிப்பின்றி
வானூர்தி வலம்வர
குண்டு மழைபெய்கிறது!
குளம், கிணறு குழிகள்
நிறையவில்லை;
குடியிருப்புக்களும்
கோயில்களும்
தரைமட்டமாகிவிடுகின்றன.

நா. ஜெயபாலன், பிபிலை.

## அழித்து விடு

ஏய் யுத்தமே
உனக்கு இன்னும்
இரத்த தாகம்
தீரவில்லையா?
உன் மடியில் வைத்து
எத்தனையாயிரம்
மனிதர்களின்
கழுத்தை முறித்து
குருதி குடித்து விட்டாய்
இன்னும்
தாகம் தீரலையா?
உன் பசிதீர
இன்னும் எத்தனை
பாவமறியா பிஞ்சுள்ளங்களின்
உயிர்களைக் கேட்கிறாய்.
உன் கோரப்பிடியில் சிக்கி
மரண ஓலமிடும் சத்தம்
உன் காதுகளுக்கு
இசையாகவா இருக்கின்றது
அடங்கி விடு — நீ
அழிந்து விடு
இனியும்
நான் இழப்பதற்கு
என்னிடம் உறவுகள் இல்லை.
நின்றுவிடு போரே நின்றுவிடு.

முல்லை நிலா ஜவ்பர்,
பெருக்குவற்றான்.

## துணிந்து பார்

இருள் சூழ்ந்த எம் நாட்டில்
வெடி ஓசை கேட்கிறதே பார்!
எம் மக்கள் பிணங்களாய் போனாலும்
எழுந்து நின்று போரிடுவர் பார்!
அசுரர்களின் ஆணவச் சிரிப்பைப் போல்
ஷெல் சத்தம் முழங்குகிறதே பார்!
சமாதானம் வந்தாலும் போனாலும் நம்
மக்களைக் காத்திடவே துணிந்து பார்!

கேசவரூபன், அல்வாய்.

## காதல்

அன்புக்கு ஒரு பெயர் காதல்
காதலுக்கு ஒரு பெயர் அன்பு
இரண்டுக்கும் ஒரு பெயர் பாசம்
பாசத்துக்கு ஒரு பெயர் நேசம்
நேசத்துக்கு ஒரு பெயர் பக்தி
பக்திக்கு ஒரு பெயர் பணிவு!

காதலால் வருவது மோதல்
மோதலால் வருவது சாதல்
சாதலால் வருவது ஈதல்
ஈதலால் வருவது ஓதல்
ஓதலால் வருவது காதல்!

கவிமணி இராசையா ஸ்ரீதரன்,
யாழ். நாச்சிமார் கோயிலடி.

## செயற்படு

செயற்படு
பெண்ணே
சுதந்திரம் பற்றி
எழுதியதை எரித்து விடு!

விடுதலைக்கு
குரல் கொடுக்கிறாயா?
இப்போதே நிறுத்து!

அவற்றை
உன் மூதாதையரும்
செய்தார்கள்.

நீ
புதுமைப் பெண்
அதை நிரூபிக்க புறப்படு

உன்
ஒவ்வொரு அசைவிலும்
வெற்றி முரசொலிக்கட்டும்.

ஃபௌசீ, கண்டி.

# அக்கா வழி தன் வழி அசத்துவேன் என்கிறார் மோனல்


மோனல்

'பார்வை ஒன்றே போதும்' படத்தில் அறிமுகமாகியவர் மோனல். அக்கா சிம்ரனின் அடியொற்றி தமிழ்த் திரையுலகில் களமிறக்கப்பட்டவர்.

'பார்வை ஒன்றே போதும்' படத்தில் நடித்த போது சிம்ரன் வழியில் பரபரப்பான இடத்தை பிடிப்பார் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டவர்.

ஆனால் படம் வெளிவந்ததும் அந்த நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டு 'பத்ரி', 'லவ்லி' படங்களில் இரண்டாம் கதாநாயகியாக நடித்தார். 'ஐஸ்வர்யா', 'சமுத்திரம்' படங்களில் மூன்றாவது கதாநாயகியாகி உள்ளார்.

இதற்கிடையில் ''இந்தியன் மூவி நியூஸ்'' என்ற சிங்கப்பூரில் வெளியாகும் பிரபல சினிமா இதழ் ஒன்றின் விருது வழங்கும் விழாவிலும் பங்கு பற்றி சிங்கப்பூர் ரசிகர்களைக் குஷிப் படுத்தியதோடு 'இந்தியன் மூவி நியூஸ்' இதழ் வழங்கிய சிறப்பு விருதினையும் பெற்றிருக்கிறார். அது சரி அக்கா சிம்ரனைப் போல் மோனலுக்கு அதிரடி முன்னேற்றம் கிடைக்கவில்லையே! தமிழ்த் திரையுலகில் காலூன்ற முயற்சிக்கிறார் என்பது மட்டும் புரிகிறது. இந்த நிலைக்கு என்ன காரணம்?

மோனலுடன் உரையாடிய போது,

கே:— கதாநாயகியாக அறிமுகமான நீங்கள் இரண்டாம் மூன்றாம் கதாநாயகி ரேஞ்சுக்கு இறங்கி விட்டீர்களே!

ப:— இதில் என்ன இருக்கிறது. நடிக்க என்று வந்து விட்ட பின்னர் கதாநாயகியாகமட்டுமே நடிப்பேன் என்று அடம் பிடித்துக் கொண்டிருக்க முடியாது. அப்படிச் செய்தால் அந்தப் படத்தில் வேறு நடிகையை நடிக்க வைத்து விடுவார்கள்.

கே:— அதற்காக ஒரு பாடலில் நடிக்கக் கேட்டாலும் சம்மதிப்பீர்களா?

ப:— சம்மதிப்பேன். அதில் என்ன தவறு இருக்கிறது. பாடல்கள்தான் ரசிகர்களிடம் அதிகம் ரீச் ஆகி வருகின்றனவே. அக்கா சிம்ரன் கூட 'அந்தப்புரம்', 'எதிரும் புதிரும்' போன்ற படங்களில் ஒரு பாடலுக்கு ஆடியிருந்தார்.

கே:— அக்கா, அக்கா என்று அக்காவின் புராணம் பாடுகிறீர்களே! உங்களுக் கென்று ஒரு கொள்கை கிடையாதா?

ப:— வயதில் மூத்தவர்களைப் பின் பற்றி நடக்கிறேன். அக்கா எனக்கு அம்மா மாதிரி. நல்ல அறிவுரைகளைச் சொல்லும் மூத்த சகோதரி. அக்கா வழிதான் என் வழியும்!

கே:— வேறு மொழிப் படங்களில் நடித்த அனுபவம் இருக்கிறதா?

ப:— உண்டு. தெலுங்கில் நடித்திருக்கிறேன். தமிழில் வெளி வந்த 'பத்ரி' படமும் நான் நடித்த தெலுங்குப் பதிப்பின் காட்சிகள்தான். கன்னடத்தில் 'இந்திர தனுஷ்' படத்தில் நடித்திருக்கிறேன். இந்தியிலும் நடிக்கிறேன். ஆனால் மலையாளத்தில் தான் இன்னும் நடிக்கவில்லை.

கே:— இந்தியில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளீர்களாமே!

ப:— ஆமாம்! 'மாதுஜே சலாம்' என்ற படத்தில் காஷ்மீரில் வசிக்கும் முஸ்லிம் பெண் கரெக்டரில் நடிக் கிறேன். அந்தப்படம் மும்பையில் வெளியாகும் வரை வேறு இந்திப் படங்களில் நடிக்கக் கூடாது என்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளேன்.

கே:— கால்ஷீட் குளறுபடி செய்கிறீர்கள், அதிக பந்தா காட்டுகிறீர்கள், படப்பிடிப்பு நேரங்களில் இடையி டையே காணாமல் போகிறீர்கள் என்ற பல குற்றச்சாட்டுக்கள் உங்கள் மீது உள்ளதே!

ப:— நான் வேண்டுமென்றே எதையும் செய்யவில்லை. ஆனால் முன்னர் தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் கால்ஷீட் குளறுபடி ஏற்பட்டிருக்கலாம். இப்போது அப்படி எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்.

கே:— அக்கா சிம்ரனின் திருமணம் எப்போது?

ப:— ப்ளீஸ் இதை அவரிடமே கேளுங்களேன்.

கே:— அக்கா வழி உங்கள் வழி என்று கூறும் நீங்கள் காதலிலும் அவர் வழியைத்தான் பின் பற்றுவீர்களா?

ப:— இப்போது சரியாகச் சொல்லத் தெரியவில்லை.

கே: உங்கள் தங்கை ஜோதியும் தம்பியும் சினிமாவில் நடிக்கப் போகிறார்களாமே!

ப:— என் தங்கை ஜோதியை இப்போது தான் மேக்கப் டெஸ்ட் எடுத்திருக் கின்றனர். இன்னும் எந்தப் படங்களும் ஒப்பந்தமாக வில்லை. தம்பி ஸ்மித் கம்பியூட்டர் படிக்கிறான்.

—ஷாம்


ஜோதி

## தொந்தியின் தொந்தரவு!


ஜோதிகா

பொது விழாக்களுக்கு நடிகைகள் விதவிதமான உடைகளில் வந்து கலந்து கொள்கிறார்கள். நடிகை ஜோதிகாவுக்கும் விதவிதமான ஆடைகளில் வருவதற்கு ஆசைதான். ஆனால் அவரது தொந்தி தொந்தரவு கொடுக்கிறதாம். அப்படி வந்தால் அவருடைய அந்த உடைகளே தொப்பையைக் காட்டிக் கொடுத்து விடுமாம். அதனால் பொது விழாக்களுக்கென விஷேடமான யூனிஃபார்ம் ஒன்றை வைத்திருக்கிறார். கறுப்புக் கலர் டிரவுஸர், மேலே சாம்பல் கலர் கோட் இப்போதெல்லாம் அதிகமான விழாக்களுக்கு இந்த உடையிலேயே வருகிறார்.

* பிரபல பின்னணிப் பாடகர் ஹரிஹரன் முதன் முறையாகக் கதாநாயகனாக அறிமுகமாகிறார். அந்தப் புதிய திரைப்படத்தின் பெயர் 'பவர் ஆப் உமன்' பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இசைக் கலைஞனின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றிய கதை. குஷ்பு, கௌசல்யா முக்கிய பாத்திரமேற்று நடிக்கிறார்கள்.

## அம்பலமாகும் அந்தரங்கங்கள்!

தமிழ் நாட்டில் பிரபல அரசியல் வாரிசான பெரும் புள்ளி அவர். நீண்டகாலம் ரஷ்யாவின் குடியரசுத் தலைவராக இருந்தவரின் பெயர் கொண்டவர். லஞ்ச வழக்கில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார். சம்பந்தப்பட்டவர் எதுவும் பேசாதிருந்தாலும் விட்டேனா பார்! என்ற ரீதியில் புலனாய்வுகள் துரிதமாக்கப்பட்டுள்ளன.

தலைவரின் வலது கையாகத் திகழ்ந்தவரும் அனைத்து வரவு செலவுக் கணக்குகளையும் அறிந்தவரும் சினிமாக்காரர் முதல் முக்கிய புள்ளிகளிடம் தொடர்பு வைத்திருந்தவர் எனக் கருதப்படுபவர் சமீபத்தில் மரணமடைந்து விட்டார். அவரது மரணம் தற்கொலை என்று கூறப்பட்டாலும் கொலையாக இருக்கலாமோ என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

''தோண்டத் தோண்ட ஊற்றெடுக்கும் ஊற்றுப் போல் பிரபலத்தின் அந்தரங்கங்கள் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசியலில் சினிமாத்துறையினர் ஊடுருவுவது ஒன்றும் புதிய விடயமல்லவே. பிரபலத்தின் ஊழல்களிலும் சினிமா டைரக்டர், நடிகைகள் தொடர்பு பட்டிருக்கிறார்கள் என புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

லஞ்சம் பெற்ற பலகோடி ரூபாய்கள் பல ரூபங்களில் நடமாடியிருக்கிறது.

சிங்கப்பூர், மலேசியா, கனடா என்று வெளிநாடுகளில் பலகோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டதோடு சிலகோடிகள் டீ.வி சீரியல் மற்றும் படத் தயாரிப்பிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பிடப்படக் கூடியவர்கள் டீ.வி சீரியல்களை இயந்திரமாகவும் தந்திரமாகவும் எடுத்து வரும் 'குட்டி'யான 'மினி' நடிகை. இவர் எடுத்த 'கிருஸ்ணதாஸி' தொடரினால் புகழின் உச்சிக்கே சென்றவர்.

மற்றவர் கலப்பட பெற்றோல் புகழ் காஜாவான தாஜா டைரக்டர். இதற்கு நன்றிக் கடன் செலுத்தும் முகமாக இந்த டைரக்டர்களுக்குத் தொடர்புடைய பல முன்னணி கோலிவுட், பாலிவுட் நடிகைகள் இலவச இணைப்பாக குறிப்பிட்ட பெரும்புள்ளி களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனராம்.

கலப்பட பெற்றோல் தயாரித்து அதிபதியானவர் காஜாவான தாஜா டைரக்டர். இவர் திடீர் லட்சாதிபதியாகி 'கோபாலா கோபாலா', 'பொற்காலம்', 'ஆனந்தப் பூங்காற்றே', 'வாஞ்சி நாதன்' போன்ற படங்களைத் தயாரித்தவர்.

இவருக்கு கடந்த ஐந்து வருட காலமாக பைனான்ஸ் செய்வது இந்த அரசியல் வாரிசுதானாம். 'பெண்' டைரக்டர்களில் 'சூரப்புலி' என்று பெயரெடுத்தவர் குட்டியான 'மினி'. இவர் தனது டீ.வி சீரியல்களை தென்னாபிரிக்கா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் எடுத்தார். இதற்கும் செலவு செய்தவர் அரசியல் வாரிசுதானாம்.

தொழில்துறைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக தன்மகள் கீர்த்தனையோடு குடியரசுத் தலைவரின் பெயர் கொண்டவரிடம் சரணடைந்தாராம் 'குட்டி' நடிகை. இதன் பின்னணியாகத்தான் மகளை கதாநாயகியாக்கி இரண்டு படங்களுக்கு 29.04.01 இல் பூஜையும் போட்டார் 'மினி' நடிகை.

இத்தனைக்கும் பைனான்ஸ் கொடுத்த தொகைக்கான வரவு செலவுக் கணக்குகள் அரசியல் தலைவரிடம் இல்லையாம்.

இதற்கிடையில் காரணம் தெரிவிக்காமல் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த 'மினி' நடிகை பூஜை போட்ட படங்களில் ஒன்றான 'காதலே சுவாசம்' படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியுள்ளது. கார்த்திக்— மீனா ஜோடியுடன் குட்டி 'மினி'யின் மகள் கீர்த்தனா — அரவிந்தன் (கிருஸ்ணதாஸி தொடரில் நடித்தவர்) நாசர், ரமேஷ் கண்ணா, வையாபுரி, கல்பனா ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தின் பெரும்பாலான காட்சிகள் தென்னாபிரிக்காவில் படமாக்கப்பட இருப்பதனால் கார்த்திக், மீனா டைரக்டர் பிரபுநேபால் உட்பட்ட கலைஞர்கள் தென்னாபிரிக்கா சென்றுள்ளனர். இப்படத்திற்குக் கதையை எழுதியிருப்பவர் குட்டியான 'மினி'. திரைக்கதை அமைத்து இயக்குகின்றார் பிரபுநேபால். இவர் 'மினி' நடிகையின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.


அரவிந்தன், கீர்த்தனா

## மறுபக்கம்

## வெளிநாட்டில் சூப்பர் ஸ்டார்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் 40 நாள் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு கடந்த மாத இறுதியில் வெளிநாடு சென்றிருக்கிறார்.

அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இச்சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் சூப்பர் ஸ்டார் அங்கிருந்தவாறே புதிய படத்தின் கதை மற்றும் இயக்குநரை முடிவு செய்வார் என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சுற்றுப் பயணத்திற்கு ரசி கர்களே காரணம் என்று கூறப்படுகின்றது.

'படையப்பா'விற்குப் பின் புதிய படமெதுவும் சூப்பர் ஸ்டார் தரவில்லை. சூப்பர் ஸ்டாரின் படத்தை எதிர்பார்த்து ஏமாந்து போன ரசிகர்கள் புதிய படத்தில் நடிக்கக் கேட்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதுடன் சூப்பர் ஸ்டாருக்கு கடிதமும் எழுதினார்கள். படத்தயாரிப்பாளர்களும் அவரைச் சந்தித்து கால்ஷீட் கேட்டிருக்கிறார்கள்.

இதனால்தான் திடீரென வெளிநாடு சென்றுள்ளார் சூப்பர் ஸ்டார். நவம்பர் மாத இறுதியில் நாடு திரும்பும் அவர் புதிய படம் பற்றிய அறிவிப்பை உடனடியாக வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




பானுப்பிரியா

ஸ்ரீ சர்வ சாய் பிலிம்ஸ் தயாரிக்கும் 'சத்யசீலன்' படத்தின் மூலம் மீண்டும் தமிழ் ரசிகர்களைச் சந்திக்கப் போகிறார் பானுப்பிரியா.

வெங்கடேஷ் கதாநாயகனாக இரட்டை வேடங்களில் நடிக்கிறார். இவர்களுடன் சௌந்தர்யா, ரமாபிரபா, ஜெயப்பிரகாஷ் ரெட்டி, சத்திய பிரகாஷ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இப்படத்தினைத் தயாரிப்பவர்கள் ராஜ்கிருஷ்ணா, ஜீவா, ஸ்ரீகாந்த் இதன் வசனம் — பி.ரவிசங்கர், எடிட்டிங் — மது, இயக்கம் — சங்கர்.

## அஜித் பேட்டி மாதவன் பதிலடி

நடிகர் மாதவன் மென்மையான காதல் கதைகளில் நடித்துப் புகழ்பெற்று விட்டதனால் அவரை ரொமான்டிக் ஹீரோவாகவே முத்திரை குத்திவிட்டார்களாம்.

அஜித் கூட பேட்டியொன்றில் ரொமான்ஸ் செய்வதற்கு மாதவன் இருக்கிறார் என்று குறிப்பிட்டார். இதனைக் கேள்விப்பட்ட மாதவன்,

''எனது தோற்றத்திற்கு ரொமான்ஸான வேடங்களே ஒத்துப் போகிறது. அதனால் அத்தகைய வேடங்கள் என்னைத் தேடி வருகின்றன.

ஆனால் அக்ஷன் வேடங்கள் கிடைத்தால் நிச்சயம் அக்ஷனிலும் அசத்துவேன்'' என்று ஸ்டேட்மெண்ட் விடுத்து வருகிறாராம்.



மாதவன்

## கள்ளழகி காதல்! சிக்கலில் டைரக்டர்!!



டைரக்டர், நடிகை காதல் லிஸ்டில் புதிதாகச் சேர்ந்திருக் கிறார்கள் கள்ளழகி நாயகியும் இரண் டெழுத்து டைரக்டரும்.

இப்போது இந்த இரண்டெழுத்து டைரக்டர் இயக்கிவரும் மூன்றெழுத்து புதிய படத்திலும் 'கள்ளழகி' நாயகி தான் கதாநாயகியாக நடிக் கிறார்.

விஷயம் மெல்ல மெல்லக் கசிய ஆரம்பித்ததும் நெருங்கியவர்கள் டைரக்டரிடம் அக்கறையாக விசாரித் தார்களாம்.


''என்னைச் சாதாரண பொண்ணே காதலிக்க மாட்டா. இப்படியிருக்க அவங்க எப்படி! என் மூஞ்சியெல்லாம் நடிகையை லவ் பண்ணும் ரேஞ்சிலேயா இருக்கு!'' என்று விசாரித்தவர்களிடமே எதிர்க்கேள்வி கேட்டுத் திணறடிக்கிறாராம். ஆனாலும் காதல் விஷயம் அவரின் உறவினர் களுக்குத் தெரிந்து விட்டதாம். மூன்றெழுத்து படத்தின் யூனிட் ஆட்களிடம் விஷ யத்தை ஊர்ஜிதம் செய்து கொண் டவர்கள் டைரக்டருக்குத் தீவிர மாகப் பெண் பார்க்கிறார்களாம்.

### இனி இவர்கள்..

* ஜி.ஆர். கோல்ட் பிலிம்ஸ் 'சவுண்ட் பார்ட்டி' படத்தினைத் தொடர்ந்து குணால் — பிரதியூஷா ஜோடியை வைத்து புதிய படமொன்றைத் தயாரிக்கின்றது.

* சூப்பர்குட் பிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரி தயாரிக்கும் ஐம்பதாவது படத்தினை 'ஆனந்தம்' படத்தின் டைரக்டர் லிங்குசாமி டைரக்ட் செய்கிறார். படத்தின் நாயகன் விஜய்.

## முன்னணிக்கு வரும் இளம் ஹீரோ



ஆகாஷ்

'ரோஜாவனம்' படத்தின் அறிமுக நாயகன் ஆகாஷ். இப்போது 'களவும் கற்று மற', 'கற்றது காதல் அளவு' கே.பாலசந்தரின் நூறாவது படமான 'பார்த் தாலே பரவசம்' மந்த்ரா வுடன் 'சேலஞ்' என கிட்டத் தட்ட அரை டசின் படங்க ளில் நடித்து வரு கிறார். தெலுங்கு, மலையாளத் திலிருந்தும் எக்கச் சக்க வாய்ப்புகள்! ஆகாஷிற்கு வருகின்றனவாம். தெலுங் கில் ஆறு, மலையாளத்தில் இரண்டு படங்களில் நடித்து வருகிறாராம். 2002 இல் முன்னணி ஹீரோவாக வருவாரா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்

## திரை மறைவில்

முன்னணி ஹீரோக்களுடன் ஜோடியாக நடித்த வசீகரமான 'தாஸ்' நடிகையை தமிழ்த் திரையுலகம் கவனிப்பதாகத் தெரியவில்லை. அம்மணி காட்டும் ஏகப்பட்ட பந்தாவினால் தயாரிப்பாளர்கள் அவரை ஒப்பந்தம் செய்வதற்குத் தயங்குகிறார்களாம்.

**

கோடம்பாக்கத்தின் லேட்டஸ்ட் கிசுகிசு, தொடையழகி என்று செல்லமாக அழைக்கப் படும் தேவலோக ஆடலரசியின் பெயர் கொண்டவரினதும் சாய் டைரக்டருக்குமிடையிலான காதல் விவகாரம்தான்.

நடிகையின் தரப்பு மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது. டைரக்டரிடம் கேட்டால், ''அய்யா ஆளைவிடுங்க சாமி! இப்பொழுதுதான் ஒரு படத்தைக் கொடுத்துவிட்டுத் தலை நிமிர்ந்திருக்கிறேன். அதற்குள் காதல், கல்யாணம் என்று தலையை உருட்டு கிறீர்களே'' என்று கூறி நழுவுகிறார்.

**

காங்கிரஸில் ஈடுபாடு கொண் டவராகத் தன்னைக் காட்டிக் கொண்டி ருக்கும் முன்னாள் கவர்ச்சி நடிகை, நள்ளிரவில் போயஸ் தோட்டத்திற்குச் சென்று அம்மாவைச் சந்திக்க வேண்டும் என்று அடம் பிடித்தாராம். இதற்கு கட்சிக்காரர்களின் அன்புத் தொல்லை அம்மணி மீதும் அதிகரித்ததுதான் காரணமாம்.

**

விந்திய மலைச் சாரலின் பெயர் கொண்ட நடிகை கதாநாயகி லெவலி லிருந்து கவர்ச்சி நாயகியாகி விட்டார். ஆனாலும் அம்மணிக்கு வில்லியாக நடிக்கத் தானாம் ஆசை. அதுவும் தானே டைரக்ட் செய்யும் படத்தில் தனக்குத்தானே வில்லியாக வர வேண்டுமாம். (ஓ! விந்திய வில்லியோ)

**

சிங்கப்பூரிலிருந்து வந்த சீமாட்டி இங்கிலாந்து இளவரசியின் பெயரால் அழைக் கப்படும் நடிகை. முதல் படமே இன்னும் வெளிவரா விட்டாலும் வருடந்தோறும் பல நாடு களுக்குப் பறந்து சென்று கலை நிகழ்ச்சி நடத்து கிறாராம். சென்னையில் ஏகப்பட்ட சொத்துக்கள் இவருக்குச் சொந்தமாம்.



விந்தியா

காதல் இளவரசனின் படங்கள் அங்கங்கே தேங்கிக் கிடந்தன. நியூமாரலொஜிப்படி தன் பெயரோடு டி.எல்லைச் சேர்த்த பின்னர் முன்னேற்றம் தெரிகிறதாம். 'மஜ்னு' கசெட் வெளியீடு, 'சாக்லேட்' என்று பிஸியாகியிருக்கிறார்.

**

காதல், கிராமத்து மண், கடல் அலை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து படங்களை எடுத்த கிராமத்து இயக்குநர், இப்போது பெற்றதாயின் பெயரில் படத்தை எடுத்து வருகிறார்.

இதில் தாயாக நடிப்பதற்குத்தான் அறிமுகப்படுத்திய அனைத்து முன்னாள் கதாநாயகிகளான இந்நாள் தாய்க்குலங்களை அணுகிப்பார்த்தார்.

நடிப்பதற்குச் சம்மதித்தவர் 'சித்தி' நடிகை மாத்திரமே. சித்திக்கு ஆத்தா மேக்கப் போட்டுப்பார்த்த இயக்குநர் அசந்து போய் விட்டாராம்.

**

## கவர்ச்சித் தள்ளுபடி!



ரம்யா கிருஷ்ணன் — பிரபு
படம்: ஆயிரம் பொய் சொல்லி

கதாநாயகிகளெல்லாம் ஒற்றைப் பாடலுக்கு ஆடுவதற்கு நான் முந்தி நீ முந்தி என முண்டியடித்துக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலையில் ஒற்றைப் பாடலுக்கு ஆடுவதில் சாதனை படைத்துக் கொண்டிருப்பவர் ரம்யா கிருஷ்ணன்.

கதாநாயகிகளும் கவர்ச்சிக் களத்தில் இறங்கி விட்ட தனால் ரம்யாவிற்கும் கடும் போட்டு ஏற்பட்டு விட்டதாம். இதனால் அதிரடியாக தனது சம்பளத்தைக் குறைத்து விட் டாராம். தனிப் பாடலுக்கு ஐந்து லகரங்கள் வாங்கியவர் இரண்டு லகரமாகக் குறைத்து இருக்கிறார். ரம்யாவின் கவர்ச்சித் தள்ளுபடியினால் மனம் குளிர்ந்து போயி ருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

## ஜோடிகள் அமைக்கும் சிரிப்புக்கூட்டணி

குடும்பப்படங்களை எடுத்து சாதனை படைப்பவர் இயக்குநர் வீ.சேகர். இவரது புதிய தயாரிப்பு 'வீட்டோட மாப்பிள்ளை' இதில் ரோஜா—நெப்போலியன், சார்லி—கல்பனா, வையாபுரி—கோவை சரளா ஜோடிகள் அசத்தலாக நடித்துள்ள னவாம். இவர்கள் அமைக்கும் சிரிப்புக்கூட்டணி நிச்சயம் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் என்கிறார் படத்தின் இயக்கு நரான வீ. சேகர்.



படம்: வீட்டோடு மாப்பிள்ளை

# நீண்டதூர சைக்கிள் பயணம் சிறுநீரகக் கோளாறுக்குக் காரணமா?

கே: எனக்கு 36 வயது (பெண்). எனது நெஞ்சுப்பகுதியின் பக்கமாக தோலில் தேமல் ஒன்று படர்கிறது. 4 மாதங்களுக்கு முன்பு இது சற்று சிறியதாக இருந்தபோது வைத்தியர் ஒருவரிடம் காட்டினேன். ஒரு ரியூப் மருந்து தந்தார். அதையே இப்பொழுதும் பாவித்து வருகிறேன். தேமலின் நடுப்பகுதியில் சற்று சுகம் தெரிந்தாலும் நாட் செல்லச் செல்ல இது பெரிதாகிக் கொண்டு வருகிறது. மருந்தைத் தொடர்ந்து பூசிவருவதால் தேமல் ஏற்பட்டுள்ள தோலில் கடுமையான விறைப்புத் தன்மை ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் விரலால் மருந்தைத் தடவும் பொழுது எந்தவிதமான உணர்ச்சியும் இல்லை. எனது உடலின் வேறு எந்தப் பகுதிக்கும் இந்த தேமல் பரவவில்லை. கடி ஏதுமில்லை இதனை முற்றாக மாற்றுவதற்கு என்ன மருந்தைப் பாவிக்க வேண்டும்?

ப: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது தேமல் அல்ல. **Tuberculoid leprosy** என்று சொல்லப்படுகின்ற குஷ்ட ரோகம்.

உடனடியாக நீங்கள் ஒரு தோல் வைத்திய நிபுணரைச் சந்தித்து இந்த நோயை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த நோய் இப்பொழுது ஆரம்பநிலையிலேயே காணப்படுவதால் 6 மாதங்கள் மருந்து பாவிப்பதன் மூலம் இதனை முற்றாக மாற்ற முடியும். தோல் கிளினிக்கில் இந்த மருந்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே நீங்கள் இதையிட்டுப் பயமோ கவலையோ அடைய வேண்டிய அவசியமில்லை. தேமல் போல தோலிலே ஏதாவது படர்ந்து அந்த இடம் விறைப்புத்தன்மையுடையதாக இருந்தால் அது குஷ்டரோகமாக இருக்கக்கூடும். எனவே இப்படி உள்ளவர்கள் உடனடியாக வைத்தியரிடம் சென்று சோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆரம்பநிலையில் இது கண்டறியப்பட்டால் எந்த விளைவுகளும் இல்லாமல் இதனைப் பூரணமாகக் குணப்படுத்த முடியும்.

கே: எனக்கு வயது 22 (ஆண்). கடந்த 5 வருடங்களாக நான் சுய இன்பம் காணும் பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கிறேன். அதனை நிறுத்திக் கொள்ள முயற்சித்தும் முடியவில்லை. இந்தப் பழக்கத்தால் பின் விளைவுகளோ அல்லது உயிராபத்தோ ஏற்படுமா? இதனால் எனக்கு ஆண்மைக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டா? இவற்றை நேரடியாக ஒரு மருத்துவரிடம் கேட்பதற்குத் தயக்கமாக இருக்கிறது. உங்களுடைய பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

ப: சுய இன்பம் காணுவதால் பின்விளைவுகளோ அல்லது உயிராபத்தோ ஏற்படமாட்டாது. ஆண்மைக்குறைவு ஏற்படுவதற்கு இது ஒரு காரணம் அல்ல.

ஆனால் இதில் ஈடுபடும் பலர் தாம் ஏதோ பெரிய தவறான காரியத்தில் ஈடுபடுவதாகத் தவறாக எண்ணி பலவிதமான உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகிறார்கள். எனவே சுய இன்பம் காணுதல் ஒரு தவறான காரியம் அல்ல என்பது உணரப்பட்டால் இந்த உளவியல் தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

கே: எனக்கு வயது 37 (பெண்). திருமணமாகி 4 மாதங்கள் ஆகின்றன. எனக்குக் கடந்த இரண்டு வருடங்களாக நீரிழிவு நோய் இருந்து வருகிறது. இதற்காக நான் மெற்போமின் என்னும் குளிகையைப் பாவித்து வருகிறேன். இந்த நீரிழிவு நோய் காரணமாக நான் குழந்தை பெற்றுக் கொள்ளும் போது எனக்கும் பிள்ளைக்கும் பல பிரச்சினைகள் தோன்றலாம் எனப் பலர் பயமுறுத்துகின்றனர். இது உண்மையா? இதனை எப்படித் தவிர்த்துக் கொள்ளலாம்.

ப: நீங்கள் சுகமாகக் குழந்தை பெற்றுக் கொள்ள முடியும். பயப்படத்தேவையில்லை. ஆனால் நீங்கள் பின்வரும் வழிமுறைகளைக் கையாள்வது அவசியமாகும். நீங்கள் கருத்தரிப்பதற்கு முன்பே நீரிழிவு நோய்க்கான குளிகை பாவிப்பதை நிறுத்தி இன்சுலின் ஊசி மருந்தைப் பாவிக்கத் தொடங்கவேண்டும். அதாவது உங்களுக்கு இந்தக் காலப்பகுதியில் கருத்தரிக்கும் உத்தேசம் இருந்தால் நீங்கள் அதை முன்கூட்டியே வைத்தியரிடம் சொல்லி குளிகை மருந்தை நிறுத்தி ஊசி மருந்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஏனெனில் குளிகை மருந்து கருத்தரிக்கும் பிள்ளையைப் பாதிக்கலாம். குழந்தையை வயிற்றில் சுமக்கும் காலம் முழுவதும் ஊசிமருந்தையே பாவித்து வரவேண்டும். உங்களின் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவைப் பொறுத்து இன்சுலின் ஊசிமருந்தின் அளவை டாக்டர் சரிபார்த்துக் கொள்வார்.

கர்ப்ப காலங்களில் தவறாது கிளினிக்கிற்குச் சென்று வைத்தியரின் தீவிர கண்காணிப்பில் இருந்தால் நீங்கள் எதுவித பிரச்சினையும் இல்லாமல் குழந்தையைப் பெற்றெடுக்க முடியும்.

கே: நான் வசிக்கும் வன்னிப் பகுதியில் சிறுநீரகக் கோளாறு அதிகமாகக் காணப்படுகிறது. மிகக் குறுகிய காலத்தில் 10க்கும் மேற்பட்டவர்களுக்கு சிறுநீரகங்கள் முற்றாகச் செயல் இழந்து உள்ளன. இதற்குக் காரணம் தொடர்ச்சியாக நீண்ட தூரம் சைக்கிள் ஓடுவது தான் எனப் பரவலாக நம்பப்படுகிறது. எமது வன்னியில் ஒரேயொரு போக்குவரத்து வாகனம் சைக்கிள் தான். ஒவ்வொரு நாளும் பல மைல்கள் சைக்கிளில் பயணம் செய்யவேண்டி ஏற்படுகிறது. ஆண்களில் ஏற்படும் விதை வீக்கம், பெண்களில் ஏற்படும் குடல் இறக்கம் என்பனவும் தொடர்ந்து சைக்கிள் ஓடுவதால் ஏற்படுமா? தற்போது இந்த நோய்களும் எமது பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதற்கான பதில்களைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ப: ஆண்களில் ஏற்படும் விதை வீக்கத்துக்கோ அல்லது பெண்களில் ஏற்படும் குடல் இறக்கத்துக்கோ சைக்கிள் ஓடுவது காரணமாக இருக்க முடியாது. வன்னியில் அதிகளவில் சிறுநீரகம் பழுதடைவதற்கு நீண்ட தூரம் சைக்கிள் ஓடுவது தான் காரணம் என நம்பப்படுவதாக எழுதியிருந்தீர்கள்.

மிக நீண்ட தூரம் வெய்யிலினூடாகப் போதியளவு நீர் அருந்தாமல் களைப்புடன் சைக்கிலில் ஓடினால் சில சமயம் றப்டோமையோலைசிஸ் (**Rhabdomyolysis**) என்னும் ஒரு நிலை ஏற்படலாம். இந்த நிலையில் தசைக் கலங்களில் இருந்து வெளிப்படும் மையோகுளோபியூலின் சிறுநீரகக் குழாய்களை அடைப்பதால் சிறுநீரகங்கள் பழுதடைய முடியும். இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு மிக நீண்ட தூரம் சைக்கிள் ஓடும் போது இடையிடையே ஓய்வு எடுக்க வேண்டும். மிக விரைவாக சைக்கிள் ஓடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர்த் தாகத்துடன் சைக்கிள் ஓடுவதைத் தவிர்த்து பயணத்தின் போது போதியளவு நீர் அருந்த வேண்டும். கடுமையான வெய்யில் நேரங்களில் சைக்கிள் ஓடுவதைத் (நீண்ட தூரம்) தவிர்ப்பது நல்லது. நீண்ட தூரம் சைக்கிள் ஓடுவதால் றப்டோமையோலைசிஸ் அரிதாகவே ஏற்பட முடியும். எனவே அதிகளவில் ஏற்படும் சிறுநீரகப் பழுதுகளுக்கு இது மட்டும் காரணமாக இருக்க முடியாது.

> தேமல் என்று அசட்டையாக இருந்துவிடவேண்டாம். அது குஷ்ட நோயாகவும் இருக்கலாம்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

> உடற்பருமனைக் குறைத்து நீரிழிவு, இருதய நோய், குருதி அழுத்தம், பக்கவாதம், சுவாச நோய்கள் ஆகியவற்றில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

# ராசி பலன்

16.09.2001 முதல் 22.09.2001 வரை
சோதிடர் பொ.சந்திரன்.

**மேடம் : அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

சுக்கிரன், செவ்வாய், ராகு, கேதுக்கள் நன்மை செய்வார்கள். சூரியன், புதனால் மத்திம பலன் உண்டு. பணத்தட்டுப்பாடு வர வாய்ப்புள்ளது. கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயலை எத்தடை வரினும் செய்து முடிப்பீர்கள். மன அமைதி குறையலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். தேக சுகம் நன்று. தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இருக்காது. வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

குரு, சுக்கிரன், சூரியன், புதனால் நன்மையுண்டு. செவ்வாய், கேதுவால் மத்திம பலன் உண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. முன்பு இருந்த நோய் விலகும். தொழில்துறையில் சில பின்னடைவு வர வாய்ப்புள்ளது. வருவாய்க்கு குறைவிருக்காது. நண்பர்களின் உதவி இருக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

சூரியன், புதன், சந்திரனால் நன்மையுண்டு. சனி, சுக்கிரனால் மத்திம பலன் உண்டு. பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். மன அமைதி குறையலாம். வீடு வாகனம் இலாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் குறையலாம். தொழில்துறை மந்த கதிதான்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

சுக்கிரன், சனி, ராகு, கேதுக்கள் நன்மை செய்வார்கள். சூரியன், புதனால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை சரிவரச் செய்து முடிப்பீர்கள். மன அமைதியிருக்கும். வீடு வாகனங்களால் இலாபம் உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1**

சூரியன், புதன், குரு, செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சனி, ராகு மத்திம பலனைக் கொடுக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். மன அமைதியிருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற் படுத்தலாம். உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் வளர்ச்சி மெதுவாக இருக்கும். இடமாற்றம் வரலாம்.

**கன்னி: உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1,2**

புதன், சனி, ராகு, சந்திரனால் நன்மையுண்டு. குருபகவான் ஓரளவு நன்மை செய்வார். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் திறம்பட செய்து முடிப்பீர்கள். மன அமைதி உண்டு. வீடு வாகனங்களால் செலவு ஏற்படலாம். பிரயாணவாய்ப்பு உண்டு. தேக சுகம் நன்று. தொழில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

குரு, சுக்கிரன், செவ்வாய், கேது, ராகு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். புதன் மத்திம பலனைக் கொடுக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். மன அமைதி இருக்காது. வீடு, வாகனங்களால் செலவு அதிகரிக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் பின்னடைவு வரலாம். உடல் ஆரோக்கியம் உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

செவ்வாய், சுக்கிரன், புதன், ராகு ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், சந்திரனால் மத்திம பலனை எதிர்பார்க்கலாம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயலை சிரமத்தின் மத்தியில் செய்து முடிப்பீர்கள். மன அமைதி இருக்காது. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. வருவாய் அதிகரிக்கலாம். பதவி உயர்வு உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

சனி, சுக்கிரன், சூரியன், புதன் ஆகிய கிரகங்களால் நன்மை உண்டு. குரு விசேஷ பலனைச் செய்யும். பணத் தட்டுப்பாடு வரவாய்ப்புண்டு. கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி குறையலாம். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. எடுத்த செயலை இலகுவில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் நன்று. பிரயாண வாய்ப்புண்டு. தொழில் துறை முன்னேறும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சூரியன், புதன், ராகு, கேதுக்கள் நன்மை செய்வார்கள். செவ்வாய், சந்திரன் ஆகியவை ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை எத்தடைவரினும் செய்து முடிப்பீர்கள். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் செலவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3.**

குரு, சுக்கிரன், சூரியன், புதனால் நன்மையுண்டு. செவ்வாய், கேது ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை இலகுவில் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனங்களால் மத்திமமான லாபம் அடைவீர்கள். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை முன்னேறும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

சனி, சூரியன், புதன், செவ்வாயால் நன்மையுண்டு. குரு, கேதுவால் ஓர் அளவு நன்மையுண்டு. பணத்தட்டுப்பாடு வரவாய்ப்புள்ளது. கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை தாமதமாகவேனும் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகனங்களால் லாபம் உண்டு. உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் பிரச்சினை இருந்தாலும் முன்னேற்றம் உண்டு.



# உறவில் விரிசல் அது காலத்தின் கோலம்

''நாமிருவர் நமக்கிருவர்'' அல்லது ''நாமிருவர் நமக்கு ஒருவர்'' போன்ற கூற்றுகளுக்கமைய ஓரிரு குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதையே இன்று பெரும்பாலான பெற்றோர் விரும்புகின்றனர்.

இயந்திர வாழ்க்கையில் அகப்பட்ட குழந்தைகள் சித்தப்பாவையும், மாமாவையும், பெரியப்பாவையும் யார் என்று தெரியாது வளர்கிறார்கள். குடும்ப விழாக்களில் கூட பிள்ளைகள் அவ்வளவாகக் கலந்து கொள்வதில்லை.

இத்தகைய விழாக்களில் கலந்து கொள்வது அவசியமானது என்பதைப் பெற்றோரும் பிள்ளைகளுக்கு உணர்த்துவதில்லை.

''மகன் கூச்ச சுபாவமுடையவன் இப்படியான விழாக்களுக்கு வரவே மாட்டான்'', ''மகளுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகம். அதனால் ஒரு நிமிடம் கூட வீணாக்க மாட்டாள்'' என்று கூறிப் பிள்ளைகளை உறவினரிடம் அநேக பெற்றோர் அழைத்துச் செல்வதில்லை.

குடும்ப விழாக்களுக்குப் போனால்தான் பிள்ளைகளுக்கு உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இவர்தான் உன் தாத்தாவின் தம்பியின் மகன். உனக்கு பெரியப்பா முறை. இவர் உன் சித்தியின் அம்மா. உனக்குப் பாட்டி முறை என்று பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து வைக்க முடியும்.

உறவினர் மூலம் பெற்றோரின் திறமைகளை அறிந்து கொள்ள முடியும். பெற்றோரிடம் இவ்வளவு திறமைகள் உண்டா எனப் பிள்ளைகள் ஆச்சரியப் படுவார்கள்.

கிராமப் பகுதிகளில் என்றால் விடுமுறை நாட்களில் உறவினர்களின் வீடுகளுக்குப் போய் வரும் சந்தர்ப்பங்கள் உண்டு. நாகரிக உலகில் நகர்ப் புறங்களில் வசிப்பவர்கள் உறவினர் வீட்டுக்குப் போவது முற்றாகவே தவிர்க்கப்பட்டுள்ளது.

விடுமுறை நாட்களில் மாமா, சித்தப்பா, பெரியப்பா குழந்தைகளுடன் சேர்ந்து கதைக்கும் பண்பு இன்று காணாமல் போய்விட்டது. தெரிந்த இடங்களுக்குப் போய் அங்குள்ளவர்களுடன் உறவாடும் பண்பும் மறைந்துவிட்டது.

இன்னொரு வீட்டில் போய் தங்கும் போது அனுசரித்துப் போகும் மனப்பாங்கு, விட்டுக் கொடுக்கும் பண்பு, உதவும் பழக்கம், அடுத்த குழந்தைக்கு அன்பு காட்டும் பண்பு, சமத்துவ குணம், என்பனவும்—

கொஞ்ச நாட்களுக்குப் பெற்றோரை விட்டுப் பிரிந்திருப்பதால் அவர்கள் மேல் அதிக பாசம் வைக்கும் எண்ணம் இவ்வாறு எத்தனையோ முறைகளை நம் முன்னோர் ஏற்படுத்தினர்.

ஆனால் தற்போது இத்தகைய முறைகள் நமது சமூகத்திடம் அருகிப் போய்விட்டன.

காலம் மாறிவிட்டது. நிறையப் படிக்கிறோம், முன்னேறுகிறோம், உழைக்கிறோம் இவை சந்தோஷமானவைதான்.


ஆயினும் நமக்கே உரிய கலாசாரம், வாழ்க்கைமுறை போன்றவற்றை இனி வரும் தலைமுறைக்கும் கற்றுக் கொடுப்பது நமது கடமையல்லவா? எனவே பெற்றோராகிய நீங்கள் இவை குறித்து சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

# உணவில் தமிழரின் தனித்துவம்

உலகிலே அறுசுவை என்ற உணவுக் கோட்பாட்டைத் தமிழ் இனத்தைத் தவிர வேறு எந்த இனமும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

உணவை உட்கொள்வதைக் குறித்தே தமிழில் எண்ணற்ற சொற்கள் இருக்கின்றன.

தற்போது சாப்பிடுவது, குடிப்பது தவிர வேறு சொற்களை நாம் அவ்வளவாகப் பயன்படுத்துவது கிடையாது.



அருந்துதல், உண்ணுதல், உறிஞ்சுதல், குடித்தல், தின்னுதல், துய்த்தல், நுங்குதல், பருகுதல், மாந்துதல், மெல்லுதல் இவ்வாறு உட்கொள்ளும் முறையிலேயே பன்னிரண்டு வகைகள் உள்ளன.

உண்ணுகின்ற முறை பன்னிரண்டு போல், உணவு ஆக்குகின்ற முறை இருபத்திரண்டாகத் தமிழ் மக்களிடத்தில் இருந்து வந்திருக்கின்றது.

பெயர்களைக் கேட்டாலே நமக்கு வியப்பும் ஆசையும் மேலோங்கி விடும்.

இடித்தல், கலத்தல், காய்ச்சல், கிண்டல், கிளறல், சுடுதல், திரித்தல், துவைத்தல், துவட்டல், பிசைதல், பொங்கல், பொரித்தல், மசித்தல், வடித்தல், வதக்கல், வறுத்தல், வாட்டல், வெந்நீர்ப்படுத்தல், வேகவைத்தல், என்பவையே அப்பெயர்கள்.

கிழக்காசிய மக்கள் பயன்படுத்தும் உணவுப் பொருட்கள் அனைத்துமே மருத்துவக் குணம் உடையவை. மிளகு, சீரகம், கீரைகள் இவையெல்லாம் மருந்து நிலையத்தில் மருந்துப் பொருள்கள் ஆகின்றன. சமையலறையிலும் இவையே உணவுப் பொருள்களாகின்றன.



# இளைய தலைமுறை பெண்களின் இதய தாகம்

இன்று இளம் பெண்கள் பலர் திருமணம், குடும்பம் முதலானவற்றில் நம்பிக்கை இல்லாதவர்களாக உள்ளனர். தம்மீது பலவந்தமாகத் திணிக்கப்படும் ஒரு விடயமாக அவர்கள் திருமணத்தைப் பார்க்கிறார்கள்.

சமூக நிலைபேற்றுக்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் திருமணம் அவசியம் என்ற கோட்பாடு எங்கள் மத்தியில் உள்ளது.

அவ்வாறாயின் தற்காலத்துப் பெண்கள் பலர் ஏன் திருமணத்தை நிராகரிக்கிறார்கள்?

'திருமணம் என்ற சந்தையில் பெண் *விற்கப்படுகிறாள். அவள் பிள்ளை* பெறும் இயந்திரமாக மட்டுமே கருதப்படுகிறாள். திருமணத்துக்கு முன்னர் தன்னிடம் இருந்த ஆளுமையை அவள் இழக்கிறாள். அல்லது மறைத்துக் கொண்டு வாழ வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகின்றாள்.

ஒரு பெண் நல்ல கல்வி அறிவைப் பெற்று உயர்ந்த தொழில் புரிபவளாக இருந்தால் அப்பெண் ஆண்களை *மதிக்கமாட்டாள் என்ற அபிப்பிராயம்* சமூகத்தில் உள்ளது.

பொதுவாக ஒரு ஆண் தன்னை விடக் கூடுதலான திறமை அல்லது சம திறமை உள்ள பெண்ணிடம் நன்றாகப் பேசிப் பழகுவான். ஆனால் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இத்தகைய மனநிலையிலேயே அநேக ஆண்கள் இருக்கிறார்கள்.

திருமணத்தினால் தமது திறமை மறைக்கப்படும், சுயாதீனம் இல்லாமல் போய் விடும், அடிமை வாழ்க்கை வாழ நேரிடும் போன்ற அச்ச உணர்வுகள் பெண்களிடம் வளர்ந்து விட்டன. 'ஒரு பெண் எதிர்கொள்ளும் அநேகமான சங்கடங்களுக்கு ஆண்களே காரணம்' என்ற எண்ணம் இளைய தலைமுறைப் பெண்களிடம் வளர்ந்து விட்டது.

ஒரு ஆண் தன்னளவில் முழுமை பெற்ற ஒரு ஆணாக வாழ விரும்புவது போல் இன்றைய இளம் பெண்களும் தம்மளவில் தனித்துவம் பேணி வாழ விரும்புகிறார்கள்.

தாம் சமூகத்தில் காணும் அனுபவிக்கும் விடயங்களிலிருந்தே ஒவ்வொருவரும் வாழ்க்கையில் முடிவு எடுக்கிறார்கள்.

## பெண்

பிரதீபா — பவீனா



# 'டீன் ஏஜ்' பிரச்சினைகளா?

## அம்மாவையே அணுகுங்கள்

டீன் ஏஜ் பருவம் எல்லோருடைய வாழ்க்கையிலும் வருகின்ற ஒரு இனிமையான காலம். இந்தப் பருவத்தில் எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷம் கிடைக்கிறதோ அதேயளவு பிரச்சினைகளும் ஏற்பட்டு விடுகின்றன.

பால்ய பருவத்தை அடைந்த ஒரு பெண் தான் வித்தியாசமாகப் பார்க்கப் படுவதை உணர்கிறாள். இயற்கையாகவே அவள் உடலிலும் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களால் டீன் ஏஜ் பெண்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இவை பற்றி யாருமே பேச விரும்பாத ஒரு காலம் இருந்தது.

ஆனால் இப்போது ஊடகங்கள் இவை பற்றிப் பேச ஆரம்பித்துள்ளன. அம்மா — மகள் உறவு தற்போதைய சூழ்நிலையில் ஓரளவுக்கு விரிவுபட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் முழுமை பெறவில்லை.

வயதுக்கு வந்த இளம் பெண் தனது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கக்கூடிய நல்ல நண்பி 'அம்மா' தான் என்ற உண்மை உணரப்பட வேண்டும். அப்போதுதான் டீன் ஏஜ் பெண்களின் பல பிரச்சினைகள் தீரக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

பால்ய பருவப் பெண்கள் எதிர் நோக்கும் பலவிதமான பிரச்சினைகளுக்கு ஆண்களே காரணியாக இருக்கின்றனர். இதிலிருந்து பெண்கள் மீள்வதற்குச் சில தீர்வு முறைகளைக் கையாளலாம்.

ஆண் நண்பர்கள் விலை கூடிய பரிசுப் பொருட்களைக் கொடுக்கும் போது அத்தகையவர்கள் மீது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


தெரியாதவர்களிடமிருந்து வரும் ஈ—மெயில்களை நீக்கிவிடுங்கள். அந்த விலாசத்திலிருந்து இனி ஈ—மெயில் வராதபடி தடுத்து விடுங்கள்.

''இன்று பின்னேரம் என்ன செய்யப் போகிறீர்கள், எங்காவது வெளியே போகிறீர்களா? வார இறுதியில் ஓய்வாக இருப்பீர்களா?'' போன்ற கேள்விகளை ஆண்கள் உங்களிடம் கேட்டால், உறுதியான காரணம் ஒன்றைக் காட்டி விலகி இருங்கள். இதனால் வீண் பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

புதிதாக அறிமுகமாகும் எந்த ஒரு ஆணையும் சந்தேகத்துடன் பார்ப்பதில் தவறில்லை.

ஒரு பிரச்சினை ஆரம்பமாகிறது என உணர்ந்த உடன் தாமதிக்காது அதற்கு எதிராகச் செயற்படுங்கள். எந்த விடயத்தையும் மறைக்காதீர்கள். விசுவாசமான ஒருவரிடம் கூறி வைப்பது நல்லது. அந்த விசுவாசமான நபர் உங்கள் அம்மாவாக இருந்தால் என்ன?

# ஆளை அடையாளம் காட்டும் ஐஸ்கிரீம்





உங்கள் நண்பர்களுடன் ஐஸ்கிரீம் சாப்பிடும் பழக்கம் உண்டா? அப்படியாயின் அடுத்த முறை ஐஸ்கிரீம் வாங்கும் போது அவர்கள் விரும்பும் சுவை என்ன என்று பாருங்கள்!

விருப்பமான சுவையை வைத்து நண்பர்களின் குணங்களை ஓரளவிற்குக் கூறலாம். ஆய்வுகள் இதனைத் தெரிவிக்கின்றன.

**ஸ்ட்ரோபரி:** இந்தச் சுவையுடைய ஐஸ்கிரீமை விரும்புபவர்கள் மென்மையானவர்கள். இவர்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படுவார்கள்.

**சொக்லேட்:** பிறரை ஆள வேண்டும் என நினைப்பவர்கள் சொக்லேட் ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்கு அதிக விருப்பம் காட்டுவார்கள். இவர்களிடம் தற்பெருமையும் இருக்கும்.

**வெனிலா:** வெனிலா ஐஸ்கிரீமை விரும்புபவர்கள் அதிகமாக அலுத்துக்கொள்வார்கள். இவர்கள் எப்போதும் புதிய அனுபவங்களை நாடுவார்கள். எல்லோருடனும் சகஜமாகப் பழகுவார்கள். எதையும் ஏற்றுக்கொள்ளும் துணிவு இவர்களுக்கு உண்டு.

இனி என்ன. அடுத்த முறை ஐஸ்கிரீம் 'பாலர்' போகும்போது உங்கள் நண்பர்கள், நண்பிகளின் குணங்களையும் சேர்த்தே அறிந்து விடுங்கள்.

# சிறுவர் கூடிப் பயில கட்டுப்பாடில்லை

தலைநகரில் பல்வேறு துறைகளிலும் தமிழை வளர்த்து வரும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சிறுவர்களின் மொழியாற்றலை வளர்த்து ஊக்குவிக்கும் முகமாகக் 'கூடிப் பயில்வோம்' சிறுவர்களுக்கான தமிழ் மொழித்திறன் பயிற்சியை ஆரம்பித்து வைத்துள்ளது.

''நாளாந்தம் நாம் பல்வேறு நிகழ்வுகளிலும், பல்வேறு இடங்களிலும் தமிழ்ப் பிழைகளைக் காணுகின்றோம். ஒரு சிலரே அத்தவறுகளைத் திருத்த முயலுகின்றனர். ஏனையோர் மௌனமாக இருக்கின்றனர். இதனால் தமிழ் மொழியின் சிறப்புக்கு களங்கம் ஏற்படுகின்றது.



நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவரும் பெற்றோரும்

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது போல இளம் பராயத்திலே தமிழைச் சரிவரப் பேச, எழுத, வாசிக்கக் கற்றுக் கொண்டால் எமது சிறுவர்கள் தமிழறிஞர்களாக உருவாக முடியும்'' என்று 'கூடிப் பயில்வோம்' நிகழ்வை ஆரம்பித்து வைத்த சட்டத்தரணி சோ.தேவராஜா குறிப்பிட்டார்.

இக் 'கூடிப்பயில்வோம்' பயிற்சி நிகழ்வு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை பத்து மணி தொடக்கம் நண்பகல் பன்னிரண்டு மணிவரை நடத்தப்படுகின்றது. பாடசாலைச் சூழல், கட்டுப்பாடுகள், பரீட்சைகள் போன்றவற்றை மறந்து சிறுவர்கள் தமக்குள் இணைந்து குதூகலித்துப் பயிலும் இந் நிகழ்வு பெரும் வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

பேச்சு, உரையாடல், கவிதை, நாட்டியம், நாடகம் போன்றவற்றில் சிறுவர் சிறுமிகள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களின் மொழித்திறனை வளர்க்கும் இம் முயற்சி தலைநகரில் தமிழை வளர்க்கும் முயற்சிகளில் தலையாயது. சிறுவர்கள் தான் இங்கு தீர்மானிப்பவர்களாக இருக்கின்றனர். அவர்களின் ஆளுமைக்கு வழிகோலுவதாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது என்று இந் நிகழ்வின் பயிற்றுவிப்பாளர்களில் ஒருவரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளருமான சற்சொரூபவதி நாதன் தெரிவித்தார்.

''அண்மைக்காலமாக ஊடகங்களில் சிறுவர்களின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றது. இத்தகைய நிகழ்வுகள் மூலம் சிறுவர்கள் ஊடகங்களில் உற்சாகமாகப் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவொரு சாதனையே'' என்று த.சிவஞானரஞ்சன் கூறினார்.

வீடுகளில் பெற்றோர் கொச்சைத் தமிழில் பேசுவதைத் தவிர்த்துத் தமிழைச் சிறப்பாகப் பேச வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளும் சரியாகத் தமிழைப் பேசுவார்கள் என்று பெற்றோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**கலையமுதம்**



அகில இலங்கை இந்து மாமன்றம் மஸ்கெலியா இந்து மாமன்றத்துடன் இணைந்து சமய தீட்சை வழங்கும் வைபவம் ஒன்றை மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சுவாமி தேவஸ்தான மண்டபத்தில் நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

## பொன் விழாக் காணும் ஞாயிறு பாடசாலை

இவ் வருட கிருஷ்ண ஜயந்தி தினத்துடன் 49 ஆண்டுகளை நிறைவு செய்து பொன் விழாக் காணுகின்றது இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்ற பொன் விழா நிகழ்வில் மாணவர், பெற்றோர், பழைய மாணவர் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கவியரங்கம், சற்றுச் சிந்தியுங்கள் நாடகம், இசை ஆசிரியைகளின் இசை நிகழ்ச்சி ஆகிய கலைநிகழ்வுகள் பார்வையாளர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தன.

மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறிய இராம கிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலையின் பொன் விழா நிகழ்வில் சுற்றுலாத் துறை, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாப் ராமானுஜம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இப்பாடசாலை 1952ஆம் ஆண்டு சுவாமி அயங்கானந்தரினால் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


— கருடன்





அகில இலங்கை இந்து மாமன்ற ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் தலைவராகவும் அறங்காவலர் சபை உறுப்பினராகவும் இருந்து இந்து சமயத்துறைக்கு அரும் பணியாற்றிய அமரர் ஆ. சின்னத்தம்பிக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் அண்மையில் இந்து மாமன்றத் தலைமையகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் இ. சிவகுருநாதன் அஞ்சலி உரை நிகழ்த்துகிறார். வைத்திய கலாநிதி சி. குணசிங்கம், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி. ரகுநாதன், அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளர் த. மனோகரன், இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், இந்து மாமன்ற பிரதித் தலைவர் மா.தவயோகராஜா, கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முகரத்தின சர்மா, முகத்துவாரம் சித்திவிநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கே. சோமசுந்தரக் குருக்கள், விவேகானந்த சபை பொதுச் செயலாளர் க.இராஜபுவனீஸ்வரன், கவிஞர் கங்கை வேணியன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## பரத நாட்டிய அரங்கேற்றம்



கலாசமுத்ராவின் நாட்டிய கலைமணி செல்வி ஜனீத்திரா சோமசூரியசிங்கத்தின் மாணவ மணிகளான ஷாங்கினி, மதுராகனன் ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம், 16—09—2001 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

பி.எச். அப்துல் ஹமீத் தம்பதியர் கௌரவ அதிதிகளாகவும், பரத கலாநிதி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷன் சிறப்பு அதிதியாகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

# பித்தன் பதில்கள்





எஸ்.லோகேஸ்வரி, பெரியநீலாவணை.
கே : காந்திஜியின் எளிமையைப் பற்றி....?
ப : கண்ணாடி, செருப்புத் தவிர மேலதிகமாக எதனையும் அணிந்து கொள்ள காந்திஜி விரும்புவதில்லை. நேரத்தைக் கடைப்பிடிப்பதற்காக இடுப்புச் சங்கிலியில் கடிகாரத்தை இணைத்து வைத்திருந்தாராம்.

ப.இராமநாதன், பலாலி.
கே : ஜே.வி.பியுடன் உடன்பாட்டுக்கு வந்த; வுடன் சர்வஜன வாக்கெடுப்பை அரசாங்கம் ரத்துச் செய்துவிட்டதே?
ப : பதவியில் நீடிப்பதற்கு ஒரு வழியாகத் தான் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முனைந்தது அரசாங்கம். வேறு வழியில் ஜே.வி.பி ஆதரவு வழங்கும்போது சர்வஜனம் பற்றியோ வாக்கெடுப்புப் பற்றியோ அரசாங்கத்திற்கு என்ன கவலை?


அ.பிரசாத், நீர்வேலி.
கே : யுத்தத்தை நிறுத்தாதே என்று கூறும் ஜே.வி.பியின் ஆதரவை பொ.ஐ.மு ஏற்றுக் கொண்டிருக்கிறதே?
ப : சிஹல உறுமயவிடமும் ஜே.வி.பியைப் போல 10 எம்.எம்.பிக்கள் இருந்தால் அந்தக் கட்சியின் ஆதரவையும் பொ.ஐ.மு கோரியிருக்கும். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அன்பழகன், திருகோணமலை.
கே : அமைச்சர்களின் எண்ணிக்கையை 20ஆகக் குறைப்பதற்கு அமைச்சர்கள் இணங்கியமை பற்றி?
ப : அந்த இருபதில் நாமும் இருப்போம் என்று எண்ணிக்கொண்டே பலர் ஆதரவு தெரிவித்திருப்பார்கள். முடிவு தெரிந்ததும் என்ன செய்வார்களோ?

இஷாக், நிந்தவூர்.
கே : தொலைக்காட்சி நேர்காணலின் போது குத்துச்சண்டை வீரர்கள் ரஹ்மானும் லூயிஸும் மோதிக் கொண்டது தமக்கிடையிலான போட்டிக்கு விளம்பரம் தேடுவதற்காகவா?
ப : திட்டமிட்டு அவ்வாறு நடந்து கொண்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால் இச்சம்பவத்தால் ரஹ்மான் — லூயிஸ் போட்டிக்கு அதிக விளம்பரம் கிடைத்துள்ளது உண்மை.

வி.மைதிலி, திருநெல்வேலி.
கே : டைரக்டர் மணிரத்னம் பற்றிய பித்தனின் அபிப்பிராயம்....?
ப : திரையுலகில் வியாபார ரீதியாகவும் சிந்தனை ரீதியாகவும் சாதனை படைத்த அமைதிப் புயல். இளைய தலைமுறையினரின் விருப்பங்களையும் கனவுகளையும் கண்டெடுத்துக் கலை ஆக்கம் செய்வதில் வல்லவர்.

எம்.முரளிதரன், கண்டி.
கே : விளம்பரம் இல்லாத வியாபாரம் எதைப் போன்றது?
ப : இருட்டில் கண்ணடிப்பதைப் போன்றது.



எஸ்.சிவராஜா, பாணந்துறை.
கே : வயது போன தம்பதிகள் எந்த நேரமும் சண்டை பிடிப்பது ஏன்?
ப : அவர்களால் வேறு என்ன தான் செய்ய முடியும்?



இ.செந்தூரன், மானிப்பாய்.
கே : அரசு — ஜே.வி.பி ஒப்பந்தம் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?
ப : அன்ரனாவும், பூஸ்டரும் போல ஐக்கிய மாகியுள்ளனர். மேற்கொண்டு இடம்பெறப் போகும் படம் தெளிவாக இருக்குமா என்பதுதான் கேள்விக்குறி.

வ.கருணாகரன், ஊரெழு.
கே : நீண்ட காலம் வாழும் ஆசை எல்லா ஆண்களுக்கும் உண்டா?
ப : நீண்ட காலம் வாழும் ஆசை உண்டு. ஆனால் கிழவன் ஆகும் ஆசைதான் இல்லை.

ஜனார்த்தனன், தும்பசிட்டி.
கே : காதல் திருமணம் எப்படி இருக்கும்?
ப : முதல் மூன்று மாதம் மந்தமாருதம். பிறகு சண்ட மாருதம்.

ஜெனிற்றா, சீதுவ.
கே : பல தாரத் திருமணம் செய்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப : அது என்ன பலகாரமோ! ஒருமுறை திருமணம் செய்வது கடமை. இரண்டாவது முறை திருமணம் செய்வது மடமை. மூன்றாவது முறை திருமணம் செய்வது கொடுமை.

மு.லக்ஷ்மணன், வல்வெட்டித்துறை.
கே : அரசியலில் முன்னேற என்ன தேவை?
ப : பணக்காரனின் பணத்தையும் வாக்காளனின் வாக்கையும் ஈர்க்கும் தந்திரம் தேவை.




ம.பரந்தாமன், துன்னாலை.
கே : இளம் மனைவியை நம்பலாமா?
ப : முதிய மனைவியை நிச்சயம் நம்பலாம்.

இ.பாலேந்திரன், தெல்லிப்பழை.
கே : நடிகை கௌசல்யாவின் உண்மைப் பெயர் என்ன பித்தனே?
ப : கவிதா.

ஆ.செந்தில்வேந்தன், கிரிபத்கொடை.
கே : அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான விளம்பரத்தில் குண்டு வெடிப்பது போல் காட்சி வருகிறதே! கவனித்தீர்களா?
ப : போட்டி நடைபெறும் இடம் இலங்கை என்பதைக் குறிப்பால் உணர்த்த விரும்பினார்கள் போலும்.

லாவண்யன், கொழும்பு —07.
கே : பித்தனுக்கு அதிஷ்டத்தில் நம்பிக்கை உண்டா?
ப : உண்டு. யாழ்ப்பாணத்துக்கு டயல் செய்யும் எண் சில சமயங்களில் உடனடியாகக் கிடைத்து வருகிறது அல்லவா.



பூ.லோகநாதன், அநுராதபுரம்.
கே : வெற்றியில் வரவேண்டியது பணிவு. தோல்வியில் வரவேண்டியது....?
ப : துணிவு!

பி.பிரேமினி, தெஹிவளை.
கே : ஹரிணி பாடிய முதல் பாடல் எது பித்தனே?
ப : 'இந்திரா' படத்தில் வெளி வந்த 'நிலாக் காய்கிறது நேரம் தேய்கிறது யாரும் ரசிக்கவில்லையே' என்ற பாடல்.

அ.சுப்பிரமணியம், சோளப்பாய்.
கே : அதிஷ்டக் கற்கள் அணிந்தால் அதிஷ்டம் வரும் என்பது உண்மையா பித்தனே?
ப : கண்டிப்பாக, அதிஷ்டக் கல்லை விற்றவருக்கு அதிஷ்டம் தான்!

# தொழிலாளர் பழிவாங்கல் : நீதிபதி கடும் எச்சரிக்கை

## நிர்வாகம் நட்டஈடு வழங்கப் பணிப்பு

தோட்ட நிர்வாகங்கள் அதிகாரங்களைக் கையில் வைத்துக்கொண்டு தொழிலாளர்களைப் பழிவாங்க அனுமதிக்க முடியாது.

ஊழியர்களை வேலை நீக்கம் செய்து விட்டு அதன் பின் அதனை நியாயப்படுத்த காரணங்களைத் தேடிக்கொள்ளும் உரிமையும் நிர்வாகங்களுக்கு இல்லை.

இப்படி நுவரெலியா மாவட்ட தொழில் நீதிமன்ற நீதிவான் கே. பாலகுமாரன் பத்தனை கெலிவத்தை தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது தோட்ட நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட இரு தொழிலாளர்களுக்கு 85 ஆயிரத்து 500 ரூபாவை நஷ்ட ஈடாக வழங்குவதோடு சேவை முறிவின்றி அவர்களுக்கு மீண்டும் தொழில் வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கி உள்ளார்.

பத்தனை கெலிவத்தை தோட்டத்தைச் சேர்ந்த செல்லத்துரையும் அவரது மனைவி புஷ்பமும் போதிய குடியிருப்பு வசதி இன்மையால் தமது வீட்டுடன் இணைந்து தற்காலிகக் குடில் ஒன்றைத் தமது செலவில் கட்டிக்கொண்டனர்.

ஆனால் தோட்ட நிர்வாகம் அவர்கள் நிர்வாகத்திடம் அனுமதி பெறவில்லை என அவர்களை வேலை நீக்கம் செய்துவிட்டது. இதனை ஆட்சேபித்து மலையக மக்கள் முன்னணி நுவரெலியா மாவட்ட தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிமன்றம் தோட்ட நிர்வாகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களை நிராகரித்தது. இது தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட ஹேரத் நிறுவனத்துக்கு எதிராக றொட்ரிகோ என்பவர் தாக்கல் செய்திருந்த வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் தொழில் நீதிமன்ற நீதிவான் சுட்டிக்காட்டி உள்ளார்.

எனவே பாதிக்கப்பட்ட செல்லத்துரைக்கு 25 ஆயிரத்து 500 ரூபாவும் அவரது மனைவி புஷ்பத்திற்கு 57 ஆயிரம் ரூபாவும் நஷ்ட ஈடாக வழங்கவேண்டும். இதனை அட்டன் உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் வைப்பிலிட வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தொழிலாளர்களின் சார்பில் மலையக மக்கள் முன்னணியின் தொழில் உதவி இயக்குநர் ஆர்.என்.செல்லையா ஆஜராகி வாதாடினார். நிர்வாகத்தின் சார்பில் சட்டத்தரணிகள் சச்சிதானந்துடன் திருமதி திம்பிரிமொலவும் ஆஜராகினர்.

## சேமிப்புப் பணத்தை மீளப்பெற முகாமையாளர் தடை

சேமித்து வைத்த பணத்தை வழங்க மறுக்கும் மலையக வங்கி ஒன்றின் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வைப்பிலிட்டவர்கள் தாம் விரும்பிய போது பணத்தை மீளப்பெறும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஆறுமுகம் சம்பந்தப்பட்ட வங்கித் தலைவருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

மேற்படி வங்கிக் கிளையில் பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் சேமிப்புக் கணக்குகளை வைத்துள்ளனர். இவர்கள் தமது அவசர தேவைகளுக்காகவே இவ்வாறு சேமிக்கின்றனர்.

ஆனால் கிளை முகாமையாளர் தொழிலாளர்கள் மீண்டும் தமது பணத்தை எடுக்க அனுமதிப்பதில்லை. அதுமட்டுமன்றி ரிதி ரேகா வைப்புச் சான்றிதழ்களைப் பெற்றவர்களுக்கு வருட முடிவில் முதலைத் திரும்பச் செலுத்த வேண்டும். இக் காலக் கெடு பூர்த்தியடைந்த பின்னரும் அதற்கான பணம் வழங்கப்படவில்லையாம்.

ஏதாவது காரணங்களைக் கூறி அப்பணத்தை அவர்களுடைய கணக்கில் வரவு வைத்து விடுகின்றாராம்.

அத்தியாவசிய தேவைகளுக்குப் பணம் வழங்காமல் பலாத்காரமாக வைப்பீடு செய்வது வங்கி நடவடிக்கைகளுக்கு எதிர்மாறான ஒரு செயலாகும். இவ்வாறான செயல்கள் வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளன. எனவே வங்கியில் சேமித்து வைத்த பணத்தைத் தாம் விரும்பிய போது மீளப் பெற அனுமதிக்க வேண்டும். இது தொடர்பாக இக் கிளைக்கு உடனடியாக உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்.

இப்படி அமைச்சர் ஆறுமுகம் பிரஸ்தாப வங்கித்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## தமிழாசிரியர் நியமனங்கள் இடைநிறுத்தம்

இரத்தினபுரி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற தமிழ் ஆசிரியர் நியமனங்களில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனால் சப்ரகமுவ மாகாணத்தில் இடம்பெற்ற புதிய தமிழ் ஆசிரியர் நியமனங்கள் யாவும் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாண முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான அசோக ஜயவர்தன இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அண்மையில் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிமனையில் தமிழ் ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. 251 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இவர்களுள் 41 பேருக்கு மட்டுமே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 7 பேர் மட்டுமே மலையகத்தைச் சேர்ந்தவர்கள். தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்படவில்லை.

நேர்முகப் பரீட்சையில் அதிகாரிகளின் ஆதரவுடைய பலர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயத்தை சப்ரகமுவ மாகாண சபையின் பிரதித் தலைவர் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். இதனால் ஏற்கனவே வழங்கப்பட்ட 41 நியமனங்களும் இடை நிறுத்தப்பட்டன. விரைவில் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என முதலமைச்சர் உறுதி அளித்துள்ளதாகப் பிரதித் தலைவர் கணபதி இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

## காணி கையளிப்பில் வீண் தாமதம் வெளியார் ஆக்கிரமிப்பு அபாயம்

குண்டசாலை பள்ளேகல தோட்டக் காணியை உடனடியாக அத்தோட்டத் தொழிலாளர்களுக்கே வழங்கவேண்டும். 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17ஆம் திகதி இக்காணி அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களிடம் இக்காணிகளைக் கையளிப்பதில் அர்த்தமற்ற தாமதத்தை ஏற்படுத்துவதால் இக்காணிகளை வெளியார் அத்துமீறி ஆக்கிரமிக்கும் நிலை ஏற்பட இடமுண்டு. இதனால் ஏற்படும் விபரீதங்களுக்கு கண்டி மாவட்ட பிரதம செயலாளரே பொறுப்பேற்க வேண்டும் என அமைச்சர் ஆறுமுகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பள்ளேகலதோட்டம்மூடப்பட்டதால் பாதிப்புற்றதொழிலாளர்களுக்கே அக்காணிகளைப்பகிர்ந்தளிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இது 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி உத்தியோக பூர்வமாகஅறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக ஆறுமுகம் தொண்டமான் பிரதமருடன் தொடர்பு கொண்டு இதனைத் துரிதப்படுத்தும் படி கேட்டுக் கொண்டார். இதற்கமைவாக 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் திகதி அனைத்து இலக்கங்களும் இடப்பட்டன. ஆனால் இன்று வரை இக்காணிகள் தொழிலாளர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. தேவையற்றதாமதம் ஏற்படுத்துவதால் தொழிலாளர்களுக்கான இக்காணிகள் பறி போய் விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எது எப்படி இருந்தபோதிலும் உடனடியாக இக்காணிகளைத் தோட்டத் தொழிலாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் படி அமைச்சர் ஆறுமுகம் கண்டி மாவட்ட பிரதமசெயலாளருக்கு அறிவித்துள்ளார்.

### மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

## மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை அரசுக்கு ஆதரவு அளிப்பதா?

### புதிய இடதுசாரி முன்னணி கேள்வி

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வராத இடைக்கால அரசாங்கம் இந்திய வம்சாவளி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. இத்தகையதொரு நிலையில் அரசுடன் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமா என்பதனை மலையகத் தலைவர்கள் தாமதமின்றித் தீர்மானிக்க வேண்டும். இப்படிக் கூறுகின்றார் புதிய இடதுசாரிமுன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா.

இ. தம்பையா மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றத்தில் பத்துப்பேரை மட்டுமே கொண்ட தீவிரவாதப் போக்குடைய ஜே.வி.பி இன்று கிங் மேக்கராகி விட்டது.

இந்தியாவில் இருந்து கூலி வேலை செய்வதற்காக அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள் இந்தியத் தமிழர்கள். கூலிகளாக வந்தவர்களுக்குக் குடியுரிமை தேவையில்லை என பிரஜா உரிமை சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் ஜே.வி.பியினர்.

இன்று நாட்டில் புரையோடிப்போய் இருக்கும் இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான ஆலோசனைகளையும் முன் வைக்காத ஜே.வி.பி யினரின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டே அரசாங்கம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

ஜனாதிபதி தன்னையும் தனது அரசை யும் காப்பாற்றுவதற்காக சிறுபான்மையினர்களை ஓரம்கட்டி விட்டார்.

சிறுபான்மை இன மலையகத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் . இவர் அரசுக்கு முட்டுக் கொடுத்தவர். இவருடன் எம். சிவலிங்கம், ஆர்.யோகராஜன், என். ஜெகதீஸ்வரன் ஆகிய நான்கு பேர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.

அரசுடன் இணக்கம் ஏற்பட்ட மறு நாள் பொரளையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜே.வி.பி பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானைக் கேவலமாக விமர்சனம் செய்தார். அமைச்சர் கோட்டுக்குப் போனாலும் முகம் கொடுக்கத் தயார் எனப் பகிரங்கமாகச் சவால் விடுத்தார்.

இதே போன்று மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ. சந்திரசேகரன், க. கனகராஜ் மற்றும் எஸ். சதாசிவம், பி.பி. தேவராஜ், எம். எஸ் . செல்லச்சாமி என ஐந்து பேர் எதிர்க்கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கின்றனர். மலையக இந்திய வம்சாவளித் தலைவர்கள் மொத்தத்தில் ஒன்பது பேர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.

சிறுபான்மை இனத் தமிழர்கள் ஆளும் கட்சியுடன் சேர்ந்திருந்தால் என்ன? எதிரணியில் இருந்தால் என்ன? கிடைக்கும் மரியாதை ஒன்று தான்! இதனைத் தமிழ்த் தலைவர்கள் இன்னும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சிறுபான்மைத் தமிழர்கள் 24 பேர் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத்தில் ஆக பத்துப் பேரை மட்டுமே கொண்ட ஜே.வி.பி யினர் சிறுபான்மையினரின் தலை விதியை நிர்ணயிக்க முயல்கின்றனர்.

இது எதனை உணர்த்துகின்றது ? சிறுபான்மைக் கட்சிகளின் பணயக் கைதி போல் இருக்க விரும்பாததால் அரசமைப்பை மாற்றி அமைக்கப் போகிறேன் என்கிறார் ஜனாதிபதி. ஜே.வி.பி யும் அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமில்லை என்று கூறுகின்றது. சிறுபான்மையினருக்கு எதிராக இரண்டு பெரும்பான்மை இனக்கட்சிகள் கூட்டுச் சேர்ந்து விட்டன. இதனால் ஏற்படும் பாதிப்பு சிறுபான்மைத் தமிழர்களுக்கே. இந்த இக்கட்டான நிலையிலும் சிறுபான்மை இனத்தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்து அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டுமா?

— இவ்வாறு கேட்கிறார் தம்பையா.

## இனங்களுக்கிடையில் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்

### கொட்பிறி குணதிலக வலியுறுத்து

''இனக்கலவரங்களின் உண்மை நிலையைக் கண்டறிந்து இனங்களுக்கிடையில் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.

கலவரங்களின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த ''மார்க்கா'' நிறுவனத்தின் தலைவர் கொட்பிறி குணதிலக மேற்கண்டவாறு கூறினார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அமர்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இரண்டாவது அமர்வில் கலாநிதி கொட்பிறி குணதிலக சாட்சியம் அளித்தார். அவ்வேளையில் அவர் மேலும் கூறியதாவது:

''நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான சம்பவம் 83 ஆம் ஆண்டு இனக்கலவரம். இச்சம்பவத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனங்களிடையே மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.

''தென் ஆபிரிக்கா, ஒல்லாந்து, குவாத்த மாலா ஆகிய நாடுகளிலும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

அந்த நாடுகளில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக இருந்தன.

''வன்முறைகள் காரணமாக மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவம் முடிவடைந்திருந்தன. நீண்ட காலமாக இருந்த இன மோதல்கள் முடிவடைந்திருந்தன.

''இலங்கையில் அத்தகைய நிலைமை இல்லை. இங்கே இனப்பிரச்சினை தொடர்ந்து காணப்படுகிறது.

''பழைய காயங்களை மீண்டும் திறப்பதை நோக்கமாகக் கொள்ளக் கூடாது. ஆனால் மேற் கொண்டும் காயங்கள் ஏற்படாமல் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

''தற்செயலாக செவிமடுக்க நேரிட்ட தொலைபேசி உரையாடல் என் நினைவுக்கு வருகிறது. 83 வன்முறைகள் நடைபெற்ற போது காதில் விழுந்த உரையாடல் அது.

''கட்டுப்பாட்டைக் கொண்டுவர துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு அதிகாரி கட்டளை பிறப்பித்தார். ஆனால் அதிகளவு ஆட்கள் இருக்கிறார்கள். எனவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முடியாது என்று பொலிஸார் மறுப்புத் தெரிவிக்கிறார்கள். இதன் பெறுபேறு என்ன என்பதை அனைவரும் அறிவார்கள்.

''உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு இயன்ற அளவுக்கு இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களைப் பெற வேண்டும்.

''சிங்களவர்கள், தமிழர்கள் ஆகிய இரு சாராரையும் அணுகுதல் வேண்டும்.

''அதிகாரிகள் அரசியல் வாதிகள் சமயத் தலைவர்கள் ஊடகவியலாளர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றும் ஆராயப்படல் வேண்டும்.

''வன்முறைகளைத் தடுப்பதற்கு செயற்பட்டவர்களின் கருத்துக்களுக்கும் இடம் வழங்கப்பட வேண்டும்.

''ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எதிர்காலத்திற்கு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும்.

— இவ்வாறு கலாநிதி கொட்பிறி குணதிலக சாட்சியம் அளித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு ஓய்வு பெற்ற உயர் நீதியரசர் சுப்பையா சர்வானந்தா தலைமையில் இயங்குகிறது. ஜனாதிபதி சட்டத்தரணிகளான சசித களுபந்து, முஹமட் முஹமட் சுஹைப் ஆகியோர் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள்.

# சீருடையினரைக் கலக்கும் தொலைபேசி அழைப்புகள்

''யாழ்ப்பாணத்தில் சட்டம் – ஒழுங்கை கவனிக்கிற ஸ்ரேசனுக்குக் கடந்த 2 மாத காலமாக அநாமதேய தொலைபேசி அழைப்புகள் வருகுதாம். அதில் சொல்லப்படும் விஷயத்தால் அவை கலங்கிப் போயிருக்கினமாம்''

தேரடியில் அரட்டையை ஆரம்பித்தான் டானியல்.

''என்ன அப்படிப் பெரிய விஷயம்'' ஆவலாகக் கேட்டார் விநாசியர்.

''தொலைபேசியில் பேசும் குரல், 'நான் புலி பேசுகிறேன். இன்னும் இரண்டு மணித்தியாலத்துக்குள் ஸ்ரேசனைத் தாக்கப் போகின்றோம்'' என்றும்–

''எங்கடை ஆட்களைத் தேடித் தேடி பிடிக்கிறீங்களாம். அதற்குச் சரியான பாடம் புகட்டப் போறம்' என்றும் – பல்வேறு எச்சரிக்கைகளை விடுகுதாம்'' கூறினான் டானியல்.

''எனக்கென்னவோ இது 'பயந்து ஓடுற நாயை துரத்திற கதை தான் போலக் கிடக்கு, இப்படி இரண்டு மாசமாக போனிலை வாய் மிரட்டல் விட்டுக் கொண்டு இருக்கிற பழக்கம் புலிகளுக்கு இல்லை'' விட்டேத்தியாகச் சொன்னாள் சின்னாச்சி.

''அது எங்களுக்கும் ஓரளவு விளங்குது சின்னாச்சி. ஆனால் 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற மாதிரி அவை அதிர்ந்து போய் எல்லோ நிற்கினம்'' சிரித்துக் கொண்டே கூறினான் டானியல்.

''ஓம், வன்னியிலை இருந்து வீசின ஆடிக் காத்திலை கட்டுநாயக்க அம்மியே ஆகாசத்திலை பறக்கும் போது, மற்ற இலவம் பஞ்சுகள் எல்லாம் எந்த மூலைக்கு?'' சந்தோஷக் குரலில் கேட்டபடியே, கடலை வாங்கிய பொடியனுக்கு தாராளமாக அள்ளிக் கொடுத்தாள் சின்னாச்சி.

''அதனால் தான் சின்னாச்சி அவை தொலைபேசி மிரட்டலை சாதாரணமாக நினைத்து அலட்சியப்படுத்துவதா அல்லது சீரியஸாக எடுப்பதா? என்று விளங்காமல் குழம்பிப் போயிருக்கினமாம். இதிலை பகிடி என்ன தெரியுமே? தொலைபேசியில் பேசுவது யாராக இருந்தாலும் பரவாயில்லை. எதற்கும் பின்னாலை உதவும் என்ற நினைப்போடு, தொலைபேசியை எடுக்கிறவர், தன்ரை பெயரையும் தெரிந்த அரைகுறைத் தமிழில் சொல்லி தான் பிரச்சினை இல்லாத ஆள். ஆக கசிப்பு, திருட்டு கேஸ்கள் மட்டும் தான் பிடிக்கிறனான் என்று சொல்லி வைக்கினமாம். எங்கும் போய், எதிலும் வெல்லக் கூடிய ஆட்கள், இங்கை வந்தால் தங்களையாவது விடட்டும் என்று நல்ல பெயர் எடுக்கத் தான் இப்படிச் சொல்லப்படுகுதாம்'' இப்படி டானியல் சொல்லி முடிக்கவும்,

''நல்ல கூத்துத்தான்'' என்று சிலாகித்தார் விநாசியர்.

''தொலைபேசி அழைப்பாலை வாற கலக்கத்தை விடுங்கோ, குடாநாட்டு மோட்டோரோலா தொலைபேசி இணைப்புள்ளவர்களுக்கு ரெலிகொம் நிறுவனம் அனுப்பிய ஜூலை மாதத்து பில்லைப் பார்த்தவைக்கு மூச்சு நிற்கிற மாதிரி ஆகிப் போச்சுதாம்'' என்றான் கொம்யுனிகேஷன் லோகன்.

''ஏன் பில்லோட மயக்க மருந்தும் கொடுத்தவையே'' நக்கலாகக் கேட்டாள் சின்னாச்சி.

''ஜூலை மாத பில்களில் நானாவிதம் என்ற பெயரில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகை ஒவ்வொருவருக்கும் குறிப்பிடப்பட்டிருந்ததாம். இது எதற்கான கட்டணம் என்று தெரியாமல், இவ்வளவு பெரிய தொகையை ஏன் எப்படி எதற்குக் கட்டுவது என்று தெரியாமல் 'மோட்டோரோலா' பாவனையாளர்கள் திகைச்சுப் போய் இருக்கினமாம்'' விளக்கினான் லோகன்.

''அதெப்படித் தம்பி, இவ்வளவு பெரிய தொகையை முன்னறிவித்தல் ஏதுமின்றி, காரணமும் குறிப்பிடாமல் அதுவும் நானாவிதம் என்ற பெயரில் வாங்குவினம்?'' ஆச்சரியப்பட்டான் டானியல்.

''இந்த விஷயம் பற்றி நானும் கேள்விப்பட்டனான்'' ஆரம்பித்தார் மாஸ்டர்.

''1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாட்டில் தொலைபேசி இணைப்புகள் மீண்டும் வழங்கப்பட்டன. அப்போது 'மோட்டோரோலா' இணைப்புகளைப் பெற்றவர்களுக்கு அதன் வானொலி உபகரணம் இயங்குவதற்கான மின்சாரத்தைப் பெறுவதற்காக சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கு ''சோலார் பனலும்'' அதோடுள்ள உபகரணத்துக்காக சுமார் 39 ஆயிரம் ரூபாவும் வரியுடன் சேர்த்து அறவிடப்பட்டிருந்தது.



## தேரடி அரட்டை

''ஆனால் இத்தனை வருடம் கழித்து நானாவித செலவுகள் என்ற பெயரில், அந்த சூரிய மின் உற்பத்திக் கருவியைப் பராமரித்ததாகக் கூறி – மாதம் 2 ஆயிரம் ரூபாவும் அதற்கான வரியுமாக இது வரை காலத்துக்கு உண்டான தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காம். ஆனால் தொலைபேசி இணைப்புக் கொடுத்த போது எதுவும் சொல்லாமல் இவ்வளவு காலம் கழித்து, இப்படிப் பெரும் தொகையை அறவிடுவது நியாயமற்றது என்று மோட்டோரோலா பாவனையாளர்கள் பொருமுகினமாம்'' கேள்விப்பட்டதைக் கூறி முடித்தார் மாஸ்டர்.

'இது பற்றி பில் அனுப்பினவையிடம் விசாரித்தபோது, 'தொலைபேசி இணைப்பு வேணும் என்ற போது விழுந்தடிச்சு வாங்கிப் போட்டு, இப்ப காசு கட்டச் சொன்னால் கட்ட வேண்டியது தானே'' என்று விட்டேத்தியாகப் பதில் வந்ததாம். ''இதனைச் சமாளிக்க வழவழா அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கினமாம்'' என்றான் லோகன்.

''அவை என்ன தங்கடை சொந்தக் காசிலேயே தொலைபேசி இணைப்புக் கொடுத்தவையாம், அதைவிட அந்த நேரத்திலை தங்கடை சொந்தக்காரர் பேரிலை கொம்யுனிகேஷன் போட்டதும், இணைப்புக் கொடுத்து பொக்கெற்றுகளை நிரப்பியதும் தெரியாத கதையே. இப்ப என்னவோ தர்மத்துக்குத் தொலைபேசி இணைப்புக் கொடுத்த மாதிரிக் கதைக்கினம்'' சினந்தார் விநாசியர்.

''சேவைகள் என்ற பெயரில் இப்ப நாங்கள் நினைச்சதைச் செய்யலாம் என்று தான் குடாநாட்டிலை அதிகாரிகள் நினைக்கினம். குடாநாட்டிலை மின்மானி பொருத்தப்படாத இணைப்புகளுக்கு நிரந்தரமாக இவ்வளவு யுனிட் என்று கணக்கிட்டு வந்தவை. எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஒவ்வொரு கணக்கிலும் திடீரென்று 30 யுனிட்டுகளைக் கூட்டியிருக்கினமாம்.

''இத்தனைக்கும் மீற்றர் பூட்டச் சொன்னால் மீற்றருக்கு இலங்கை முழுவதும் தட்டுப்பாடு. என்ன செய்யிறது? என்று பதில் கேள்வி வருகுதாம். எதைக் கேட்டாலும் கொழும்பிலை சொல்லுகினம் என்று ரெடிமேட் பதில் வருகுதாம். ஆக குடா நாட்டு மக்கள் தலையிலை எப்படிவேணுமென்றாலும் மிளகாய் அரைக்கலாம். கேட்டுக் கேள்வியில்லை என்ற நிலை உருவாகிக் கொண்டு வருவது கவலையாக உள்ளது'' வேதனைப்பட்டான் டானியல்.

அப்போது தொண்டையைச் செருமினார் மாஸ்டர். அவர் செருமினால் நீண்ட விளக்கம் வரும் என்று அர்த்தம். கூறத் தொடங்கினார் மாஸ்டர்.

''தம்பி அரச அடக்கு முறையை விட மோசமானது அதிகாரிகளின் பயங்கரவாதம். ஏழை நாடுகள் குறிப்பாக வளரும் ஆசிய நாடுகளில் இந்த அதிகாரிகளின் பயங்கரவாதம் சமூகத்தைக் கெடுக்கும் வியாதியாகி விட்டது.

''வெளிநாடுகளில் அரசு அலுவலகத்தில் மின்விசிறி போடாததால் தனக்கு வியர்த்ததாகக் கூறி அதற்கு நஷ்ட ஈடுகோரி வழக்குப் போட்ட சம்பவம் இருக்கு.

''ஆனால் கரண்ட் தாறது ஒழுங்கில்லை என்றால் கரண்டை வெட்டுவம் என்று மிரட்டுவதும், தொலைபேசி குறைபாடுகளை சுட்டிக் காட்டினால் இணைப்பைத் துண்டிப்பதுமாக அதிகாரிகளின் எதேச்சாதிகாரம் இங்கு தலைதூக்கி ஆடுகிறது. நாங்களும் ஏன் வம்பு என்று பொது நலனுக்காக வழக்குப் போடுவதும் இல்லை. எதிர்ப்பதும் இல்லை.

''உண்மையில் பார்த்தால் உரிமைகளுக்காகப் போராடும் ஓர் இனத்தில், அரசு அதிகாரிகள் சிறப்பாகப் பங்களிப்புச் செய்ய முடியும்– கொழும்பிலை சொல்லுகினம் என்று கிளிப்பிள்ளை மாதிரிச் சொல்வதை விட்டிட்டு, புரியாத மொழியில் அரசு கடிதம் அனுப்பினால் தமிழில் அனுப்பச் சொல்லிக் கேட்கலாம். தமிழர் தலையில் மிளகாய் அரைத்து கேட்டுக் கேள்வி இல்லாமல் கட்டணம் வசூலிக்கச் சொன்னால் அதைப் பற்றி மக்களுக்கு விளக்கி மேலிடத்தில் கேள்வி கேட்கலாம். ஆனால் இப்படி எதுவுமே செய்யாமல், ஊழலில் பணம் குவிக்கும் அரச அதிகாரிகள் சுக போகத்தில் இருக்கிறார்கள்.

''வெளிநாடுகளில் அரசு வேலை என்றால் எல்லாருக்கும் பயப்படவேண்டும். அதனால் தனியார் துறை வளர்ந்து அந்த நாடுகள் வளம்கொழிக்கின்றன. ஆனால் எங்கள் நாட்டில் தலைகீழ் நிலைமையாக இருப்பதால் முன்னேற்றம் என்பது பகல் கனவுதான்''

முடித்துக் கொண்டு எழுந்தார் மாஸ்டர்.

தேரடி கலைந்தது.

– ஏகலைவன்




### விவாகரத்து

அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள அதிகாரத் தரப்பாருக்கும் மூன்றெழுத்துத் தீவிர வாதக் கட்சிக்கும் நடந்த திருமணம் விரைவில் விவாகரத்தில் முடிவடையுமாம்.

ஒருதமிழ்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்படி அதீதநம்பிக்கைவைத்திருக்கிறார்களாம்.

இதற்கு இந்தத் தமிழ்க்கட்சி சோதிடத்தினை ஆதாரம் காட்டுகிறதாம்.

பண்டா – செல்வா ஒப்பந்தம் தோல்வி அடையக்காரணம் அது ராகுகாலத்தில் கைசாத்திடப்பட்டதுதான். அது போலத்தான் இப்போதும் நடந்திருக்கிறது என்று அடித்துக் கூறுகிறார்கள் இந்தத் தமிழ்க்கட்சி முக்கியஸ்தர்கள்.

சுபநேரத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் அமைச்சர்களைக் குறைப்பதனை ஒரு மாத காலத்துக்குப் பின் போட வேண்டும் என்று கடைசி நேரத்தில் அதிகாரத்தரப்பில் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதாம்.

இதனால் வெகுண்ட மூன்றெழுத்துக் காரர்களைச் சமாதானப்படுத்துவதில் சுபநேரம் தவறி விட்டதாக அதிகார அம்மணி தரப்பில் சொல்லப்படுகிறதாம்.

இந்தத்தகவலைக்கேட்டதமிழ்க்கட்சியின் உறுப்பினர்ஒருவர்தனக்குத்தெரிந்த சோதிடத்தில்கணக்குப்பார்த்துவிட்டுநிச்சயம் விவாகரத்து நடக்கும்என்றுகூறிவருகிறாராம்.

### நம்பிக்கையீனம்

ஒருதமிழ்க்கட்சி அதிகார அம்மணியின் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து பல நாட்கள் ஆகின்றன.

ஆனால் நம்பிக்கை இல்லாதசூழ் நிலையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இனிமேலாவது எடுக்க வேண்டும் என்று அந்தக் கட்சி இப்போது கருதுகிறதாம்.

பச்சைக் கட்சியின் முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்த போதும் மூன்றெழுத்துக் காரர்களின் துரோகத்தால் எல்லாம் தலைகீழாகியதாம். அதிகார அம்மணியின் ஆட்சிக்கு இனி எப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் என்று கூறமுடியாதாம்.

அதனால் தாங்களே அந்தக் கைங்கரியத்தைச் செய்ய அந்தத் தமிழ்க்கட்சியின் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறாராம். இதற்காகஏனையதமிழ்க்கட்சிகளையும்கூட்டுச்சேர்க்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறாராம்.

ஏற்கனவே அடைக்கலமானவருடனும், சேனைநாயகருடனும் பேச்சு நடத்தத் தயாராகி விட்டாராம். தனித்துவத்தலைவருடன் கதைக்கமுயற்சித்த போதும் இன்னும் சந்தர்ப்பம்கிடைக்கவில்லையாம்.

தமிழ் முஸ்லிம் கட்சிகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு அதிகாரத்தரப்பினருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது பற்றிப் பச்சைக் கட்சியின் கருவானவருக்கும் இந்தத் தலைவர் உறுதியாகச் சொல்லி விட்டாராம்.

ஆனால் கருவானவர் அவசரப்பட வேண்டாம் என்று கூறிவிட்டாராம். தமிழ்த் தலைவரோ தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக இருக்கிறாராம். எல்லாம் அந்த விநாயகப் பெருமானின் கடாட்சம்.

### சுயமரியாதை

இந்த நாட்டு மக்கள் நாட்டின் எந்தப் பகுதிக்குள்ளும் எந்தவிதமான தடையும் இன்றிச் சென்றுவர உரிமை உடையவர்கள். அப்படி இருக்க வடக்கு–கிழக்கைப் பொறுத்தவரை ஏன் இந்தப் பாகுபாடு என்று மாமனிதர் ஒருவர் வழக்குத் தொடர இருந்தது பழைய கதை.

இப்போதுள்ள தமிழ்க் கட்சியின் ஒரு புதிய தலைவரும் வழக்குத் தாக்கல் செய்ய முயல்வதாகப் புதிய தகவல். அதற்கு முன்னதாக சீருடைக்கார அமைச்சரின் செயலரிடம் இறுதியாகப் பேசிப் பார்ப்பது முறை.

இதற்காக அந்தத் தமிழ்க் கட்சியின் தலைவர் அமைச்சின் செயலருக்குக் கடிதம் அனுப்பி நேரம் ஒதுக்கும்படி கேட்டிருந்ததும் பழைய கதை.

அப்படிக் கடிதம் அனுப்பி நேரம் ஒதுக்கும்படி கேட்டது அந்தத் தமிழ்க் கட்சியின் சில முக்கிய புள்ளிகளுக்குக் கடும் சினத்தை ஏற்படுத்தி இருக்கிறதாம்.

அதிகார மன்றின் உறுப்பினராகவும், கட்சியின் தலைவராகவும் இருந்து கொண்டு சந்திக்க நேரம் ஒதுக்கும்படி அமைச்சுச் செயலரிடம் கேட்பதா என்று கொதிக்கிறார்கள்.

### வேஷம்

அரசியல் நெருக்கடியின் உச்சக்கட்டத்தின் போது எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அடிக்கடி சந்தித்துக்கொண்டிருந்த காலம்.

அப்படி ஒரு சந்திப்பு நிகழ்ந்த போது தமிழ்க்கட்சி ஒன்றின் தலைவரும் அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டாராம்.

ஆளும் அதிகார அம்மணியிடம் மூன்றெழுத்துத் தீவிரவாதக்கட்சி துட்டு வாங்கும் நிலைக்குப் போய் விட்டதாக அச்சந்திப்பின் போது ஓர் அரசியல்புள்ளி குறைபட்டுக் கொண்டாராம்.

இது குறித்து ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்லிக் கொண்டிருந்த போது தமிழ்க்கட்சியின் தலைவரும் தன் பங்கிற்கு ஒரு தகவலைச் சொன்னாராம்.

கிழக்கு மாகாணத்தில் இன்னொரு தமிழ்க் கட்சியில் அங்கம் வகிக்கும் அதிகார மன்ற உறுப்பினர் ஒருவரின் சங்கதியைச் சொன்னாராம்.

இந்தக் கதையை எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்தியில் கட்சியின் தலைவர் அவிழ்த்து விட்ட செயல் அங்கிருந்த முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவருக்கு அறவே பிடிக்கவில்லையாம்.

பெரும்பான்மை மாற்றுக் கட்சிக்காரர்கள் இருக்கும் இடத்தில் தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுப்பதா என்று அந்தக் கட்சியின் செயலரிடம் அவர் வேதனையுடன் குறைபட்டுக்கொண்டதாகத் தகவல்.

### சிறுபிள்ளைத்தனம்

உள்நாட்டில் கீரியும் பாம்புமாக இருப்பவர்கள் வெளிநாட்டிலும் அப்படியே நடந்து கொள்வார்கள் என்பது உறுதியாகி விட்டதாம்.

அயல் நாட்டில் ஒரு மாநாடு. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் எமது நாட்டுக்கும் அயல் நாட்டுக்கும் இடையிலான தொடர்பு பற்றித்தான் அந்த மாநாடு. எமது நாட்டிலிருந்து தமிழ்க்கட்சித் தலைவர்களும் போனார்கள்.

மாநாட்டின் இரண்டாம் நாள். இங்கே உள்நாட்டில் கீரியும் பாம்புமாக விளங்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அயல் நாட்டு மாநாட்டில் நடந்து கொண்டவிதம் அனைவரையும் முகத்தைச் சுழிக்கவைத்ததாம்.

இந்தப் பிரதிநிதிகளில் ஒருவர் தமிழ்க்கட்சி ஒன்றின் டாக்டராம். மற்றவர் சிரேஷ்ட பிரதிநிதியாம்.

இரண்டெழுத்து இயக்கக்காரர்களுக்குத் தமிழ்ப் பெண்கள் தும்புத்தடியால் தான் சாப்பாடு போடுகிறார்கள் என்றும் அத்தகையவர்களுக்குத்தான் இப்போது சிரேஷ்ட பிரதிநிதி வக்காலத்து வாங்குகிறார் என்றும் டாக்டர் கூறினாராம்.


இதனால் வெகுண்ட சிரேஷ்ட பிரதிநிதி தீவுப்பகுதிச் சமாச்சாரங்களை அடுக்கடுக்காக அள்ளி வைத்துப் பேச மாநாடே அதிர்ந்து போனதாம்!

## மர்மப் பெண் 11

கதை: மாஸ்டர் சிவலிங்கம் சித்திரம்: தீபன்




டொல்பின் ஒன்று தனது உறவினர்களை விட்டுப்பிரிந்து விட்டது. எங்கே அதற்கு வழிகாட்டி அதனை உறவினர்களுடன் சேர்த்து விடுங்கள்.



### விடுகதைப் புதிர்கள்

* கொம்பு ஆமை இறங்கி வருகுது பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம். அது என்ன?
நத்தை

* ஊருக்கெல்லாம் இரு விளக்கு இரவில் ஒன்று பகலில் ஒன்று அது என்ன?
சந்திரன், சூரியன்

எம்.ஐ.எப். இல்ஹானத்
தரம் – 7E
பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி.
புத்தளம்.



## இணையத்தில் பரதம்

தமிழ் மக்களின் பாரம்பரிய கலையான பரத நாட்டியத்தை உலக அளவில் எடுத்துச் சொல் கிறது வெப் தளமான www.bharathanatyam.com

இந்த வெப்தளம் பரத நாட்டியத்தின் பல்வேறு சிறப்புக்களையும் விளக்கும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை , பரதநாட்டியம் போன்றவற்றின் அடிப்படைகளைக்கொண்ட இன்னொரு வெப்தளம் www.bharathasangeetham.com. இதில் நடனக் கலைஞர் களைப் பற்றியும் பல் வேறு கலைகளைப் பற்றியுமான பல தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

### சிந்தனைக்கு

''தீயினால் சுட்ட புண்
உள்ளாறும் ஆறாது
நாவினால் சுட்ட வடு''

கருத்து : ஒருவன் மனதில் தீயினால் ஏற்பட்ட காயம் காலக் கிரமத்தில் ஆறிவிடும் ஆனால் நாவினால் ஏற்படும் வடு ஒருநாளும் அழியாது.

ஜெனயாழன் ஜெகதீஸ்வரக்குருக்கள்
தரம் –4, கிளிநொச்சி.

### நின்ற நெறி மொழிகள்

1. நித்திய காலமும் சத்தியம் பேசு
2. மற்றவர் வாழ்வில் குற்றங் காணேல்
3.வஞ்சகர் உறவு நஞ்சினுங் கொடியது
4. கடவுள் என்பது உன் கடமையும் அறிவும்.
5. அன்பு மிகுந்துள நண்பனைத் தெரிந்தெடு

சி. கோபிராஜ்,தரம் – 08
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## இளசு சிட்டு

ஷர்மிலா

## ஜனவரித் தகவல்கள்

* ஜனவரி – Janus என்ற தெய்வத்தின் பெயரில் கிரேக்கர்கள் இப்பெயரை இட்டனர்.

* ஜனவரி 1இல் இருந்து நாட்களைக் கணிக்கும் முறையை ஏற்படுத்தியவர் –13ஆம் கிரகரி பாப்பரசர்.

* ஜனவரியில் இறந்த முக்கிய உலகத் தலைவர்கள்.
வின்செண்ட் சேச்சில்
மகாத்மா காந்தி

* ஜனவரியில் இறந்த வானிலை ஆராய்ச்சியாளர்கள்
கலிலியோ கலிலி(1642 ஜனவரி 08)
எட்மெண்ட் ஹீலி (1742 ஜனவரி 10)

ஆ.துர்ஷிகா
ஆண்டு– 4B
மு/ யோகபுரம் ம.வி

## சிறுவர் கைவண்ணம்



T.கிருஷ்ணா
தரம் –12
உடுவில் மகளிர் கல்லூரி



ந.நதியா
தரம் – 10B
யா/ வடமராட்சி
மத்திய மகளிர் கல்லூரி

## அறிவியல் விந்தைகள்

*திமிங்கிலம் கடல் அலைகளில் ஏற்படுத்தும் ஒரு வித ஒலியதிர்வுகளை வைத்து அவை கடலின் எந்தப் பக்கத்திலுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியுமாம் . இதற்கு ஹைட்ரோபோன்ஸ் என்ற கருவியைப் பயன்படுத்துகின்றனர்.

*பயங்கரமான கடல்பிராணி ஒக்டோபஸின் உறிஞ்சு குழல் 23 அடி நீளம் உடையது.

*கோலா கரடிகளுக்குப் பிடித்த உணவு யூகலிப்டஸ் மரத்தின் இலைகளே !

*ஜேர்மனி நாட்டில் குழந்தைகள் வீட்டில் படிப்பதே இல்லையாம். இதைப்பற்றி பெற்றோர்களிடம் கேட்டால் வீட்டில் குழந்தைகள் படிப்பதென்றால் அவர்கள் ஏன் பாடசாலை செல்ல வேண்டும். அங்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எதிர்க்கேள்வி கேட்கிறார்கள் . அதுமட்டுமல்ல இரவில் படித்தால் அவர்களின் உடல் நிலை பாதிப்படையுமாம்.

## அதிசயம் ஆனால் உண்மை!

வழமையாக பாம்புகள் தான் தவளைகளைப் பிடித்து தமது உணவாக்கிக் கொள்ளும். ஆனால் தென் அமெரிக்காவில் வாழும் தவளையொன்று பாம்பை விழுங்கி விடுகிறதாம். இந்த பலே தவளையைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் வரிசையில் நிற்கிறார்களாம்.



## பாரதியின் நினைவுடன்...

அகிலமெல்லாம் புகழ்பரவ
அனல் தெறிக்கும்
பாக்களைப்
பாடிய எங்கள்
பாவேந்தன் பாரதியே!
காலமெல்லாம் கைதியராய்
கன்னியர்கள் வாழ்ந்திடும்
நிலைகண்டு பொறுக்காமல்
நிமிர்ந்திடச் செய்த பாரதியே!
பெண்ணின விடுதலைக்காய்
பெரும்பாடுபட்ட பாரதியே!
நின்புகழ் பாடிடவே
நிகழ்கால அகிலந்தன்னில்
வார்த்தை உண்டோ? –
உந்தன்
வாழ்வையே தமிழிற்காய்
அர்ப்பணித்தாய் – இந்த
அகிலம் உள்ளவரை
நிலைத்து நிற்கும் – உன்
நினைவு – சாதி
வேற்றுமையை
ஒழித்துவிட முனைந்தவனே!
உன்
ஊனுடல் அழிந்தாலும்
புகழுடல் அழியாதய்யா

வி.யாழினி, தரம் – 11
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

## நான்

எனது பெயர் யோகினி. எனது தாய் தந்தை பெயர்கள் முறையே பத்மினிதேவி, அம்பலவாணர் . நான் வட்டு மத்திய கல்லூரியில் தரம் –7 இல் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறேன். எனது நண்பி அபிராமி. எனது பொழுது போக்கு சுடர்ஒளி வாசித்தல். நண்பியுடன் விளையாடுதல் . எனது எதிர்கால இலட்சியம் ஓர் ஆசிரியையாக வரவேண்டும் என்பதே

அம்பலவாணர் யோகினி
தரம் – 7
வட்டுமத்திய கல்லூரி
வட்டுக்கோட்டை.



## கால்பந்திற்குப் பெருமை சேர்த்த தாய்லாந்து

அழகுக்குப் பெயர் பெற்ற நாடு தாய்லாந்து. அது போலவே விளையாட்டிலும் நாட்டமுடைய இவர்களில் அதிக பங்கினர் கால்பந்து விளையாட்டினையே ரசிக்கின்றனர். விளை யாட்டுலகத்தையே பிரமிக்க வைக்கும் நிகழ்ச்சி ஒன்று இங்கு நடந்திருக் கின்றது.

கால்பந்து விளையாட்டு வீரர் டேவிட் பெக்காமுக்கு ஒரு அடி உயரத்தில் சிலை எழுப்பியிருக்கின்றனர். இதற்குத் தங்க முலாம் பூசி பாங்கொக் நகரிலுள்ள பரிவாஸ் புத்தர் கோவிலில் வைத்து இருக்கின்றனராம்.

### நூல்களும் அவற்றினை இயற்றியவர்களும்

திருக்குறள் – திருவள்ளுவர்
சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்
கந்தபுராணம் – கச்சியப்ப சிவாச்சாரியார்
சீறாப்புராணம் – உமறுப்புலவர்
மகாபாரதம் – வேதவியாசர்
கீதாஞ்சலி – இரவீந்திர நாத் தாகூர்
சாகுந்தலம் – காளிதாசன்
இராமாயணம் – வான்மீகி
இயேசு காவியம் – கவிஞர் கண்ணதாசன்
இலியட் ஒடிசி – ஹோமர்
அர்த்த சாத்திரம் – கௌடில்யன்

எஸ். தனுஷியா
தரம் – 12
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

### புத்தகங்கள்

* உலகின் சாகாவரம் பெற்ற விலை மதிப்பில்லாத பொருட்கள் உண்டு என்றால் அவை புத்தகங்கள் தான்– ரூசோ –

* என் மனதிற்கு ப்பிடித்த புத்தகங்களை என்னிடம் கொடுங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையிலிருக்க நான் தயார்– அரிஸ்டோட்டில்

* சிறந்த புத்தகங்களைப் படிப்பது சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த மனிதர்களுடன் பேசுவதற்கு ஒப்பானது.

* சில புத்தகங்கள் ருசி பார்க்கப்பட வேண்டியவை .சில புத்தகங்கள் விழுங்கப்பட வேண்டியவை .மற்றும் சில மென்று தின்று ஜீரணிக்கப்பட வேண்டியவை.

* சிறந்த புத்தகங்கள் நல்ல தாயாகவும், சிறந்த ஆசிரியராகவும் உற்ற நண்பனாகவும் இருக்கக் கூடியவை.

நிலாந்தி குடாபண்டா,
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்



“அட்டென்ஷன் ப்ளீஸ்!”

சீராகப் பயணித்துக் கொண்டிருந்த அந்த ரயிலின் இரண்டாவது பெட்டியில் பயணித்துக் கொண்டிருந்த அனைவரது கண்களும் குரல் வந்த திக்கை நோக்கின.

அங்கே கௌரவமான — சீமாட்டிக்குரிய தோற்றத்துடன் ஒரு பெண்மணி நின்றிருந்தாள். அவளது கையில் பிஸ்டல் ஒன்று குண்டுகளைக் கக்கத் தயாரான நிலையில் இருந்தது.

பயணிகள் அனைவரும் திகிலுடன் அடுத்து நடக்கப் போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

“உங்கள் உல்லாசத்தில் இடையூறு செய்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். எனக்குத் தேவை உங்களது பணமும் நகைகளும் தான். மரியாதையாக அவற்றைக் கொடுத்து விட்டீர்களேயானால், என்னால் உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது.” தடித்த குரலில் அவள் கூறியவார்த்தைகளைக் கேட்டுப் பெண்களும் குழந்தைகளும் பயத்தில் அழ ஆரம்பித்தார்கள்.

“சைலன்ஸ்...! எல்லோரும் வாயை மூடிக் கொள்ளுங்கள். கடகடவென பணத்தையும் நகைகளையும் எடுத்துக் கொடுங்கள். இல்லையேல் நான் பேசமாட்டேன்... என் துப்பாக்கிதான் பேசும்...!”

அவளது கம்பீரமான எச்சரிக்கைக் குரல் எல்லோரையும் பணிய வைத்தது.

முன்வரிசையிலிருந்த சிறுவன் ஒருவனை எழுப்பி, எல்லோரிடமிருந்தும் பணம், நகைகளைச் சேகரிக்குமாறு உத்தரவிட்டாள். எல்லாவற்றையும் அவன் சேகரித்துக் கொடுத்ததும், தன் தோளிலிருந்த பையினுள் அவற்றைப் போட்டுக் கொண்டாள்.

அவ்வேளையில் தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. முன்வரிசையின் இடதுபக்க ஓரத்து சீற்றில் அமர்ந்திருந்த டேவ்ஸன், திடீரென அவள்மீது பாய்ந்தார்.

டேவ்ஸன் ஒரு ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி. அறுபத்திரண்டு வயதிலும் அதே பொலிஸ் மிடுக்கும் கம்பீரமும் மிக்கவர். கொள்ளைக்காரியை மடக்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்து, அவள் பணம், நகைகளில் குறியாக இருந்த வேளை சட்டென்று பாய்ந்து விட்டார் அவர்.

ஆனால் அந்தப் பெண் சடுதியாக விலகிக் கொண்டாள். ‘தடால்’ என்று தரையில் விழுந்த டேவ்ஸனைத் தனது பாரமான காலணிகளால் கடுமையாகத் தாக்கத் தொடங்கினாள். வலியால் துடித்தார் அவர். அடுத்து ஒரு பயங்கரமும் நிகழ்ந்தது அங்கே—

குப்புறக் கிடந்த டேவ்ஸனைத் தன் கால்களாலேயே புரட்டி நிமிர்ந்து படுக்க வைத் தாள் அவள். வலியால் முனகிக் கொண்டிருந்த அவர் கண்களை மெல்லத் திறந்தார்.

“டுமீல்...! டுமீல்...! டுமீல்...!...”

மூன்று குண்டுகளும் அவரது மார்பை ஊடுருவிப்பாய்ந்தன. முன்வரிசையிலிருந்தவர்களது உடல் முழுவதும் ரத்தம் தெறித்து வழிந்தது. ரயிலின் ஓசையை விட ஓங்கி ஒலித்தது டேவ்ஸனின் மரண ஓலம்.

ஒரு நிமிடம் தான்! தாறுமாறாகத் துடித்த அவரது உடல் ஓய்வுக்கு வந்தது. உயிர் பறந்து விட்டது.

“ஹ... ஹ...ஹா! பார்த்தீர்களா? என்னிடம் வாலாட்ட நினைப்பவர்களுக்கு இது தான் கதி. வேறு யாராவது என்னிடம் மோதிப்பார்க்க நினைத்தால் தாராளமாக வரலாம்.” அவளது சவாலை ஏற்க யாரும் தயாராயில்லை. அந்தப் பெட்டி முழுவதும் நிசப்தம். ரயிலின் ஓசை மட்டும் விடாது கேட்டுக் கொண்டிருந்தது.

சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட அவள், தன்னை எதிர்க்கும் துணிவு அங்கு யாருக்கும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டவளாகப் புன்னகை செய்தாள்.

“ஓ. கே! உங்கள் தாராள மனதுக்கு நன்றி. நான் வருகிறேன்....”

ஓடுகிற ரயிலிலிருந்து ‘ஜிவ்..!’ வென்று பாய்ந்து இருட்டுக்குள் மாயமாகிப் போனாள் அவள்.

தான் இழுத்துச் செல்லும் பெட்டி ஒன்றில் கொள்ளை நடந்திருக்கிறது என்பதையோ, பிணம் ஒன்றையும் சேர்த்து இழுத்துப் போகிறேன் என்பதையோ உணராமல் தன்பாட்டில் விரைந்து கொண்டிருந்தது ரயில் என்ஜின்.

* * *

“சே... மறுபடியும் ‘அவள்’ தனது கைவரிசையைக் காட்டி விட்டாளே...” சலிப்போடு கூறிக் கொண்டார் இன்ஸ்பெக்டர் ஹோம்ஸ்.

ரயில், பஸ், விடுதிகள், வீடுகள், வீதிகள் என்று ஓர் இடத்தையும் மீதம் வைக்காமல் கொள்ளையிலும் அதைத் தடுக்க வருபவர்களைக் கொல்வதிலும் ஈடுபட்டுவரும் அந்த ‘அவள்’ தான் கோதம் நகரமக்களுக்கும் காவல் துறையினருக்கும் இப்போது சிம்ம சொப்பனமாக இருக்கிறாள்.

மூன்று தடவைகள் ‘அவளை’ப் பொலிஸார் சுற்றி வளைத்து மடக்கினார்கள். ஆனாலும் அவளை நெருங்கிக் கைது செய்ய அவர்களால் இயலவில்லை. தமது சகாக்கள் பதினொரு பேரைப் பலி கொடுக்கத் தான் முடிந்ததே தவிர அவளது நிழலைக் கூட எட்ட முடியவில்லை.

பரிதாபகர மாகப் பலி யாகும் நகர மக்கள் — மேலிடத்து நெருக்கடி — மூக்குடை பட்டுத் திரும்பிவரும் பொலிஸ்காரர்கள் — என்று பெரிய அழுத்தத் துக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருந்தார் ஹோம்ஸ்.

தனி ஒருத்தியாக நகரின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பையே கேள்விக்குறியாக — கேலிக்குரியதாக்கிக் கொண்டிருக்கும் ‘அவளை’ எப்படிப் பிடிப்பது? என்பதுதான் அவரது மண்டையைக் குடையும் கேள்வி.

“ஸார்... போன்...”

சிந்தனை கலைந்து திரும்பினார்.

ஹலோ... ஹோம்ஸ் ஹியர்...”

மறுமுனையிலிருந்து அவருக்கு உற்சாகம் தரக்கூடிய தகவல் ஒன்று வந்திருந்தது.

“அப்படியா? ஓகே. உடனே வருகிறேன்”

ரிஸீவரை வைத்துவிட்டு ஜீப்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர் போய்ச் சேர்ந்த இடம் — பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பரிசோதனைச்சாலை. ரயிலில் ‘அவளா’ல் கொல்லப்பட்ட டேவ்ஸனின் உடலைப் புகைப்படம் எடுத்து — ஆராய்ந்ததில் ஒரு தடயம் சிக்கியிருந்தது.

டேவ்ஸனின் உடலிலிருந்து வெளியேறிய ரத்தத்தில் கொள்ளைக்காரி அணிந்திருந்த பாதணி பதிந்து — பெட்டியின் உள் தளத்தில் தடங்களைப் பதித்திருந்தது.

ரத்தத்தினால் பதிந்த அத்தடங்களின் புகைப்படங்களைப் பெரிதாக்கிப் பார்த்த போது பாதணி தயாரிக்கப்பட்ட கடையின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. அதுபற்றி இன்ஸ்பெக்டர் ஹோம்ஸின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட அவர் துரிதமாகச் செயற்பட்டார்.

* * *

‘FIT’ என்ற பெயர் கொண்ட அந்தப் பாதணிக் கடையில், பாதணியின் ‘X 122’ என்ற குறியீட்டு இலக்கத்தைக் கொடுத்ததுமே அவர்கள் அப்பாதணிக்குரிய வரைப் பற்றிய விவரங்களைக் கூறிவிட்டார்கள்.

விசேடமாக அளவு எடுக்கப்பட்டு — வித்தியாசமான அமைப்பில் — வாடிக்கையாளரின் ‘ஓடரின்’ பெயரில் அந்தப் பாதணி தயாரிக்கப்பட்டிருந்தது. கூடுமாக ஓடக்கூடிய வகையிலும் உறுதியும் பாரமும் கொண்டதாக அதைத் தயாரிப்பதற்கான ஓடரைக் கொடுத்திருந்தவனது பெயர் பிரெட்–ரோஜர்.

ரோஜர் ஒரு முன்னாள் திருடன். பல துணிகரமான சாகஸத் திருட்டுக்களில் ஈடுபட்டுப் பலவருடங்களைச் சிறையில் கழித்தவன். கண்பார்வைக் குறைவும், குதிக்காலில் ஏற்பட்ட பயங்கர எலும்புச் சிதைவும் அவனைத் திருட்டுத் தொழிலிலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்து விட்டன. நீண்டகாலமாக எவ்வித குற்றச் செயல்களிலும் சம்பந்தப்படாமல் ஒதுங்கியே வாழ்ந்து வருகிறான் அவன்.

* * *

ரோஜரின் வீட்டைப் பொலிஸார் சூழ்ந்து கொண்டனர். ரோஜர் கைது செய்யப்பட்டபோது குற்றச் சாட்டுக்களை அவன் மறுத்தான். கொள்ளைக்காரியொருத்திக்குத் தான் அடைக்கலம் கொடுக்கவேயில்லை என்று சாதித்தான்.

எனினும் ஹோம்ஸ், ரோஜரின் வீட்டில் சோதனைகளைத் தீவிரமாக்கினார். வீடு முழுவதும் அங்குலம் அங்குலமாகத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டபோது ரகசியப் பாதாள அறை ஒன்று அந்த வீட்டினுள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த அறையினுள்ளிருந்து அதிர்ச்சி தரத்தக்க ஆதாரங்கள் பல கிடைத்தன. பெண்கள் அணியும் உடைகள், பெண்ணுக்கான முகத்தோற்றமுடைய உடைகள், விசேட பாதணி, கொள்ளையிடப்பட்ட பொருட்கள், பணம், துப்பாக்கி போன்றன அகப்பட்டன.

பெண் போன்று வேடமணிந்து கொள்ளைகளில் ஈடுபட்டது பிரெட் ரோஜர்தான் என்னும் அதிர்ச்சியான உண்மை தெரிய வந்தது. அந்தப் பாதாள அறையில் கிடைத்த ஆதாரங்கள் அதை உறுதிப் படுத்தின.

ரோஜர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது அவன் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் 31.7 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அனைத்தையும் அவன் ஒப்புக்கொண்டான். மறுக்க அவனுக்கு வழியிருக்கவில்லை. தூக்கு மேடைக்கு அவன் செல்வதற்கான நாளைத் தனது தீர்ப்பில் எழுதினார் நீதிபதி.

குப்புறக் கிடந்த டேவ்ஸனைத் தன் கால்களாலேயே புரட்டி நிமிர்ந்து படுக்க வைத் தாள் அவள். வலியால் முனகிக் கொண்டிருந்த அவர் கண்களை மெல்லத் திறந்தார்.
“டுமீல்...! டுமீல்...! டுமீல்...!...”
மூன்று குண்டுகளும் அவரது மார்பை ஊடுருவிப் பாய்ந்தன. முன் வரிசையிலிருந்தவர் களது உடல் முழுவதும் ரத்தம் தெறித்து வழிந்தது. ரயிலின் ஓசையை விட ஓங்கி ஒலித்தது டேவ்ஸ னின் மரண ஓலம்.




## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00–11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30–12.00 | | | | | | | |
| 12.00–12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30–13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00–13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.15–13.30 | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | ரிலாக்ஸ் டைம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.30–16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் டைம் |
| 16.00–16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | |
| 16.30–17.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சனிதபதனி |
| 17.00–17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | இசை நிகழ்ச்சி |
| 17.30–18.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப் பறவை | சின்னத்திரை |
| 18.00–18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30–19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00–19.30 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# துறைநீலாவணை மக்களின் துயர் தீர்க்க எவரும் இல்லையா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக விளங்குவது துறைநீலாவணைக் கிராமம். இந்தக் கிராமம் அன்று தொட்டு இன்றுவரை எவ்வித அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுகிறது. அரசியல்வாதிகளினாலும், அதிகாரிகளினாலும் மாற்றான் மனப்பான்மையோடு நோக்கப்படுகிறது.

இக்கிராம மக்களின் பூர்வீகத் தொழில் விவசாயம்.

எனினும் தமது அயராத முயற்சியினால் பல தரப்பட்ட அரச பதவிகளில் இவர்களில் பலர் இருப்பதைக் காண முடிகிறது.

இன்றைய நிலையில் இந்தக் கிராம மக்களின் அதிமுக்கிய பிரச்சினையாக விளங்குவது குடி தண்ணீர் பிரச்சினை ஆகும்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொடிய வரட்சி நிலவுகிறது. இதனால் பல கிராம மக்கள் குடிதண்ணீர் இன்றி அல்லலுறுகின்றனர்.

ஆனால் துறைநீலாவணைக் கிராமத்தின் பௌதீக அமைப்பின் அடிப்படையில் இங்கு நிரந்தரமாக குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

அன்று உள்ளூராட்சி அமைச்சராக இருந்த அமரர் எம்.திருச்செல்வம் இந்தக் கிராம மக்களின் தேவை அறிந்து ஐயாயிரம் கலன் கொள்ளளவுடைய குடிதண்ணீர்த் தாங்கியை நிறுவி 1968ஆம் ஆண்டு குடிதண்ணீர் வழங்கினார்.

இதற்கெல்லாம் பக்கபலமாக இருந்தவர், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சீ.மு.இராசமாணிக்கம்.

இந்த குடி தண்ணீர் திட்டம் ஏற்படுத்தப்பட்டு இன்று 31 வருடங்கள் உருண்டோடி விட்டன. அன்று இருந்த சனத் தொகையுடன் ஒப்பிடும்போது இன்று சனத் தொகை அதிகம்.

அத்துடன் வடக்கு கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகத் தஞ்சம் அடைந்தோரும் இங்கு வாழ்கின்றனர்.

முன்னர் ஏற்படுத்தப்பட்ட குழாய் நீர் விநியோகத் திட்டத்தின் போது பதிக்கப்பட்ட இரும்பினாலான குழாய்கள் துருப்பிடித்து சேதமடைந்துள்ளன.

ஒரு மணித்தியாலம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் குழாய் நீர் விநியோகம் இடம் பெற்று வருகிறது. இதுவே இதுவரை இருந்த நிலை ஆகும்.

தற்போது நிலைமை வேறு. கடந்த மாதம் 13ஆம் திகதி முதல் இந்தக் கிராமத்துக்கான குடி தண்ணீர் விநியோகம் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தக் கிராம மக்கள் அனல் கக்கும் வெயிலில் குடி தண்ணீர் எடுத்து வருவதற்காக மூன்று கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள பெரிய நீலாவணை, பெரிய கல்லாறு போன்ற இடங்களுக்குக் கால்நடையாகச் சென்று வருவதைக் காணமுடிகிறது.

கடந்த காலங்களில் 25 சதவீதமான குடி தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இன்று ஒரு சதவீதம்கூட அது கிடையாது.

இதற்குக் காரணம் துறைநீலாவணைக்கான குடி தண்ணீர் திட்டத்தை பரிபாலிக்கும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை இத்திட்டத்திற்கான நீர் ஏற்றும் இயந்திர பாவனைக்கான மின் கட்டணத்தைக் கிரம மாக மாதா மாதம் செலுத்தாமல் விட்டதுதான்.

இதன் காரணமாக மின் கட்டண நிலுவை ஐந்து இலட்சத்து எழுபத்து ஐயாயிரமாக அதிகரித்துவிட்டது. இதனால் இலங்கை மின்சார சபை கடந்த 13.08.2001ஆம் திகதி முதல் மின் இணைப்பைத் துண்டித்து விட்டது.

இது தொடர்பாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குப் பொறுப்பான அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரான பிரதேச செயலாளர் சி.பாஸ்கரனுடன் இந்தக் கிராமத்தில் உள்ள பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் முறையீடு செய்துள்ளனர்.

இது குறித்து பிரதேச செயலர் கருத்து தெரிவிக்கையில், தனக்குக் கீழ் இயங்கும் பிரதேச சபையிடம் மின் கட்டணத் தொகையை செலுத்தக் கூடியளவுக்கு நிதியீட்டம் இல்லை என்று கூறினார்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் தற்போது நடைபெற்று வரும் யுத்த அனர்த்தங்களினால் கல்லோயாக் குடியேற்றக் கிராமங்களில் தமது விவசாயக் காணிகளைக் கொண்டுள்ள இந்தக் கிராமத்தின் பெரும்பாலான பொதுமக்கள் எல்லைக் கிராம அச்சுறுத்தல்களால் விவசாயம் செய்யமுடியாமல் பரிதவிக்கின்றனர். இந்த நிலையில் அத்தியாவசிய தேவையான குடி தண்ணீர் இன்றி பரிதவிக்கும் நிலையுமா?

கடந்த பொதுத் தேர்தல் காலங்களிலும், அதற்கு முன்னரும் இக்கிராம மக்களின் மொத்தமான வாக்குகளைப் பெறுவதற்கு பலரும் இந்த குடி தண்ணீர் பிரச்சினையை பயன்படுத்தினர். "குடி தண்ணீர் தருவோம்" என்ற பொய்யான வாக்குறுதிகளை அளித்து வாக்குகளைப் பெற்றனர். ஆனால் இன்று தாம் கொடுத்த வாக்குறுதிகளை இவர்கள் மறந்துவிட்டனர்.

இன்றைய சூழ்நிலையில் குடிதண்ணீர் இன்றிப் பரிதவிக்கும் இந்தக் கிராம மக்களின் துயர் துடைக்க மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, கட்சி பேதங்களை மறந்து செயற்பட வேண்டும் என்பதே பொது மக்களின் ஆதங்கம் ஆகும்.

—வளவன்

## தமிழ்ச் செல்வனை ஆயர் சந்தித்தார்

வன்னிப் பகுதிக்குச் சென்ற யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கடந்த ஏழாம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்தார்.

இந்த சந்திப்பில் தமிழ் மக்களின் நிலை குறித்தும், தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும், கத்தோலிக்க ஆயர்களின் நிலைப்பாடு குறித்தும் நீண்டநேரம் உரையாடப்பட்டது.

அக்கராயன், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் உள்ள கத்தோலிக்க இளையோருக்கு திருச்சடங்கு நடத்தும் நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொண்டார்.

## நிஷாமுக்கு நினைவுத்தூபி

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு— அம்பாறை மாவட்ட உளவுத் துறைப் பொறுப்பாளராக இருந்து ஜூன் 15ஆம் திகதி பாவற்கொடிச்சேனையில் கிளைமோர் தாக்குதலினால் கொல்லப்பட்ட லெப்டினட் கேணல் நிஷாம் ஞாபகார்த்தமாக கொக்கட்டிச் சோலை சந்தியில் 25 அடி உயர நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மறைந்த லெப்.கேணல் நிஷாம் மற்றும் லெப்.கேணல் சந்திரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக முனைக்காட்டில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றும் அப்பகுதி மக்களினால் அமைக்கப்பட்டு கடந்த 1[illegible]ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளினால் திறந்து வைக்கப்பட்டது.

## அதிருப்தியாளர் புதிய கட்சி

ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற அதிருப்தியாளர்கள் ஒன்றிணைந்து பொருளாதார விடுதலை முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்திருக்கின்றனர்.

நாடு இன்று பொருளாதார மற்றும் சமூக ரீதியான பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இருக்கிறது. இதனைத் தீர்க்க தெளிவானதும் உறுதியானதுமான ஒரு கொள்கை தேவைப்படுகிறது என்று பொருளாதார விடுதலை முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பில் நடைபெற்ற போது தெரிவிக்கப்பட்டது.

இக்கட்சியின் தவிசாளராக அஜித் குமாரவும் செயலாளராக ஜனித் விடிலகுனவும் தேசிய ஏற்பாட்டாளராக சமரவீரப்திரனவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## காரைநகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் சித்திரத் தேர் அங்குரார்ப்பணம்

காரைநகர், மணற்காடு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய சித்தரத் தேர் அமைக்கும் வேலைகள் செப்டெம்பர் 5ஆம் திகதி புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

37 அடி உயரத்தில் சித்திரத் தேர் அமைக்கும் வேலை அராலியூர் சிற்பக்கலாநிதி சி. அமரசிங்கம் கை வண்ணத்தில் 40 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தேர் நிர்மாணப் பணிகளுக்கு லண்டன் வாழ் அன்பர்களும் காணிக்கை வழங்கியுள்ளார்கள். மேலும் காணிக்கை உதவிகள் கோரப்பட்டிருக்கின்றன. ஆலயத்தின் 2002 ஆம் ஆண்டு மகோற்சவத்தின் போது அம்பாளைப் புதிய தேரில் பவனி வரச் செய்யும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

# இலங்கைக்கு இந்திய இராணுவ உதவி

## புதுடில்லி மாநாட்டில் தீர்மானம்

"இந்தியாவிடம் இலங்கை எதிர்காலத்தில் மாறுபட்ட சூழ்நிலையில் இராணுவ உதவி கோரினால் அதற்கு இந்தியா உடனடியாக இணங்கிவிடக் கூடாது. இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டமொன்றை முதலில் பெற்றுக் கொள்ளவேண்டும். அத்தகைய திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவது குறித்து இந்தியா ஆலோசிக்க வேண்டும்."

—இவ்வாறு ஒருமித்த தீர்மானம் ஒன்றை புதுடில்லியில் கூடிய அரசியல் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் எடுத்திருக்கிறார்கள்.

"இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கிய இலங்கை — இந்திய தொடர்புகள்" என்ற தலைப்பில் இந்த மாநாடு செப்டெம்பர் 1ஆம் 2ஆம் திகதிகளில் நடைபெற்றது.

ஐந்து கட்டங்களாக நடந்த இந்த மாநாட்டில் இலங்கையின் தமிழ்க் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய அரசின் கீழ் இயங்கும் இந்திய சர்வதேச நிலையம் நடத்திய இந்த மாநாட்டின் அழைப்பாளர் மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா ஆவார். இந்திய அமைதி காக்கும் படையின் கிழக்கு மாகாண தளபதியாக விளங்கியவர் இவர்.

இலங்கையில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வி.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் டி.சித்தார்த்தன், ஈ.பி.டி.பி உறுப்பினர் கே.விக்னேஸ்வரன், இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா, இலங்கை விமானப் படை முன்னாள் தளபதி ஹரி குணதிலக ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்திய தரப்பில் முன்னாள் வெளியுறவுச் செயலாளர்களான எஸ்.கே.சிங், ஜே.என்.டிக்சித், ஜீ.பார்த்தசாரதி இந்திய கடற்படையின் வைஸ் அட்மிரல் ஈ.பி.வி தாஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நிலவிய சூழ்நிலை காரணமாக இருதடவைகள் இந்த மாநாடு பின்போடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்திய அமைதிப்படை வெளியேறி 13 வருடங்களுக்குப் பிறகு இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவில் மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டின் சாராம்சமும், தீர்மானமும், இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்று மாநாட்டின் அமைப்பாளர் தெரிவித்தார்.

இலங்கை, இந்தியத் தரப்பில் கலந்து கொண்ட ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டுமாயின் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். வேறு சிலர் இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய இராணுவ ரீதியில் உதவி செய்வது அர்த்தமற்ற செயல் எனச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் இலங்கையில் இருந்து சென்று கலந்து கொண்ட தயான் ஜயதிலக்கா மட்டும் புலிகளை அழித்தொழிக்கவேண்டும் என்றும் அதனைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

புலிகளை அழிக்க இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் இந்தியத் தரப்பில் பேசிய ஜெனரல் கல்கட், டாக்டர் எஸ் சந்திரசேகரன் ஆகியோர் அக்கருத்தைக் கண்டித்தனர். இலங்கைக்கு இந்திய இராணுவ ரீதியான உதவிகளை வழங்கக் கூடாது என்று வலியுறுத்தினர்.

தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் தங்கள் உரைகளின் போது இலங்கையில் இந்தியாவுக்கு ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகளை இந்தியா மறந்துவிட வேண்டும் என்று கோரினர். கடந்த 10 வருடகாலமாக இந்தியா — இலங்கை விடயங்களில் எதுவித முன்முயற்சிகளிலும் ஈடுபடாதிருக்கிறது. இதனைக் கைவிட்டு மீண்டும் இலங்கையில் இந்தியா தன்னாலான முயற்சிகளை செய்ய வேண்டும். இலங்கை இன விவகாரத்தில் தலையிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

# கிளைமோர் குண்டுடன் வந்தவருக்கு புலிகளின் புதுமையான மரண தண்டனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரிவில் உள்ள மகிழடித்தீவு சந்தியில் கடந்த 4ஆம் திகதி பகல் 12 மணிக்கு புலிகளினால் இளைஞர் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

அரசடித்தீவு கிராமத்தை பிறப்பிடமாகவும், மகிழடித் தீவை வதிவிடமாகவும் கொண்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி யோகேஸ்வரன் (32 வயது) என்பவருக்கே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அதுவும் கிளைமோர் குண்டு வெடிக்க வைக்கப்பட்டு புதிய முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரண தண்டனைக்குள்ளானவர் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளை இலக்கு வைத்து, அழிக்கும் பொருட்டு இராணுவத்தினரால் கிளைமோர் குண்டுடன் அனுப்பப்பட்டிருந்தார் என்றும் —

புலிகளின் தளபதிகள் நடமாடும் பாதைகளில் இலக்கு வைத்து அவர் செயல்பட்டார் என்றும் புலிகளினால் குற்றம்சாட்டப்பட்டது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பு மகிழடித்தீவு சந்திக்கு வருகை தந்திருந்தார் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன்.

அங்கு அவர் உரையாற்றுகையில் "தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்கும் வகையில் செயல்பட்டுவரும் சிங்கள இராணுவம் தற்போது கிளைமோர் குண்டுகளைக் கொடுத்து புலிகளின் முக்கிய தளபதிகளை அழிக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் உதவியுடன் இவ்வாறானவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

எதிரிகளை விட துரோகிகள் ஆபத்தானவர்கள். இவர்களுக்கு மரணதண்டனை வழங்குவதைவிட வேறு வழிஇல்லை" என்றார்.

அரசியல் துறையை சேர்ந்த விஜேன் மாஸ்டர் தமதுரையில், மட்டுநகரில் சிங்கள இராணுவத்தினருடன் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ் இளைஞர்களான நிதி, ரவி என்பவர்களே புலிகளை அழிப்பதற்காக இப்படியானவர்களைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறான துரோகிகள் சம்பந்தமாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். எந்தச் சக்தியாலும் எமது விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது என்றார்.

யோகேஸ்வரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டு அவருக்கே பொருத்தப்பட்டு புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

இதுவரை விடுதலைப் புலிகளினால் இப்படியான 40க்கு மேற்பட்ட கிளைமோர் குண்டுகள் கைப்பற்றப்பட்டன என்பதும் ஐந்து பேர் இதுவரை மரணதண்டனை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மரண தண்டனை விதிக்கப்பட முன்னர் யோகேஸ்வரன் கிளைமோர் குண்டுடன் ஊர்வலமாக வாகனத்தில் அழைத்து வரப்பட்டார். அவரது கழுத்தில் கிளைமோர் குண்டு தொங்கவிடப்பட்டிருந்தது. சரியாக 12 மணிக்கு குண்டு வெடிக்க வைக்கப்பட்ட போது உடல் சிதறி அவர் மரணமானார்.

# தேசிய விளையாட்டு விழா

## குருநாகலில் ஆரம்பம்

இலங்கையின் 27ஆவது தேசிய விளையாட்டு விழா செப்டெம்பர் 11 முதல் 15ஆம் திகதி வரை குருநாகலில் நடைபெறுகிறது.

மெய்வல்லுநர் போட்டிகள், பெட்மின்டன், குத்துச்சண்டை, ஜூடோ, கராத்தே, மல்யுத்தம், எல்லே, கால்பந்தாட்டம், பளு தூக்குதல், கபடி, கிரிக்கெட், வலைப்பந்தாட்டம், டேபிள் டெனிஸ், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய 15 விளையாட்டுகள் இவ்விழாவில் இடம்பெறுகின்றன.

தேசிய விளையாட்டு விழா 5 தினங்களுக்கு நடைபெறவுள்ளமை இதுவே முதல் தடவையாகும். கடந்த வருடங்களில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாக்கள் 3 தினங்களில் விளையாட்டு விழா முடிவுற்றன.

8 மைதானங்களில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. இம்மைதானங்களின் அபிவிருத்திக்காக 66 லட்சம் ரூபாவை விளையாட்டுத்துறை அமைச்சு செலவிட்டுள்ளது. போட்டிகளுக்கான மொத்தச் செலவு சுமார் 1.5 கோடிரூபாவாகும்.

4000க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் இதில் பங்குபற்றுகின்றனர். யாழ் மாவட்டத்திலிருந்தும் 28 போட்டியாளர்கள் இதில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

16 வருடங்களின் பின்னர் வடமேல் மாகாணத்தில் இவ்விளையாட்டு விழா நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது நிலவும் வரட்சியைக் கருத்தில் கொண்டு 50 நீர் தாங்கிகள் போட்டிகளின் போது பயன்படுத்தப்படவுள்ளன.

போட்டிகளின் ஆரம்ப வைபவத்தில் பிரதமர் ரத்னசிரி விக்ரமநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

15ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.




அண்மையில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சாம்பியனாகிய இலங்கை அணியினரை கௌரவிக்கும் வைபவம் கடந்த 3ஆம் திகதி ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் லால் டி மெல்லிடமிருந்து அணித்தலைவி தமயந்தி ஜயதிலக்க ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, அமைச்சின் செயலாளர் பி. ராமானுஜம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் மில்டன் அமரசிங்க ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். இலங்கை அணி வீராங்கனைகள், பயிற்றுநர்கள், முகாமையாளர் ஆகியோருக்கு விளையாட்டுத்துறை அமைச்சு தலா 50,000 ரூபா வழங்கியது. 'மொபிடெல்' நிறுவனம் தலா ஒரு செலூலர் தொலைபேசியை வழங்கியது. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தில் இலங்கை அணியினரை இணைத்துக் கொண்டது. அத்துடன் 'அனலின்' பால்மா நிறுவனம் ஒரு தொகுதி பால்மா பக்கட்டுகளை வழங்கியது.

# தலைமைப் பதவியில் தொடர்ந்தும் கங்குலி

சௌரவ் கங்குலி இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக தொடர்ந்தும் கடமையாற்றவுள்ளார்.

சிம்பாப்வே, இலங்கைச் சுற்றுப்பயணங்களில் இந்திய அணி படுதோல்வியுற்றது. இதனால் தலைவர் பதவி கங்குலியிடமிருந்து பறிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் தென்னாபிரிக்கச் சுற்றுலாவுக்கான அணிக்கும் கங்குலியே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


கங்குலி

தேர்வாளர்களினால் ஏகமனதாக இம் முடிவு எடுக்கப்பட்டது என இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜஸ்வந்த லேலே கூறியுள்ளார்.

கங்குலி டெஸ்ட் போட்டிகளில் குறிப்பிடத்தக்க பெறுபேற்றைக் கொண்டுள்ளார். ஒருநாள் சுற்றுப்போட்டிகள் நான்கில் அவர் இந்திய அணியை இறுதிப் போட்டிக்கு வழி நடத்திச் சென்றார்.

இளம் வீரர்கள் அடங்கிய அணியைக் கொண்டு இலங்கையில் திறமையாக அவர் செயற்பட்டார். எனவே தென்னாபிரிக்கா சுற்றுலாவுக்கு தலைமை வகிப்பதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென நாம் தீர்மானித்தோம்.'' இவ்வாறு தேர்வுக் குழுவின் தலைவர் சந்து பரோட் கூறியுள்ளார்.

இதேவேளை காயங்கள் காரணமாக அணியில் இடம்பெறாதிருந்த சச்சின் டெண்டுல்கர், அனில் கும்ப்ளே, லக்ஷ்மன் ஆகியோர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அனில் கும்ப்ளே தோளில் ஏற்பட்ட உபாதை காரணமாக சுமார் ஒருவருட காலமாக அணியில் இடம்பெறாதிருந்தார்.

டெண்டுல்கர் கால் பெருவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இரு மாதங்களாக விளையாடவில்லை. அஷிஸ் நெஹ்ரா, லக்ஷ்மன் ஆகியோர் இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்கா, கென்யா அணிகளுடன் ஒருநாள் சுற்றுப்போட்டியொன்றிலும் தென்னாபிரிக்க அணியுடனான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் இந்திய அணி பங்குபற்றவுள்ளது.

தென்னாபிரிக்கச் சுற்றுலாவுக்கான இந்திய அணி வீரர்கள் விவரம்:

சௌரவ் கங்குலி (தலைவர்), ராகுல் திராவிட், சச்சின் டெண்டுல்கர், சிவ் சுந்தர் தாஸ், வி. லக்ஷ்மன், விரேந்தர் ஸேவாக், யுவராஜ் சிங், தீப் தாஸ் குப்தா (விக்கட் காப்பாளர்), அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், ஜவகல் ஸ்ரீநாத், வெங்கடேஸ் பிரசாத், சஹீர் கான், அஷிஸ் நெஹ்ரா, ரீடிந்தர் சிங் சோதி.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலும் சூரத்தனம்

## இலங்கை அணிக்கு அபார வெற்றி!

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அபாரமான வெற்றியீட்டியுள்ளது. ஆசிய டெஸ்ட் சாம்பியன்ஷிப்தொடரின் ஒரு அங்கமாக இப்போட்டி நடைபெற்றது. செப்டெம்பர் 6ஆம் திகதி இப்போட்டி ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் வீரர்கள் இலங்கை பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள மிகவும் சிரமப்பட்டனர். 90 ஓட்டங்களுக்குள் சகலரும் ஆட்டமிழந்தனர். இலங்கை அணிக்கெதிராக டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெறப்பட்ட ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

முத்தையா முரளிதரன் ஒருநாள் ஆட்டப் பாணியில் 9.4 ஓவர்கள் மட்டுமே பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை வீழ்த்தினார். சமிந்த வாஸ் 3 விக்கட்டுகளை வீழ்த்தினார்.


மார்வன் அத்தபத்து

இலங்கை அணி துடுப்பாட்டத்திலும் சூரத்தனம் புரிந்தது. சனத் ஜயசூரிய 89 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். உபதலைவர் மார்வன் அத்தபத்து 201 ஓட்டங்கள் பெற்று ஓய்வுபெற்றார். அத்த பத்துவின் 5ஆவது டெஸ்ட் இரட்டைச் சதம் இது.

மஹேல ஜயவர்தன 150 ஓட்டங்களுடன் ஓய்வுபெற்றார். ஒரே இன்னிங்ஸில் இருவீரர்கள் தாமாகவே ஆட்டத்தை நிறுத்திக்கொண்டமை 124 வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். இலங்கை அணி 5 விக்கட் இழப்புக்கு 555 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 465 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி.

முதலாவது இன்னிங்ஸை விட இரண்டாவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி சிறப்பாக துடுப்பெடுத்தாடியது. 81 ஓட்டங்களுக்குள் 4 விக்கட்டுகளை அவ்வணி இழந்தது. எனினும் அமினுல் இஸ்லாம், மொஹமட் அஷ்ரஃபுல் இருவரும் இணைந்து 5 விக்கட்டுக்காக 116 ஓட்டங்களைக் குவித்தனர். இஸ்லாம் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அறிமுக வீரரான அஷ்ரஃபுல் இப்போட்டியில் தனது முதலாவது சதத்தைப் பெற்றுக் கொண்டார். தனது 17ஆவது பிறந்த தினத்திற்கு முதல் நாள் இச்சதத்தை அவர் பெற்றார். இதனால் டெஸ்ட் போட்டிகளில் மிக இளம் வயதில் சதம் குவித்தவர் எனும் இரு சாதனைக்கும் உரியவரானார் அஷ்ரஃபுல்.

எனினும் பின்வரிசை வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்தனர். இதனால் 328 ஓட்டங்களோடு பங்களாதேஷின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

முரளிதரன் 98 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் முரளி தனது 350ஆவது டெஸ்ட் விக்கட்டைக் கைப்பற்றினார். இதனால் ஆகக் குறைந்த (66) போட்டிகளில் 350 விக்கட்டுகளை வீழ்த்திய பெருமைக்குரியவரானார் முரளிதரன். இதற்குமுன ரிச்சர்ட் ஹட்லி 69 போட்டிகளில் இச்சாதனையைப் புரிந்திருந்தார்.

அத்துடன் ஒரே இன்னிங்ஸில் 5 விக்கட் வீழ்த்துதலில் (28 தடவை) முரளி 2ஆவது இடம் வகிக்கிறார். ரிச்சர்ட் ஹட்லி 36 தடவை 5 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளார். ஒரு போட்டியில் 10 விக்கட்டுகளை வீழ்த்துதலில் முரளி, டென்னிஸ் லில்லி (7 தடவை) ஆகியோர் 2ஆவது இடம் வகிக்கின்றனர். ரிச்சர்ட் ஹட்லி (9 தடவை) முதலிடத்தை வகிக்கிறார்.

இப்போட்டியில் இலங்கைக்கு இன்னிங்ஸ் மற்றும் 137 ஓட்டங்களால் வெற்றி கிடைத்தது. இலங்கை டெஸ்ட் வரலாற்றில் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையிலான வெற்றி இதுவாகும்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை அணிக்கு 70,000 ரூபாவும் பங்களாதேஷ் அணிக்கு 40,000 ரூபாவும் வழங்கப்பட்டன. சிறப்பாட்டக்காரருக்கான ரூபா 25,000 பரிசை முரளிதரன், அஷ்ரஃபுல் இருவரும் பகிர்ந்து கொண்டனர். இப்பரிசுகள் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினாலேயே வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### டெஸ்ட் போட்டிகளில் கூடுதலான இரட்டைச் சதம் குவித்தோர்

(முறையே இரட்டைச் சதங்கள், இன்னிங்ஸ், வீரரின் பெயர், அணி)

| | | | |
|---|---|---|---|
| 12 | 80 | பிரட்மன் | அவுஸ்திரேலியா |
| 7 | 140 | ஆர்.ஹெம்மண்ட் | இங்கிலாந்து |
| 6 | 189 | ஜாவிட் மியன்டாட் | பாகிஸ்தான் |
| 5 | 84 | மார்வன் அத்தபத்து | இலங்கை |
| 4 | 124 | சஹீர் அப்பாஸ் | பாகிஸ்தான் |
| 4 | 138 | லென் ஹட்டன் | இங்கிலாந்து |
| 4 | 151 | கிரேக் சப்பல் | அவுஸ்திரேலியா |
| 4 | 185 | கோடன் கிறீனிட்ஜ் | மே. இ. தீவுகள் |
| 4 | 214 | சுனில் காவஸ்கர் | இந்தியா |

### அத்தபத்துவின் இரட்டைச் சதங்கள்

| ஓட்டம் | எதிரணி | இடம் | காலம் |
|---|---|---|---|
| 223 | சிம்பாப்வே | கண்டி | 1997-98 |
| 216* | சிம்பாப்வே | புலவாயோ | 1999-00 |
| 207* | பாகிஸ்தான் | கண்டி | 2000-01 |
| 201* | இங்கிலாந்து | காலி | 2001-01 |
| 201* | பங்களாதேஷ் | எஸ்.எஸ்.ஸி | 2001-02 |

# விளையாட்டு உத்தியோகஸ்தர்களும் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

திறமையின் அடிப்படையில் பதவி உயர்வு பெறுவதன் மூலம் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் பெறுவதற்கு விளையாட்டுத்துறை அதிகாரிகளிடமும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதுவரை விளையாட்டுத்துறை அமைச்சு தவிர்ந்த ஏனைய திணைக்களத்தைச் சார்ந்த அதிகாரிகளிடமிருந்தே இவ்விண்ணப்பம் கோரப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி சி. அண்ணாத்துரை அரசாங்க உள்நாட்டு அலுவல்கள், நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருடன் 1999ஆம் ஆண்டில் தொடர்புகொண்டு பேசியிருந்தார்.

அதனையடுத்து உதவிப் பணிப்பாளர், மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கலாக மேற்படி நியமனத்திற்கு விண்ணப்பிக்கக் கூடியவாறு 2001ஆம் ஆண்டிற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஆசிய - உலகப் போட்டி ரத்து!

ஆசிய, உலக அணிகளுக்கிடையில் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டியொன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 18 ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் இப்போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஓவல் நிதியத்தின் சார்பில் 'சர்ரே' பிராந்திய கிரிக்கெட் கழகம் இப்போட்டியை நடத்தவிருந்தது.

சர்ரே கிரிக்கெட் கழகத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட நெருக்கடியே இதற்குக் காரணம். இதனால் போட்டிக்கான நிதி நிலைமையில் நிச்சயமற்ற நிலை தோன்றிவிட்டது. இவ்வாறு கடந்த வாரம் சர்ரே கிரிக்கெட் கழகம் அறிவித்துள்ளது.

''இப்போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ரசிகர்கள் குறிப்பாக ஆசிய சமூகத்தினர் இதனால் மிகவும் ஏமாற்றமடைந்திருப்பார்கள். இதற்காக நாம் மிகவும் வருந்துகிறோம்.'' இவ்வாறு சர்ரே கிரிக்கெட் கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான போல் ஷெல்டன் கூறியுள்ளார்.

# தமிழுக்கும் இடம் வழங்கப்படுமா?




இலங்கை எல்லே சம்மேளனத்தின் தலைமையகத்திலுள்ள பெயர்ப் பலகை இது. சிங்களம், ஆங்கில மொழிகளில் மாத்திரம் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழுக்கு அறவே இடமில்லை. இவ்விடயத்தை எல்லே சம்மேளன அதிகாரியொருவரிடம் 'சுடர் ஒளி' சுட்டிக்காட்டியது. ''ஒப்பந்தக்காரர்களினால் ஏற்பட்ட தவறு இது. உடனடியாகத் தமிழுக்கும் இடமளிக்கப்படும்'' என அவ்வதிகாரி உறுதியளித்தார். வாக்குறுதி நிறைவேற்றப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இதேவேளை இலங்கை எல்லே சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தின் திறப்பு விழா அக்டோபர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 9 ஆம் திகதி இவ்வைபவம் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

# பதவியை காப்பாற்ற ஜெயா நீதிமன்றக் காய்நகர்த்தல்!

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமது அரசியல் பணிகளைச் செய்வதுடன் ஓய்ந்து போய் இருக்கவில்லை. அவர் தமது சிறைத் தண்டனையை எதிர்த்து தாக்கல் செய்த அப்பீல் வழக்கைத் துரிதகதியில் நடத்தி முடிக்க வேண்டியவராக இருக்கிறார்.

அதாவது ஜெயலலிதாவின் அப்பீல் வழக்கு மிகவும் அவசரமாக விசாரிக்கப்பட்டு அவருக்குச் சாதகமான முறையில் தீர்ப்பு அளிக்கப்படவேண்டும்.

ஊழல் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜெயலலிதாவுக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதன் காரணமாக அவர் தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட முடியவில்லை.

ஆயினும் ஜெயலலிதா அதனையே ஒரு அரசியல் துரும்பாகக் கொண்டு பிரசாரம் செய்து ஒரு அனுதாப அலையை ஏற்படுத்தினார். தேர்தலில் அமோகமான வெற்றியைப் பெற்றார்.

தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்ட ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமித்தார் அப்போதைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவி.

தேர்தலில் வெற்றி பெறாத ஒருவருக்கு ஆறு மாத காலக்கெடு வழங்கி அவரை முதலமைச்சராக நியமிக்கலாம் என்ற விதி இருக்கிறது. ஆறு மாதங்களுக்குள் அவர் ஒரு இடைத் தேர்தலில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராகிவிட வேண்டும்.

ஆயினும் இந்த விதி ஜெயலலிதாவுக்குப் பொருந்தாது என்று வாதிட்டார்கள் சிலர். பாத்திமா பீவி கடும் கண்டனங்களுக்கு உள்ளானார். அவரைப் பதவி நீக்கும்படி கோஷம் எழுப்பப்பட்டது. பின்னர் பாத்திமா பீவியே ராஜினாமா செய்யும் நிலை உருவானது.

பாத்திமா பீவி அதிகாரத்தில் இன்று இல்லை. ஆயினும் அவர் விதித்த ஆறு மாத காலக் கெடுவின் பக்க பலத்துடன் ஜெயலலிதா ஆட்சியில் இருக்கிறார். அந்தக் கெடு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நவம்பர் 13 ஆம் திகதியுடன் முடிந்து விடும்.

ஜெயலலிதா தமது சக்தியை முழுமையாகப் பயன்படுத்தி எவ்விதத்திலும் தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கிறார்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? ஜெயலலிதா குற்றவாளியாகக் காணப்பட்ட வழக்கை மேல்நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டும். அவ்வளவுதான். அது மாத்திரம் நடந்து விட்டால் ஜெயலலிதாவை எவருமே அசைக்க முடியாது.

ஜெயலலிதாவுக்கு அதிக வெற்றி வாய்ப்பு உள்ள ஒரு தொகுதியின் சட்ட சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவார். அந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்படும்.

ஜெயலலிதாவின் வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படும். இடைத்தேர்தலில் ஜெயலலிதா வெற்றி பெறுவார். ஐந்து வருட காலத்திற்கு முதலமைச்சராக அவர் நீடிப்பார்.

—இவ்வாறு தமது அரசியல் வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ள திட்டங்கள் தீட்டியிருக்கிறார் ஜெயலலிதா.

கருணாநிதி ஆட்சியில் பல்வேறு வழக்குகளை எதிர்கொண்டார் ஜெயலலிதா. அந்த வழக்குகளின் மனுதாரர் முதலமைச்சர் கருணாநிதி. எதிர் மனுதாரர் ஜெயலலிதா.

இன்றோ ஜெயலலிதாவின் ஆட்சி நடக்கிறது. ஜெயலலிதா சம்பந்தப்பட்ட வழக்குகளின் மனுதாரர் ஜெயலலிதா. எதிர் மனுதாரரும் ஜெயலலிதாவே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தமது வழக்குகளையெல்லாம் துரித கதியில் நடத்தி முடித்துவிட ஜெயலலிதா களத்தில் இறங்கியது ஆச்சரியப்படுவதற்கில்லை.

எல்லா வழக்குகளையும்விட ஜெயலலிதாவுக்கு முக்கியமான வழக்கு அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஊழல் மோசடி வழக்குத்தான். அந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்தார். அவருடைய அப்பீல் வழக்கு கருணாநிதி ஆட்சியில் எட்டு மாதங்களுக்கு மேல் தூக்கத்தில் கிடந்தது.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் அந்த அப்பீல் விசாரணையைத் துரிதப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தார். தமிழ் நாடு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜெயினின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அந்த அப்பீல் வழக்கு வந்தது.

ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்ற திறமையான வழக்கறிஞர்கள், குற்றவாளி ஜெயலலிதாவுக்காக ஆஜரானார்கள். அந்த வழக்கை எடுத்து நடத்தும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்களான முதலமைச்சர் ஜெயலலிதாவின் நண்பர்கள் ஆஜரானார்கள். தலைமை நீதிபதி ஜெயின் நீதியரசர்களுக்குத் தலைமை வகித்தார்.

அந்த அப்பீல் வழக்கு விசாரணை மிகவும் சுவைபட நடந்தது. ஆயினும் பலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தலைமை நீதிபதி ஜெயின் மீது வழக்கறிஞர்கள் கண்டனம் தெரிவித்தனர். அவர் முதலமைச்சருக்கு சார்பானவர் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.


ஜெயலலிதா

ஜெயலலிதா நினைத்தபடி அந்த அப்பீல் விசாரணை நடைபெற்றிருந்தால் அவருடைய அரசியல் நிலை மிகவும் சீரான விதத்தில் ஸ்திரமடைந்திருக்கும். ஆனால் மத்திய அரசுடன் மோதல்நிலையை அவர் வலுப்படுத்திக் கொண்டுவிட்டதால் பெரும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

தலைமை நீதிபதி ஜெயின் கர்நாடக மாநில தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டார். ஆயினும் அவர் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஜெயலலிதாவின் வழக்கை நடத்தினார்.

தலைமை நீதிபதியை உடனடியாக கர்நாடக உயர் நீதிமன்றத்துக்கு செல்லும்படி இந்திய ஜனாதிபதியிடமிருந்து உத்தரவு வந்தது. அதன் பின்னரே நீதிபதி ஜெயின் இடத்தைக் காலி பண்ணினார்.

இதனால் அப்பீல் வழக்கு விசாரணைகள் தடைப்பட்டன. நீதிபதி ஜெயின் முன்னிலையில் நடைபெற்ற விசாரணைகள் ரத்துச் செய்யப்பட்டு புதிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைகள் புதிதாக நடைபெற வேண்டும் என்று வழக்கறிஞர்கள் கோரினர்.

ஜெயலலிதாவின் அப்பீல் வழக்கை விசாரிக்க புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட வேண்டும். நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட வழக்குத் தொடுநர் 2000 பக்கங்கள் கொண்ட அப்பீல் மனுவைப் படித்து முடிப்பதற்கு கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். எனவே எக்காரணம் கொண்டும் அப்பீல் வழக்கு விசாரணைகளை அக்டோபர் 1ஆம் திகதிக்கு முன் ஆரம்பிக்கக் கூடாது.
—இவ்வாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜெயலலிதாவுக்கு இதன் மூலம் பெரும் தலையிடி ஏற்பட்டிருக்கிறது. அப்பீல் வழக்கின் தீர்ப்பு துரித கதியில் வெளியாகி தனக்கு நன்மையைத் தேடித்தரும் என்று அவர் காத்திருக்க முடியாது. ஆறு மாதங்களின் பின் அவர் பதவியில் இருப்பதற்கான சாத்தியம் இல்லை என்றே கூற வேண்டியிருக்கிறது.

ஜெயலலிதா எதிர்பார்த்திருந்த வழக்கு அவருக்கு சாதகமாக அமையவில்லை. அதே நேரத்தில் ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து விரட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் அவருக்குப் பாதகமாகிவிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

"சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவி வகிப்பது தகாது" என்று தீர்ப்பு வழங்கும்படி மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்கு விசாரணைகளின் போது வழக்கறிஞர்களும், நீதியரசர்களும் தெரிவிக்கும் கருத்துக்கள் ஜெயலலிதாவுக்கு தலையிடிகளை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன.

இந்த வழக்குகள் விசாரிக்கப்படும் போது ஜெயலலிதா தரப்பிலும் அவருக்கு எதிர்த்தரப்பிலும் இடைக்காலத் தடை உத்தரவுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வழக்குகளின் பின்னணியைத் தமிழக மக்களின் பெரும்பாலானவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

ஆயினும் நீதித்துறை ஆய்வாளர்கள் ஒரு விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானிக்கிறார்கள்.

அப்பீல் வழக்கைத் தமக்குச் சார்பாக வெகு விரைவில் முடித்து விட ஜெயலலிதா துடிக்கிறார். ஆனால் அதற்கு மாறான விதத்தில் ஒரு பலம் வாய்ந்த சக்தி காரியமாற்றுகிறது.

ஜெயலலிதாவின் பதவியைப் பறிக்கும் வழக்குகளைத் துரிதமாக நடத்திவிட எதிர்த்தரப்பினர் முயலுகின்றனர். அவர்களின் முயற்சிக்கு ஜெயலலிதா தடைபோடுகிறார்.

அரசியல் குத்து வெட்டுகளினால் சீர் கெட்டுப் போன தமிழகம் நீதிமன்றங்களின் சட்டத் தீர்ப்புக்காகக் காத்துக்கிடக்கிறது.

—கதாசி

# புத்தளம் நகர அபிவிருத்தி ஒப்பந்தம் கைச்சாத்து

சுமார் 250 மில்லியன் ரூபா செலவில் புத்தளம் நகரத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

வடமேல் மாகாண முதல்வரின் காரியாலயத்தில் இதற்கான வைபவம் இடம் பெற்றது. புத்தளம் நகரசபை தலைவர் என்.எம். நஸ்மி, நகரசபைத் செயலாளர் எம்.ஏ. மல்லத்துகொட, மாகாண பொறியியலாளர் பீ.பாலசூரியா, மாகாண அபிவிருத்திப் பொறுப்பாளர் இ.ஏ.சோமரத்தினா ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ள மேற்படி நிதியில் 20 சத வீதம் கடனாகவும் 80 சத வீதம் மானியமாகவும் பெறப்படும்.

சுமார் 4 வருட கால எல்லைக்குள் அபிவிருத்திப் பணிகள் யாவும் நிறைவு பெறும்.

பொது மலசல கூடங்கள், பஸ் நிலைய புனரமைப்பு, சாக்கடைக் கால்வாய் அபிவிருத்தி, மலேரியா கால்வாய் புனரமைப்பு என்பன முதற் கட்டப் பணிகளாக நடைமுறைப்படுத்தப்படும்.

நகரிலுள்ள நவீன சந்தைக் கட்டடம், பொதுச் சந்தைக் கட்டடம், மீன் சந்தை, பஸ் நிலையம் போன்ற இடங்களில் தலா இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் நவீன மலசல கூடங்கள் நிறுவப்படும்.

சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கால்வாய் புனரமைப்புச் செய்யப்பட்டுகழிவு நீர் கடலுக்குக் கொண்டு செல்லப்படும்.

நூர்நகர் கால்வாய் போல்ஸ்ரோட் கால்வாய், மன்னார் வீதி கால்வாய் ஆகியன அகலமாக்கப்படும் ஏனைய சாக்கடைக் கால்வாய்களும் அபிவிருத்தி செய்யப்படும்.

பஸ் நிலையம் முற்றிலும் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் கடைத் தொகுதியொன்று ஏற்படுத்தப்படும்.

மனிதக் கழிவை சுத்தம் செய்யும் இயந்திர மொன்றும் சுமார் 90 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படும் இப்புனரமைப்புத் திட்டம் எதிர்வரும் 2005ம் வருடம் பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சமயம் வடமேல் மாகாண முதல்வர் எஸ்.பீ. நாவின்ன மற்றும் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

அபிவிருத்திப் பணிகள் இம் மாதம் ஆரம்பித்து வைக்கப்படும் என நகரபிதா எம்.என்.எம். நஸ்மி தெரிவித்தார்.

— ஏ.எஸ்.புல்கி

# புத்தளத்தில் மேலும் ஒரு தமிழ் பாடசாலை

புத்தளம் கல்வி வலயத்தில் மேலும் ஒரு தமிழ் மொழி மூலப் பாடசாலை சேர்க்கப்பட்டிருக்கிறது.

புத்தளம் கல்வி வலயத்தில் பாடசாலைகள் மொத்தம் 187. இவற்றில் 57 தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் ஆகும்.

மதுரங்குளி பகுதியிலுள்ள சிறிமாபுரத்தில் புதிய தமிழ் மொழி மூல ஆரம்பப் பாடசாலை ஒன்று கடந்த 17.08.2001 திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் தற்போது 58 ஆகும்.

மேற்படி பாடசாலை அதிபராக எச்.யூ.எம்.எஹியா பதவிப் பொறுப்பை ஏற்றார். 23 பிள்ளைகள் அன்றைய தினம் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

பிரதி விவசாய அமைச்சர் உ.எம்.தஸநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக வடமேல் மாகாண அமைச்சர் எம்.எச்.எம்.நவவி, வடமேல் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.மஹ்ரூப் மரைக்கார், புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் பீ.ஏ. அசோகா ஜயசிங்ஹ, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜவாத் மரைக்கார், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் என்.எம்.ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புத்தளம் அகதிகளுக்கு இலவச சட்ட உதவிகள்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் இலவச சட்ட உதவி மன்றமும் ஒன்றிணைந்து புத்தளம் மாவட்டத்திற்கான அலுவலகத்தை நிறுவியுள்ளன.

மஸ்ஜித் வீதி 10ஆம் இலக்க கட்டடத்தில் வைபவ ரீதியாக அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இடம் பெயர்ந்தவர்களுக்கான சட்ட உதவிகள், சட்ட ஆலோசனைகள் இலவசமாக இந்த நிலையத்தில் வழங்கப்படும்.

இலவச சட்ட உதவி மன்றத்தின் புத்தளம் மாவட்ட இணைப்பதிகாரி சட்டத்தரணி ஏ.எம்.கமனுதீன் தலைமையில் விழா இடம் பெற்றது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதம தகவல் தொடர்பு அதிகாரி மைக்கல் ஜே.பெஸிஸிஸ்டக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேற்படி வைபவத்தில் சங்கத்தின் உதவித் தலைவர் எஸ்.எஸ்.விஜயரத்தினம், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ். பெனரகம, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக உதவிப் பாதுகாப்பு துறையைச் சேர்ந்த திருமதி சாவித்திரி வீரகொட மற்றும் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவின் பின்னர் குழுவினர் மன்னார் வீதி ரஹ்மத்நகர் மீள் குடியேற்றக் கிராமத்திற்கும், சாஹிரா இடம் பெயர்ந்தவர்கள் நலன்புரி நிலையத்திற்கும் விஜயம் செய்தனர். இடம் பெயர்ந்தவர்களுடன் சட்ட உதவி, சட்ட ஆலோசனை குறித்த கலந்துரையாடல்களிலும் பங்கு கொண்டனர்.

# மௌலானா ஆஸாத் கட்டுரைப் போட்டி

கலாசார தொடர்புகளுக்கான இந்திய மன்றம் மௌலானா ஆஸாத் கட்டுரைப் போட்டியை மூன்று மொழிகளில் நடத்துகிறது. சார்க் நாடுகளில் வாழும் 30 வயதுக்குக் கீழ்ப்பட்ட போட்டியாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

இந்தி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் "சர்வதேச அமைதியும் புரிந்துணர்வும்" என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெறுகிறது. போட்டியாளர்கள் இந்திய கலாசார நிலையத்தினூடாகப் பிரதிகளை அனுப்ப வசதி உண்டு. முடிவு திகதி ஒக்டோபர் 12ஆம் திகதி ஆகும்.

# தலையில் சுமை நெஞ்சில் சோகம் வாழ்க்கையில் விரக்தி



வன்னிக்குப் போக அழும் சிறுவன்



எப்போது இந்த சுமை தோளைவிட்டு இறங்கும் என ஏங்கியவாறு செல்லும் பொதுமகன்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பகுதிக்கு வெளியே உள்ள மக்கள் உள்ளே செல்வதற்கும் வன்னிப் பகுதியில் உள்ள மக்கள் வெளியே வருவதற்கும் இப்போது ஓரளவு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் அது சம்பந்தமான நடைமுறைகளும் நிபந்தனைகளும் சுமையானவை.



வன்னிப்பகுதியில் இருந்து வந்த வயோதிபர் வவுனியா செல்வதற்காக வதிவிட அனுமதி பத்திரம் பெறும் முயற்சியில்

பாஸ் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. பதினைந்து விதமான பாஸ்கள் உள்ளன. இப்பாஸ்களை வழங்க பொலிஸ், இராணுவ நிலையங்கள் இருபது இடங்களில் இயங்கி வருகின்றன.

வவுனியாவில் இறந்த பிணத்திற்குக் கூடப் பாஸ் இருந்தால்தான் அந்தப் பிணத்தை எரிக்கவோ, புதைக்கவோ முடியும்.

வவுனியாவில் இருந்து வன்னிக்குப் போவது மட்டுமல்ல வன்னியில் இருந்து வவுனியா வருவதற்கும் 'பாஸ்' முறைதான். விடுதலைப்புலிகளின் பாஸ் அலுவலகங்களில் பாஸ் பெற்றுத்தான் வவுனியா பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்வதற்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும்? வன்னி செல்ல விரும்புபவர் தன்னிடமுள்ள வதிவிட பாஸின் போட்டோ பிரதிகளுடன் வவுனியா செயலக புனருத்தாரணக் கிளைக்குச் சென்று விண்ணப்பப் படிவம் பெற வேண்டும். அதை நிரப்பிக் கிராம சேவை அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கொடுக்க வேண்டும். அவர்கள் உறுதிப் படுத்தித் தந்ததும் அந்த விண்ணப்பப் படிவத்தினை மூன்று போட்டோ பிரதிகளுடன் வவுனியா செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன் பின் வவுனியா கண்டி வீதியில் உள்ள றம்மியா ஹவுஸ் முகாமில் அனுமதி பெற வேண்டும். அதன் பின்னர் தான் செல்லலாம்.

வாரத்தில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் வன்னிப்பகுதிக்கு நாள் ஒன்றுக்கு 700 பயணிகள் என்ற வகையில் வாரத்தில் மொத்தம் 1400 பேர் அனுப்பப்படுகின்றனர்.

வன்னி செல்லும் பயணிகளுக்கு வவுனியா அரசாங்க அதிபர் பல அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

பயணிகள் தடை விதிக்கப்பட்ட பொருட்கள் எதுவும் கொண்டு செல்ல முடியாது. தடை செய்யப்படாத பொருட்களையும், 40 கிலோ மாத்திரமே கொண்டு செல்லலாம்.

பயணிகள் அனைவரும் வவுனியா செயலக வளவில் இருந்து பஸ்ஸில் பிரமணாளங் குளம் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

வயோதிபர்கள், குழந்தைகள், நோயாளர்கள் என்றில்லாமல் அங்கு வன்னி செல்லும் பயணிகள் அனைவரும் வரிசையாக நிற்க வேண்டும். அவர்களின் பொருட்கள் அனைத்தும் அக்குவேறு ஆணிவேறாகச் சோதனையிடப்படும்.

பயணிகள் தாம் கொண்டு செல்லும் பொருட்கள் அனைத்தையும் தாமே தூக்கிச் செல்ல வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான வன்னிப் பகுதியிலிருந்து வரும் பயணிகள் 700 பேரை முதலில் இராணுவத்தினர் உள்வாங்குவர். இவர்கள் அனைவருக்கும் பாஸ் வழங்கப்பட்ட பின்னர் புலன் விசாரணைக்காக அப்பகுதியில் அமைக்கப்பட்ட கூட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு விசாரணை நடத்தப்படும்.



பிரமணாளங்குளம் சோதனைச்சாவடியில் பிரயாணிகள் குவிந்திருக்கும் காட்சி

பார்வைக்கு லட்சணமான பல இளம் பெண்கள் மேலதிக விசாரணைக்கென்று வவுனியா குட்செட் வீதியிலுள்ள கோழிக்கூடு முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அப்படி அழைத்துச் செல்லப்படுபவர்களில் பலர் படையினர் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். பலர் வெட்கத்துக்கு அஞ்சி வேதனையை நெஞ்சுக்குள் அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்து விடுகின்றனர்.

சமீபத்தில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட ஓர் இளம் பெண் வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் வவுனியா வந்து வன்னிக்குத் திரும்புவதற்குச் செல்லும் பயணிகளைப் படையினர் சோதனை செய்ய நேரமில்லை என்று கூறி த் திருப்பி அனுப்பிவிடுவதும் உண்டு. இதனால் அன்று பயணம் செய்ய வேண்டிய பயணிகள் திரும்பிச் சென்று அடுத்த 'முறை' வரும்வரை காத்திருக்க வேண்டும். இது தொடர் கதை.



இராணுவ சோதனை முடிந்து தலைச் சுமையுடன் செல்லும் பயணிகள்

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வருபவர்களில் பலர் பண்டிவிரிச்சான் பகுதியில் காத்திருக்கின்றனர். அங்கேபோதியளவு உணவு கிடைப்பதில்லை. மலசல கூடவசதி இல்லை. தங்குமிடம் கூடக் கிடையாது. இப்படிப் பல கஷ்டங்கள்.

ஒரே நாடு என்று மார்தட்டிக் கூறுகிறார்கள். அந்தநாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல உலகில் வேறு எங்கு இத்தனை கெடுபிடிகள் தொல்லைகள், துயரங்கள்?

— மகாமுனி


JAYALALITHANGHI JEWELLERS
இவள் தேவதையோ என வியக்க வைக்கும் தங்க நகைகளை நவீன டிசைன்களில் நேர்த்தியாக செய்து கொள்ள விஜயம் செய்யுங்கள்!
No. 225 Galle Road, Colombo -04. Tel : 595144

Jayalalitha Jewellery Mart
அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள
ஜெயலலிதா ஜுவலரி மார்ட்
இல. 65
செட்டியார் தெரு, கொழும்பு - 11 தொ.பே: 422548

ஜெயலலிதாங்கி ஜுவலர்ஸ்
மங்கையரின் அங்கமெல்லாம் அசல் 22 கரட் தங்கத்தால் ஜொலித்திட இன்றே விஜயம் செய்யுங்கள்
No. 225 காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு – 04. தொ.பே.595144

UTHAYAN VIDEO
ஒச்சாட் திருமண மண்டபம்
நவீன வசதிகளுடன் கூடிய நான்கு மண்டபங்கள்.
Hall No 1. 100 பேர் தொடக்கம் 300 பேர் வரை
Hall No 2. 50 பேர் தொடக்கம் 135 பேர் வரை
Hall No 3. 100 பேர் தொடக்கம் 300 பேர் வரை
7 வது மாடியில் 100 பேர் தொடக்கம் 400 பேர் வரை
உங்கள் பதிவுகளுக்கு :
ஒச்சாட் கட்டிடம்
OFFICE: 074-514298
HOT LINE: 077-355297

மிருனாஸ் சுப்பர்
வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிறீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
MIRUNA'S SUPER
342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@sri.lk

SINDARLLA BEAUTY FASHION
மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் வகைகள் சிறந்த முறையில் நிறைந்த திருப்தியுடன் செய்து தரப்படும்.
கேக் வகைகள், மணப்பெண் அலங்காரம் என்பவற்றுக்கான பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புகளுக்கும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
Mrs.Sreetharan
7/4 Ground Floor, Orchard Building, Galle Road, Colombo - 06. T.P: 074-514298
Hot Line: 077-316453


இப்பத்திரிகை கொழும்பு -06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 செப்டெம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.